# LST REVIEW

தொகுப்பு 30 | வெளியீடு 348 | 2021 நவம்பர்
www.lstlanka.org

LAW & SOCIETY TRUST

# விசேட பொருளாதார வலயங்களும் கொழும்பு துறைமுக நகரமும்-

## இலங்கையின் புரையோடிப்போயுள்ள அபிவிருத்தி நெருக்கடிகளுக்கு இவைதான் நிவாரணிகளா?

**LST Review**

**தொகுப்பு 30 | வெளியீடு 348 | 2021 நவம்பர்**

**விசேட பொருளாதார வலயங்களும் கொழும்பு துறைமுக நகரமும்**

## சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை

முதலில் வெளியிடப்பட்டது : **2021 நவம்பர் மாதம்**

ISSN : 2820-2112

---

### கட்டுரை பற்றிய சுருக்கமான விளக்கங்கள்

### Dr. Kehinde Olaoye மற்றும் Dr. Dini Sejko Kehinde ஆகியோரின் கட்டுரைகள்

இந்தக் கட்டுரையில், தேசிய அபிவிருத்திக்கான சட்டபூர்வமான மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புக்களாக விசேட பொருளாதார வலயங்கள் பற்றிய செறிவான மற்றும் ஒப்பீட்டுரீதியான மீளாய்வொன்றினை ஆசிரியர்கள் வழங்குகின்றனர். விசேட பொருளாதார வலயங்கள் பற்றிய மிகவும் சமநிலையான மற்றும் நடுநிலையான கண்ணோட்டமொன்றினை வழங்குவதற்காக இக்கட்டுரை விசேட பொருளாதார வலயங்கள் பற்றிய வெற்றிக் கதைகளைத் திறனாய்வுடன் பகுப்பாய்வு செய்வதுடன் அதன் தோல்விகளையும் அத்துடன் ஊடகங்களின் விமர்சனங்களையும் பரிசோதிக்கின்றது.

### பேராசிரியர் குணசேகரவின் கட்டுரை

கொழும்புத் துறைமுக நகரத்தின் முன்னெடுப்பினை, இலங்கையில் ஆளுகை நிறுவனங்கள் மற்றும் செயன்முறைகள் மீதான அதன் தாக்கத்தின் அடிப்படையிலும் இலங்கையின் எதிர்காலத்தின் மீதான அதன் தாக்கத்தின் அடிப்படையிலும் கட்டுரை ஆசிரியரான பேராசிரியர் சாவித்ரி குணசேகர ஆராய்கின்றார். இவரின் பகுப்பாய்வு, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டமூலத்தினையும் சட்டமூலத்தின் அரசியலமைப்புடனான பொருந்துந்தன்மையினை உயர் நீதிமன்றத்தில் ஆட்சேபிக்கும் பொது நலன் வழக்காடலையும் உள்ளடக்குவதுடன் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புப் பற்றிய பகுப்பாய்வொன்றினையும் வழங்குகின்றது.

---

இலங்கையில் அச்சிடப்பட்டது

## உள்ளடக்கம

### ஆசிரியர் தலையங்கம்


விசேட பொருளாதார வலயங்களும் கொழும்பு துறைமுக நகரமும் - இலங்கையின் புரையோடிப்போயுள்ள அபிவிருத்தி நெருக்கடிகளுக்கு இவைதான் நிவாரணிகளா? 1


### கட்டுரைகள்


விசேட பொருளாதார வலயங்கள் (Special Economic Zones - SEZs) பற்றிய ஒப்பீட்டு மீளாய்வு: புனைவுகளையும் சர்ச்சைகளையும் தெளிவுபடுத்தல் 8

**கெஹிந்த ஒலயே மற்றும் டினி செஜ்கோ**

துறைமுக நகரம், ஆளுகை மற்றும் மக்கள் 20

**பேராசிரியர் சாவித்ரி குணசேகர**


# விசேட பொருளாதார வலயங்களும் கொழும்பு துறைமுக நகரமும்

## இலங்கையின் புரையோடிப்போயுள்ள அபிவிருத்தி நெருக்கடிகளுக்கு இவைதான் நிவாரணிகளா?

விசேட பொருளாதார வலயங்கள்தான் (SEZ) வளர்ச்சியின் இயந்திரம் எனும் நம்பிக்கை கொள்கை வகுப்போர் மத்தியில் காணப்பட்டதன் அடிப்படையிலேயே விசேட பொருளாதார வலயங்கள், குறிப்பாக ஆசியா, ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கில் பல்கிப் பெருக்கப்பட்டன. இலங்கையிலும், வளர்ச்சியின் இயந்திரம் என்ற அடிப்படையில் விசேட பொருளாதார வலயங்கள் மீதும் "பெருநகரக்" கருத்தியல் மீதும் காணப்படும் ஈர்ப்பு, தற்போதுள்ள அரசாங்கத்தின் மனப்போக்கிலும் இதற்கு முன்பிருந்த அரசாங்கத்தின் மனப்போக்கிலும் ஊடுருவியுள்ளது. 1980களில், இலங்கையின் எதிர்காலப் பொருளாதார வளர்ச்சிக்கான விதைகளாகச் சுதந்திர வர்த்தக வலயங்கள் முன்வைக்கப்பட்டன. மூன்று தசாப்தங்களின் பின்னர், இந்தப் பற்றில் இருந்தே கொழும்பு துறைமுக நகரக் கருத்திட்டமும் பிறந்துள்ளது. வருகின்ற வருடங்களில் இதே அடிப்படையிலான மேலும் பல கருத்திட்டங்கள் உருவாகுவதைப் பார்ப்பதற்கு இலங்கையிலுள்ள நாம் எம்மைத் திடப்படுத்திக்கொள்ளவேண்டும். இதே போன்ற வலயங்கள் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பாதைகளில் உருவாவதற்கு சீனாவினால் இணை அனுசரணை வழங்கப்படும் பெல்ட் அன்ட ரோட் (Belt And Road) முன்னெடுப்பு மற்றும் ஸ்டிரிங் ஒப் பேர்ள்ஸ் முன்னெடுப்பு ஆகியவை காரணமாக அமையலாம்.

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை (LST) மீளாய்வின் இந்தப் பதிப்பு விசேட பொருளாதார வலயங்களிலும் கொழும்பு துறைமுக நகரத்திலும் கவனம் குவிக்கின்றது. இலங்கையின் புரையோடிப்போயுள்ள அபிவிருத்தி நெருக்கடிகளுக்கு இவைதான் நிவாரணிகளா என வினாத் தொடுக்கும் அதேவேளை,

இலங்கையினால் ஏற்று இணங்கப்பட்டிருக்கும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் என்னும் சட்டகத்தினுள் இவ்வாறான முன்னெடுப்புக்கள் எவ்வாறு பொருந்துகின்றன என்ற கேள்வியும் இங்கே எழுகின்றது. இந்த மீளாய்வு, துறைமுக நகர முன்னெடுப்பின் யதார்த்தபூர்வமான மதிப்பீடொன்றை ஏற்படுத்துவதற்கும், தொடர்ச்சியான அடிப்படையில் அதன் இயக்கங்களைக் கண்காணிப்பதற்காகக் கடப்பாடொன்றை ஏற்படுத்துவதற்கும் சமூகங்களிடையே பரந்த விவாதமொன்றிற்கு வழியேற்படுத்துவதுடன் இலங்கையின் மனித உரிமைகள் கடப்பாடுகள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் சட்டகத்தினுள் இது அமுலாக்கப்படுவதை உறுதிப்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

விசேட பொருளாதார வலயங்கள் பற்றிய ஓர் ஒப்பீட்டு மீளாய்வினை வழங்குவதற்காக ஹொங்கொங் சிட்டி பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்களான கல்வியியலாளர்கள் Kehinde Olaoye மற்றும் Dini Sejko ஆகியோரைச் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை (LST) மீளாய்வு அழைத்திருந்தது. குவான்டொங் கரையோர மாகாணம் சீனாவின் மிகப்பெரும் தொழில்நுட்ப நகரமாக நிலைமாறியமை சீனாவில் விசேட பொருளாதார வலயங்கள் பற்றிய ஓர் அனுபவத்தினைப் பேசுகின்றது. அத்துடன் உருவாகி வரும் அபிவிருத்தி முன்னுதாரணமாகக் கலந்துரையாடப்படும் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் ஏனைய பகுதிகளிலும் ஆபிரிக்காவிலும் உள்ள விசேட பொருளாதார வலயங்களில் ஒரு பங்காளர் என்ற ரீதியில் சீனாவின் சொந்த அனுபவத்தினையும் பேசுகின்றது.

இலங்கையின் ஆளுகை மற்றும் எதிர்காலம் என்ற சூழமைவில் கொழும்பு துறைமுக நகர முன்னெடுப்புப் பற்றிச் சிந்தித்துக் கருத்துரைப்பதற்காகச் சட்டத்துறை வாழ்நாள் பேராசிரியரான, பேராசிரியர் குணசேகரவினையும் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை (LST) மீளாய்வு அழைத்திருந்தது. கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டமூலம் பற்றியும் சட்டமூலத்தின் அரசியலமைப்புடனான பொருந்துந்தன்மையை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட பொதுநல வழக்காடல் பற்றியும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புப் பற்றியும் பேராசிரியர் குணசேகர பகுப்பாய்வு செய்கின்றார். அரசியலமைப்புக்குச் சட்டமூலம் விடுக்கும் சவால்களின் கண்ணோட்டத்தில் சட்டமூலம் பற்றிக் கருத்துரைக்கும் அவர், நீதிமன்றத்தினால் முன்மொழியப்பட்ட மாற்றங்களை அவசர அவசரமாகக் கூட்டிணைத்து நிறைவேற்றப்பட்டதும் ஆனால், நீதிமன்றத்தினால் இன்னும் பூரணமாகக் கருத்தில் கொள்ளப்பட்டுத் தீர்க்கப்படாமல், நீதிமன்றத்தினாலேயே சாதுர்யமாகத் தவிர்க்கப்பட்ட பிரச்சினைகளைக் கொண்டிருக்கக்கூடியதுமான சட்டத்தினால் எதிர்காலத்தில் எழக்கூடிய அரசியலமைப்பு ரீதியான பிரச்சினைகளின் சாத்தியம் பற்றியும் குறிப்பிடுகின்றார். சட்டமூலங்கள் அரசியலமைப்புடன் பொருந்துகின்றனவா என்பதை அறிவதற்கு அவற்றை மீளாய்வு செய்வதற்கான வரையறுக்கப்பட்ட மற்றும் திருப்தியற்ற செயன்முறைக்கான ஏற்பாடுகளையே இலங்கையின் அரசியலமைப்பு வழங்குகின்றது. மேலும், சட்டமூலம் ஒன்று அரசியலமைப்புடன் முரண்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்குச் சட்டமூலத்திற்கு மேற்கொள்ளப்படக்கூடிய திருத்தங்கள் பற்றி நீதிமன்றங்கள் ஆலோசனை வழங்கக்கூடிய செயன்முறையும் இதேபோன்ற ஒரு திருப்தியற்ற செயன்முறையாகவே அமைந்துள்ளது.[1] உயர் நீதிமன்றத்தின் ஆலோசனைகளுக்கு அமைவாகத் திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும் எனப் பாராளுமன்றம் தேவைப்படுத்தப்படுகின்றது. ஆனால், திருத்தப்பட்ட சட்டமூலம் இறுதி மீளாய்வுக்காக நீதிமன்றத்திடம் மீண்டும் சமர்ப்பிக்கப்படுவதில்லை. பாராளுமன்ற விவாதங்களின்போது எழுப்பப்படக்கூடிய விடயங்களைத் தவிர, திருத்தப்பட்ட சட்டமூலத்தினை மீளாய்வுசெய்து மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் உண்மையிலேயே அரசியலமைப்புடன் ஒத்திசைகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்குத் திருப்தியான பொறிமுறை இல்லை. பாராளுமன்றக் கூட்ட நடவடிக்கைகள் தீவிர பக்கச்சார்புமிக்க செயன்முறையாக மாறியுள்ளன. இருதரப்புச் சட்டவாக்க மீளாய்வு இடம்பெற்றுத் தேசிய நலன்களுடன் இயைபுறும் சட்டவாக்கம் நிறைவேற்றப்படும் இடமாகப் பாராளுமன்றம் இருக்கவேண்டும் எனச் சிலர் எதிர்பார்க்கின்றனர்.

விசேட பொருளாதார வலயங்கள் பற்றிய Kehinde Olaoye மற்றும் Dini Sejko ஆகியோரின் ஒப்பீட்டு ஆய்வில் இந்த வலயங்கள் தொடர்பாகக் காணப்படும் அச்சங்களில் சிலவற்றினை அவர்கள் அடையாளம் கண்டு அவை பற்றிப் பேசுவதுடன் இவ்வாறான வலயங்கள் தொடர்பாகக் காணப்படும் புனைவுகள் மற்றும் சர்ச்சைகளையும் தெளிவுபடுத்த நாடுகின்றனர். சவால்களை ஏற்படுத்துவது கருத்தியலோ அல்லது அமைப்போ அல்ல, ஆனால் அவற்றினை

இயலச்செய்யும் சட்டவாக்கமும் அவை அமைந்துள்ள சூழமைவுமே என இவர்கள் நம்பிக்கையூட்டும் விதத்தில் வாதிடுகின்றனர். அற்பமானவை எனக் கருதி அலட்சியப்படுத்தப்படும் விடயங்களே ஆபத்தானவையாக மாறலாம் என்ற கருத்தினையே இவர்கள் வெளிப்படுத்துகின்றனர்.

நிலைமாற்றப்பட்ட வானளாவிய கட்டுமானங்களே துடிப்புமிக்க பொருளாதார மையத்தின் அடையாளம் எனக் கருதும் எத்தனிப்பொன்று காணப்படுகின்றது. ஆயினும், பொருளாதார வளர்ச்சியினைத் தூ ண்டுவதற்கு விசேட பொருளாதார வலயங்கள் ஒன்றும் மந்திர மாத்திரைகள் அல்ல என Olaoyeவும் Sejkoவும் குறிப்பிடுகின்றனர். விசேட பொருளாதார வலயங்கள் அவற்றின் குறிக்கோள்களை அடைவதற்கு, முதலீட்டாளர்களைக் கவரக்கூடிய உறுதியும் இயலச்செய்யும் தன்மையும் கொண்ட சட்டவாக்கமும் உடன்படிக்கைகளும் அவற்றுக்குத் தேவைப்படுகின்றன. ஆனால் விசேட பொருளாதார வலயங்களின் வெற்றிக்கு மிகவும் இன்றியமையாதது சிறந்த திட்டமிடலும் நல்லாட்சியுமே ஆகும். இலங்கையில் வியாபாரச் சமுதாய உறுப்பினர்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களிலும் இது வலுப்படுத்தப்பட்டது. 2021 மேமாதம் 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் நடைபெற்ற கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டமூலம் தொடர்பிலான பாராளுமன்ற விவாதங்களின் போது சிந்தனைக் கருவூல அமைப்பான *அட்வொகாடா* ஒரு கருத்துரையை நடத்தியது. தமக்கு ஆசை காட்டப்பட்ட வரி ஊக்குவிப்புகள் தங்களைப் பெரிதும் கவரவில்லை எனவும் விசேட பொருளாதார வலயம் தெளிவானதும் ஒத்திசைவானதுமான ஓர் ஒழுங்குபடுத்தல் சட்டகத்தினால் ஆளுகை செய்யப்படுகின்றதா என்பதிலேயே தாம் அதிக கவனம் குவித்துள்ளதாகவும் பல வியாபாரத் தலைவர்கள் கருத்துரைத்தனர். வரிச் சலுகைகளை விடச் சிறந்த பொருளாதார ஆளுகையே முதலீட்டாளர்களை அதிகம் கவரக்கூடியது என்பதே இதில் உள்ள அடிப்படை உண்மையாகும். கவனத்தினை ஈர்த்த பல 'மோசடிகளின்' பின்புலத்தில் நோக்குகையில் (பிரபலமான பிணை முறி மோசடி தொடக்கம் மிக அண்மைய சீனி மற்றும் வெள்ளைப்பூண்டு மோசடி வரை),சிறந்த பொருளாதார ஆளுகைக்கான களங்கமற்ற நன்மதிப்பு மற்றும் கடப்பாட்டினைப் பேணுவதில் கவனம் குவிக்கும் ஒரு நாடு என இலங்கை அதன் நற்சான்றினை இன்னும் நிரூபிக்கவேண்டியுள்ளது.

விசேட பொருளாதார வலயங்களை *வளர்ச்சிக்கான இயந்திரங்களாகக்* கருதுவதிலிருந்து அவற்றினை *வளர்ச்சிக்கான ஊக்கியாகக்* கருதிக் குழப்பிக்கொள்ளும் அபாயம் உள்ளது. விசேட பொருளாதார வலயங்கள் வளர்ச்சிக்கான இயந்திரமாகக் கருதப்படும்போது, ஏனைய துறைகளையும் பரப்புக்களையும் விலக்கிவைத்து அனைத்து முதலீடுகளும் விசேட பொருளாதார வலயங்களில் மேற்கொள்ளப்படும். இது பொருளாதார மற்றும் சமூகத் திரிபுபடுத்தல்களுக்கு இட்டுச்செல்வதால் விசேட பொருளாதார வலயங்கள் ஒட்டுமொத்தப் பிராணவாயுவினையும் உறிஞ்சிக் குடித்து நாட்டின் ஏனைய பிராந்தியங்கள் புறக்கணிக்கப்படும் நிலை உருவாகும். இது சிறிய முதலீட்டுப் பாதீடுகளைக் கொண்ட தேசிய முதலீட்டாளர்களை விளிம்புநிலைக்குத் தள்ளிவிடும் என்பது திட்டவட்டமான உண்மையாகும். இவர்கள் தற்போது அமுலில் உள்ள பல வரிகளின் நீக்கத்தினாலும் அதிநவீன உட்கட்டமைப்பு வசதிகளினாலும் முன்விருப்புக்குரியவரிகளினாலும் பிணக்குகளைத் துரிதமாகத் தீர்ப்பதை உறுதிப்படுத்துவதற்கான விசேட பொறிமுறைகளினாலும் பயன் பெறமாட்டார்கள்.

வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்காக (FDI) விசேட பொருளாதார வலயங்களைக் கவர்ச்சிமிக்கவையாக ஆக்குதல் என்ற ஒற்றை மனப்போக்குத் திடசங்கற்பம், உள்நாட்டு முதலீட்டாளர்களுக்குப் பிரதிகூலமான மற்றும் அவர்களை உள்ளடக்காது விட்டுச் செல்கின்ற சமாந்தரமான மற்றும் விதிவிலக்கான ஆளுகை விதிச் சட்டகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் சட்டகங்கள் ஆகியவற்றின் உருவாக்கத்திற்கு இட்டுச்சென்றுள்ளதுடன் விசேட பொருளாதார வலயங்களில் முதலீடுகளைக் கவர்வதற்கு வெளியே இருக்கும் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் துறைகளிலும் முதலீடு செய்யாது விட்டுச் செல்வதற்கும் வழிவகுத்துள்ளது. விசேட பொருளாதார வலயங்களின் சவால்களைத் தீர்ப்பதற்காக வினைத்திறனை உருவாக்குவதிலும் சிறந்த சேவைகளை உருவாக்குவதிலும் துரிதமான சட்டப் பரிகாரங்களை வழங்குவதிலும் கவனம் குவித்தலானது, நாட்டின் ஏனைய பிரதேசங்களும் வியாபாரங்களும் தழைத்தோங்கும் சூழலை உருவாக்குவதற்கு அவ்வாறான கவனம் தேவை என்னும் விடயத்தைப் புறக்கணிக்கின்றது. முதலீட்டு மூலதனம் என்பது முதலீட்டு மூலதனம்தான். அது வெளிநாட்டு முதலீட்டாளரிடம் இருந்து வருகின்றதாஅல்லது உள்நாட்டு முதலீட்டாளரிடம்

இருந்து வருகின்றதா என்பது பொருட்டல்ல. நிச்சயமாக இறுதியான குறிக்கோளாக இருக்கவேண்டியது பரந்த பொருளாதாரச் சூழலை மேம்படுத்துவதேயன்றி விசேட வலயங்களை மட்டுமே மேம்படுத்துவதல்ல. நாட்டின் ஏனைய பகுதிகளைப் புறக்கணித்தல் என்பது, நாட்டின் ஏனைய பகுதிகள் ஒட்டுமொத்த ஆளுகை முறைமையும் சட்டச் சட்டகமும் மீட்டெடுக்கப்பட்டுக் காப்பாற்றப்பட முடியாத நிலையில் உள்ளன என்ற புரிதலை ஒப்புக்கொண்டு அதனை வேண்டாவெறுப்புடன் ஏற்றுக்கொள்வதாகவே அமையும்.

விசேடபொருளாதாரவலயங்கள் பலவற்றில், குறிப்பாக மியன்மார், லாவோஸ், தாய்லாந்து, கம்போடியா மற்றும் கபொன் ஆகிய நாடுகளில் உள்ள வலயங்களில் உண்மையாகவே இடம்பெற்றுள்ள மனித உரிமைகள் துஷ்பிரயோகங்கள், விசேட பொருளாதார வலயங்கள் தொடர்பில் பலரும் கொண்டுள்ள இருமனப் போக்கிற்குப் பங்களிப்பு வழங்கியுள்ளன என்பதை Olaoye மற்றும் Sejko ஆகியோர் ஏற்றுக்கொள்கின்றனர். இச்சர்ச்சைகளினுள்ளும் துஷ்பிரயோகங்களினுள்ளும் சுற்றாடல் அழிவுகள், தொழிலாளர் பாதுகாப்பு அகற்றப்படல், மனித வஞ்சக் கடத்தல் மற்றும் விசேட பொருளாதார வலயங்கள் பெருக்குகின்ற சமமற்றதும் பக்கச்சார்பற்றதுமான அபிவிருத்தி ஆகியவை உள்ளடங்குகின்றன. விசேட பொருளாதார வலயங்களில் தீவிரமாக மேற்கொள்ளப்படும் அதீத முதலீடுகள் நாடுகளைக் கடன் பொறிக்குள் தள்ளுவதாகவும் மிகக் கவனமாக முன்னோக்கி நகரும் நிலைபேறான அபிவிருத்தி முன்னுதாரணத்திற்கு எதிராகச் செல்வதாகவும் புலனுணரப்படுகின்றது.

நல்லாட்சிக்கு ஆதரவு வழங்கும் ஒத்திசைவும் வெளிப்படைத்தன்மையும் மிக்க உறுதியான ஒழுங்குபடுத்தல் சட்டகங்களும் நிறுவனங்களும் அவசியமானவை என்பதை நிரூபிப்பதற்கு உறுதியான சான்று மேற்கோளாகக் காட்டப்படுகின்றது. விசேட பொருளாதார வலயக் கொள்கைகளின் எதிர்வுகூறத்தக்க அமுல்படுத்தல் காணப்படுவதுடன் உறுதியான முகாமைத்துவ ஆற்றல்களுடனும் தெளிவாக வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களுடனுமான விசேட பொருளாதார வலய அதிகாரசபைகளின் உருவாக்கம் இடம்பெறும் எனவும் எதிர்பார்ப்புக் காணப்படுகின்றது. வெற்றிகரமான விசேட பொருளாதார வலயங்களின் தேவைப்பாடுகளாக இவை காணப்படுமாயின், கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தினைப் பகுப்பாய்வுசெய்து இலங்கைக்குத் தேவைப்படும் சட்டத்தினை இலங்கை கொண்டுள்ளதா என்பதை நிர்ணயிக்கும் கண்ணாடியும் இதுவாகவே இருக்கும்.

ஆளுகை, அரசியலமைப்பியல், மக்களின் இறைமையின் மீதான அதன் தாக்கம் மற்றும் சட்டத்தின் ஆட்சியின் மீதான அதன் தாக்கம் ஆகியவற்றின் கண்ணோட்டத்தில் இருந்து பேராசிரியர் குணசேகர கொழும்புத் துறைமுக நகரத்தில் கவனம் குவிக்கின்றார். துறைமுக நகர முன்னெடுப்பு ஆரம்பிக்கப்பட்டதில் இருந்தே அது சர்ச்சைகளுள் சிக்கியிருந்தது எனப் பேராசிரியர் குறிப்பிடுகின்றார். கருத்திட்டம் பற்றியோ அதற்காகும் செலவு பற்றியோ பகிரங்கக் கலந்தாலோசிப்பு எதுவும் இடம்பெறவில்லை. கடலில் இருந்து காணிமீட்டல் ஏற்படுத்தும் தாக்கத்தினை மதிப்பிடுவதற்கு, குறிப்பாக அது மீன்பிடிக் கைத்தொழில் மீது ஏற்படுத்தும் தாக்கத்தினை மதிப்பிடுவதற்குச் சுற்றாடல் சாத்தியவள ஆய்வுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. மக்களின் அச்சங்களைப் போக்கி இலங்கையின் அபிவிருத்தி முன்னுதாரணத்தில் இந்தக் கருத்திட்டம் ஓர் ஆக்கபூர்வமான கூறு என்பதை மக்களுக்கு உணர்த்துவதற்குப் பெரிதாக எவையும் செய்யப்படவில்லை. துறைமுக நகரம் முரண்பாடுகளைத் தோற்றுவித்து சர்ச்சைகளை உருவாக்கி உள்நாட்டில் சிக்கல்களை ஏற்படுத்தும் என்ற கரிசனையினையும் அவர் எழுப்புகின்றார்.

கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டமூலம், சட்டமூலத்தின் அரசியலமைப்புடனான பொருந்துந்தன்மைக்குச் சவால் விடுத்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பொதுநல வழக்காடல், அரசியலமைப்புக்குச் சட்டமூலம் விடுக்கும் சவால்கள் பற்றிய உயர் நீதிமன்றத்தின் கண்ணோட்டம் உள்ளடங்கிய உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஆகியவற்றினைப் பேராசிரியர் குணசேகர பகுப்பாய்வு செய்கின்றார். சட்டமூலம் மக்கள் தீர்ப்பு ஒன்றிற்கு உட்படாமல் இருக்கவேண்டுமாயின், அதனை இலங்கை அரசியலமைப்புடன் ஒத்திசையக்கூடியதாக ஆக்குவதற்குப் பாராளுமன்றம் கூட்டிணைக்கவேண்டும் எனத் தேவைப்படுத்தும் சட்டவாக்கத்திற்கான மாற்றங்களைத் தீர்ப்பு முன்மொழிந்தது. பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலம் திருத்தப்படக்கூடிய 26 ஏற்பாடுகளைச் சுட்டிக்காட்டியும் நிறைவேற்றப்படுவதற்காகப் பாராளுமன்றத்தின் விசேட பெரும்பான்மையினையும் மக்கள் தீர்ப்பொன்றையும் தேவைப்படுத்தும் 9

ஏற்பாடுகளைச் சுட்டிக்காட்டியும் உயர் நீதிமன்றம் இந்த ஒத்திசையாமைகளை அடையாளம் கண்ட விடயம், அரசியலமைப்புடனான ஒத்திசைவின்மைகள் எதனையும் சட்டமூலத்தில் காணாத சட்டத்துறைத் தலைமையதிபதி அலுவலகத்தின் நம்பிக்கைமிகு அணுகுமுறை என்ற சூழமைவில் அறியாத விடயங்களை வெளிப்படுத்துவதாக உள்ளது. சட்டங்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தொடுப்பதற்கு இலங்கை அரசியலமைப்பு அனுமதிப்பதில்லை என்பதால் சட்டமூலங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கான வாய்ப்பு மிகவும் வரையறுக்கப்பட்டதாக உள்ளது. இதனைத் தாண்டி, அரசியல் மற்றும் சிவில் சமூகத்தினைச் சேர்ந்தது டிப்புமிக்க உறுப்பினர்கள் சட்டரீதியாக நடவடிக்கை மேற்கொண்ட காரணத்தினால் சட்டமூலத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட மாற்றங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது.

சில சிக்கலான சட்டப் பிரச்சினைகளையும் அரசியல் பிரச்சினைகளையும் உயர் நீதிமன்றத் தீர்ப்புக் கையாளவேண்டியிருந்தது. அவற்றுள் உள்ளடங்குபவை:

- மீட்கப்பட்ட காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கான அல்லது உரிமைமாற்றம் செய்வதற்கான மற்றும் கொழும்பு நிர்வாகமாவட்டத்தின் வரைவிலக்கணத்தினை மாற்றுவதற்கான ஜனாதிபதியின் அதிகாரம்;

- அரசாங்கத்திற்குஒப்படைக்கப்பட்டுள் ள அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்குக் கொழும்பு துறைமுகநகரப் பொருளாதார ஆணைக்குழுவினால் ஒரு கருத்திட்டக் கம்பனியினை பதிலீடு செய்யமுடியுமா;

- துறைமுக நகரத்தினுள் காணிச் சட்டங்கள் உள்ளிட்ட பல முக்கியமான சட்டங்களின் பிரயோகத்தினை விலக்கிவைத்தல், மற்றும்

துறைமுக நகர ஆணைக்குழுவின் அதிகாரங்களுக்கும் மாகாண சபைகளின் அதிகாரங்களுக்கும் இடையிலான தொடர்பு மற்றும் காணி தொடர்பாக மாகாணசபைகளின் நிலை மற்றும் அவற்றின் அதிகாரங்கள்.

சட்டமூலத்திற்குச் சில திருத்தங்களை மேற்கொள்ளுமாறு உயர் நீதிமன்றம் அரசாங்கத்தினை வற்புறுத்தியபோதிலும், காணி தொடர்பாக மாகாண சபைகள் கொண்டுள்ள அதிகாரம் பற்றிய முக்கியமான கேள்விகளுக்கு பதிலளிப்பதை நீதிமன்றம் தவிர்த்துள்ளது. மாகாண சபைகள் தொடர்பாகவும், காணி தொடர்பாக மாகாணங்களுக்காகச் சட்டமியற்றுவதற்கானஅவற்றின் அரசியலமைப்பு அதிகாரங்கள் தொடர்பாகவும் மற்றும் மாகாணங்களைப் பாதிக்கின்ற விடயங்கள் தொடர்பில் மாகாணசபைகள் கலந்தாலோசிக்கப்படுவதற்கான அவற்றின் உரிமை தொடர்பாகவும் காணப்படும் நீதிமன்றத்தின் மனப்பாங்கு, புலப்படாத விடயங்களைப் புலப்படுத்துவதாக உள்ளது. தேர்தல்கள் நடைபெறாத காரணத்தினால் மாகாண சபைகள் சட்டத்திற்கு அமைவாக உருவாக்கப்படவில்லை என்ற விடயத்தின் பின்னால் தஞ்சமடைந்து, செயன்முறை நடவடிக்கையாக மாகாணங்களுடன் கலந்தாலோசிப்பு நடத்தப்பட முடியவில்லை எனவும் அதனால் கலந்தாலோசிப்பு நடத்தாமை அரசியலமைப்பினை மீறியதாக அமையாது எனவும் நீதிமன்றம் கருத்துத் தெரிவித்துள்ளது. எனவே காணி தொடர்பாக மாகாண சபைகளுக்கு உள்ள அதிகாரங்கள் பற்றிய தெளிவினை வழங்குவதற்கு நீதிமன்றங்கள் பங்களிப்பு வழங்கவில்லை. வரும் காலங்களில் துறைமுக நகர ஆணைக்குழுவிற்கு கேடுவிளைவிககும் வகையில் இது மீண்டும் தலைதூக்கலாம்.

மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவது தொடர்பில் சர்ச்சைகள் காணப்படுவதால் மாகாண சபைகள் பல வருடங்களாகப் பகுதியளவில் செயற்படாமலேயே உள்ளன. காணி அதிகாரங்கள் மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் மாகாண சபைகள் அதிகாரங்களைப் பயன்படுத்துவதை அனுமதிக்க விரும்பாதவர்களினாலும் மாகாணசபைகள் தர்க்கத்துக்குள்ளாக்கப்பட்டு வருகின்றன. எவ்வாறாயினும், சமூக நம்பிக்கைப் பொறுப்பின் (LST) இந்த மீளாய்வு வெளியிடப்படும் சந்தர்ப்பத்தில், இத்தேர்தல்கள் விரைவில் நடத்தப்படும் எனக் கலந்துரையாடல்கள் இடமபெறுகின்றன. மாகாணசபைகள் அமைக்கப்படும் சந்தர்ப்பத்தில், துறைமுகநகரம் தொடர்பில் காணி பராதீனப்படுத்தல் மீதான நீதிமன்றத்தின் தீர்ப்பு மாகாண சபைகளினால் எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படும்? எதிர்காலப் பெருநகரங்களுக்கு இது என்ன முன்னுதாரணத்தினை நிர்ணயிக்கின்றது?

கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டமூலம் உதவுவதாகக் கூறுகின்ற பல்வேறு அபிவிருத்தி மற்றும் ஆளுகை மாதிரிகளில்

இருந்து எழக்கூடிய பதற்றங்களையும் பேராசிரியர் குணசேகர கோடிட்டுக்காட்டுகின்றார். நிலைபேறான அபிவிருத்திக்கு ஆதாரபலமாகக் காணப்படும் மனித உரிமைகள் அடிப்படையிலான அபிவிருத்தியை மேம்படுத்தும் பல சர்வதேசப் பொருத்தனைகளுக்கு இலங்கை கடப்பாடு கொண்டுள்ளது. சுற்றாடல் உரிமைகள் உள்ளிட்ட சிவில், அரசியல் மற்றும் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளின் பரந்த வீச்சுக்கு ஏற்பாடுகளை வழங்கும் சட்டங்கள் நடைமுறையில் காணப்படாலேயொழிய, நிலைபேறான அபிவிருத்தியினை அடையமுடியாது. எவ்வாறாயினும், நிலைபேறான அபிவிருத்தி மற்றும் துரித பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றினை மேம்படுத்துவதற்கான கடப்பாட்டினைச் சட்டமூலம் வழங்குகின்றது. இந்த இலக்குகள் உள்ளார்ந்த ரீதியில் முரண்பாடு மிக்கவையாகும். துரித பொருளாதார அபிவிருத்தியின் நாட்டத்தில், மனிதஉரிமைகள் சமவாயங்கள் மீறப்படுதல் இடம்பெறலாம் என்பதுடன் இது துறைமுக நகரக் கருத்திட்டத்துக்கு எதிராக மக்கள் அணிதிரள்வதற்கும் இட்டுச்செல்லலாம்.

கொழும்பின் இதயப் பகுதியில் அமைந்துள்ள துறைமுக நகரம் செல்வந்தர்களின் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மேட்டுக்குடியினர்) புகலிடமாக உருவெடுத்து, சிறப்புரிமையின் சின்னமாகவும், வன்மத்தின் மூலமாகவும் மாறலாம். வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நிதியினையும் நலன்களையும் பாதுகாப்பதற்கு அரசு கடப்பாடு கொண்டுள்ள போதிலும், அதிருப்தியும் பகைமையுணர்வும் கொண்ட மக்கள் மத்தியில் துறைமுக நகரம் அமைக்கப்படுமாக இருப்பின் இந்த முன்னெடுப்பின் தொடர்ச்சியான வெற்றிக்கு அது நல்ல சகுனமாக அமையாது.

முதலீட்டாளர்களுக்குத் தேவையான அனைத்தையும் ஒரே இடத்தில் வழங்குவதை இயலுமாக்குவதற்காகத் துறைமுக நகரத்தினை விசேட சட்டங்களுடன் உருவாக்குவது, இலங்கையில் முதலீட்டாளர்கள் பொதுவாக முடிவற்றதும் அவசியமற்றதுமான பணித்துறைச் சுற்றுக்களுக்கும் தடைகளுக்கும் முகங்கொடுப்பதற்கு பலவந்தப்படுத்தப்படுகின்றனர் என்பதை மறைமுகமாக ஏற்றுக்கொள்வதாகவே இருக்கின்றது. இவ்வாறான தடைகள் ஒவ்வொன்றும் கப்பம் பெறலுக்கான வாய்ப்புக்களாகும். இவ்வாறான கவலை தரும் நிலைமையினை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அரசாங்கங்களின் தரப்பில் எவ்வித அக்கறையும் இருப்பதுபோல் தென்படவில்லை. துறைமுக நகரத்தில் முதலீட்டாளர்களுக்கு விசேட பிணக்குத் தீர்ப்புப் பொறிமுறைகள் தேவைப்படுகின்றன என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையானது இலங்கையின் நீதிமுறைமையில் வழக்காளிகள் எதிர்நோக்கும் மிக மோசமான தாமதங்களை ஒப்புக்கொள்வதாகவே அமைந்துள்ளது. இது தொடர்ச்சியான கலந்துரையாடலுக்கான ஒரு விடயமாகும். ஆனால் முதலீட்டாளர்களில் விசேட வகுப்பினரின் நன்மைக்காக ஒரு சமாந்தர முறைமை உருவாக்கப்படும்போது, இது மறுசீரமைப்புக்கான கவனத்தினைப் பெறும் ஒருவிடயமாக இருக்காது.

துறைமுக நகரமும் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அசாதாரண அதிகாரங்களும் ''துறைமுக நகரம்'' எனக் குறிப்பிடப்படும் மீட்கப்பட்ட நிலத்திற்கு மட்டும் வரையறுக்கப்படாது அப்பிரதேசத்திற்கு வெளியே இருக்கும் நிலங்களுக்கும் நீட்சியடைவதே பாரிய கரிசனையாக உள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க கொழும்புக் ''கோட்டையினுள்''காணப்படும் கட்டிடங்கள் துறைமுக நகரத்தின் பகுதியாகக் கருதப்படுகின்றன. மேலும் இக்கட்டிடங்கள் மரபுரிமைத் தலங்களாகப் பாதுகாக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்த எவ்விதமான சட்டங்களோ அல்லது ஒழுங்குவிதிகளோ இல்லை என்பது கலக்கம் தரும் ஒருவிடயமாகஉள்ளது.

துறைமுக நகரச் சட்டமூலம் ஜனாதிபதிக்கும் துறைமுக நகர ஆணைக்குழுவுக்கும் அதன் தலைவருக்கும் துரித பொருளாதார அபிவிருத்தி எனும் கருத்திட்டத்தின் குறிக்கோளை அடைந்துகொள்வதற்காக முழு நிறைவான அதிகாரங்களை வழங்குகின்றது. ஆணைக்குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் ஜனாதிபதியின் அதிகாரங்கள் நியமனங்களுக்கான வழிகாட்டல்களுக்கு அமைவாக இருக்கவேண்டும் எனவும் தற்றுணிபுமிக்க அதிகாரங்களைத் தன்னிச்சையாகப் பயன்படுத்துவதை நீதிமன்றத்தில் ஆட்சேபிக்க முடியும் எனவும் தீர்ப்பளிப்பதற்கு உயர் நீதிமன்றம் நிர்ப்பந்திக்கப்பட்டது. எவ்வாறாயினும், அண்மைக் காலங்களில் - பொது நிர்வாகத்தினை இராணுவமயமாக்கும் போக்கு உள்ளடங்கலாக - ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட பல நியமனங்கள் சலிப்படைந்த பொதுமக்களாலும் பாராளுமன்றத்தினாலும் ஆட்சேபிக்கப்படாது விடப்பட்டுள்ளன.

துறைமுக நகரத்தின் பூகோள அரசியல் சிக்கல்கள் பற்றிப் பேராசிரியர் குணசேகர கவனம் குவிக்கவில்லை. ஆனால் சீன அரசாங்கம் என்னும்

ஒரு தனித்த இரு தரப்புப் பங்காளரில் தங்கியிருப்பது கரிசனைகளை எழுப்புகின்றது என்பதை அவர் அடையாளம் காண்கின்றார். எவ்வாறாயினும், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிராந்திய நிதி மையமாக விளங்குவதை நோக்கமாகக் கொண்ட துறைமுக நகரம், இலங்கைக்கு ஒரு பூகோள அரசியல் சகதியாக மாறி நிறைவேறாத எதிர்பார்ப்புக்களின் காரணமாகப் பதற்றங்களையும் உருவாக்கலாம். இந்து சமுத்திரத்தில் இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடம் காரணமாகவும் இந்தியா மற்றும் சீனா ஆகிய போட்டியாளர்களுக்கும் ஏனைய போட்டியாளர்களுக்கும் இலங்கை பல்வேறு விதமாக வழங்கும் முதலீட்டு வாய்ப்புக்களுக்காக இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் காணப்படும் பதற்றம் காரணமாகவும் துறைமுக நகரமும் சர்ச்சைக்குரிய மற்றொரு பரப்பாகமாறலாம். இந்த இரு தரப்பு உறவுகளை முகாமை செய்வது இலங்கையின் வெளிநாட்டு உறவுகளைத் திறமையாகவும் நிபுணத்துவத்துடனும் முகாமைத்துவம் செய்வதைத் தேவைப்படுத்தும் என்பதுடன் வெளிநாட்டு உறவுகளை முகாமைத்துவம் செய்வதில் தற்போது பிரபலமானதாகக் காணப்படும் கொடுக்கல்வாங்கல் ரீதியான அணுகுமுறையில் இருந்து நகர்வதையும் தேவைப்படுத்தும்.[2]பல முக்கியமான ராஜதந்திரப் பதவிகளுக்கு நியமனம் வழங்குகையில் தொழில்ரீதியான ராஜதந்திரிகள் தற்போது விலக்கிவைக்கப்படுகின்றனர். மேலும் விசேட நியமனங்கள் மேற்கொள்ளப்படும்போதும் கூட அந்தப் பதவிகளுக்குக் கணிசமான பங்களிப்பு வழங்கக்கூடிய நிபுணர்களை அவர்கள் எப்போதுமே உள்ளடக்குவதில்லை. பெருந்தொற்றின் போதும் கமநல நெருக்கடி மற்றும் நிதிநெருக்கடியின் போதும் சுகாதாரம் மற்றும் விவசாயத்திலும் நிதி விவகாரங்களிலும் விசேட அறிவுடைய தொழில்ரீதியானவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இது எதிர்காலத்திற்கு நல்ல சகுனமல்ல.

இலங்கை ஜனநாயக ஆளுகைக் கலாசாரத்தில் வேரூன்றியுள்ளது. காலத்திற்குக் காலம் தலைவர்கள் அவர்களின் செயற்பாடுகளுக்காக வகைப்பொறுப்புக் கூறவேண்டிய நிலைக்கு ஆளாகின்றனர். வியாபாரத்திற்கும் மக்களுக்கும் நட்பான ஒரு சூழலைச் சமநிலைப்படுத்துவதற்கான ஒரு தேவை காணப்படுகின்றது. இந்த இரண்டும் முரண்படும் குறிக்கோள்களாக நோக்கப்படலாகாது. துறைமுக நகரக் கருத்திட்டமானது ஆளுகை, பொருளாதாரம் மற்றும் சமூகம் ஆகிய விடயங்களைக் குறுக்கறுத்துச் செல்கின்றது. இதில் தேசிய வளங்கள் பெருவாரியாக முதலீடுசெய்யப்பட்டுள்ளன. இந்த முதலீட்டில் இருந்து இலங்கை மக்கள் நன்மையடைய வேண்டுமாயின் அதற்குத் தேவை ஒப்புரவேயாகும். சிறப்புரிமையுடைய சிலருக்குப் பாரிய இலாபங்களை உருவாக்கக்கூடிய ஒரு சூழலில், சிறிது சிறிதாகக் கிடைக்கும் மறுசீரமைப்புகளுக்காகக் காத்திருக்கும் பொறுமை இப்போது மக்களுக்கு இல்லை.

*Dr சகுந்தலா கதிர்காமர்[1]**

[1] *Dr. சகுந்தலா கதிர்காமர், சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை (LST) நிறைவேற்றுப் பணிப்பாளராவார்.

## இறுதிக் குறிப்புகள்

1 இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 123 (1) (c).

2 துறைமுக நகரம், சிறந்த பொருளாதார ஆளுகை, புதிய ஆளுகை வலயத்தின் கவனக்குவிப்பாக ஊக்குவிப்புப் பரிசுகள் இருத்தலாகாது, Advocata Institute,https://www.lankabusinessonline.com/opinion-port-city-better-economic-governance-not-giveaways-should-be-focus-of-new-governance-zone/

# விசேட பொருளாதார வலயங்கள் (Special Economic Zones - SEZs)பற்றிய ஒப்பீட்டு மீளாய்வு: புனைவுகளையும் சர்ச்சைகளையும் தெளிவுபடுத்தல்

*கெஹிந்த ஒலயே மற்றும் டினி செஜ்கோ[1]* (Kehinde Olaoye and Dini Sejko)*

*இந்தக் கட்டுரையில், தேசிய அபிவிருத்திக்கான சட்டபூர்வமான மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புக்களாக விசேட பொருளாதார வலயங்கள் பற்றிய செறிவான மற்றும் ஒப்பீட்டுரீதியான மீளாய்வொன்றினை ஆசிரியர்கள் வழங்குகின்றனர். விசேட பொருளாதார வலயங்கள் பற்றிய மிகவும் சமநிலையான மற்றும் நடுநிலையான கண்ணோட்டமொன்றினை வழங்குவதற்காக இக்கட்டுரை விசேட பொருளாதார வலயங்கள் பற்றிய வெற்றிக் கதைகளைத் திறனாய்வுடன் பகுப்பாய்வு செய்வதுடன் அதன் தோல்விகளையும் அத்துடன் ஊடகங்களின் விமர்சனங்களையும் பரிசோதிக்கின்றது.*

விசேட பொருளாதார வலயங்கள் தேசிய அபிவிருத்திக்கான சட்ட மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புக்கள் என்றவகையில் அவை பற்றிய ஒரு சுருக்கமான ஒப்பீட்டு மீளாய்வினை இந்தக் கட்டுரை வழங்குகின்றது. விசேட பொருளாதார வலயங்களின் உருவாக்கமும் இயக்கமும் வழமையாக பொதுப் பரிசீலிப்பினைத் தூண்டுவதுடன் ஓரளவுக்கு அதீதமான ஆனால் நியாயப்படுத்தப்படக்கூடிய விமர்சனத்தினையும் ஈர்க்கின்றன. விசேட பொருளாதார வலயங்கள் பற்றிய மிகவும் சமநிலையான மற்றும் புறவயமான பார்வையினை வழங்குவதற்காக இந்த ஆக்கமானது வெற்றிக் கதைகளை மதிப்பிட்டு, தோல்விகளையும் ஊடக விமர்சனங்களையும் திறனாய்வுடன் பரிசீலிக்கின்றது. விசேட பொருளாதார வலயங்கள் பற்றிய சிறந்த புரிதலை வழங்குவதை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆசியா மற்றும் ஆபிரிக்காவில் இருந்து பெற்றுக்கொள்ளும் பாடங்களின் மூலம் கொழும்புத் துறைமுக நகரத்தின் வெற்றிகரமான அமுல்படுத்தல் மற்றும் இயக்கத்திற்கான பாடங்களை நாம் வழங்குவதற்கு நாடுகின்றோம்.

## அறிமுகம்

தென் சீனாவின் குவங்டொங் கரையோர மாகாணத்தில் அமைந்துள்ள சென்ஜென் 1978 ஆம் ஆண்டில் ஏறக்குறைய 330,000 குடியிருப்பாளர்களைக் கொண்ட ஒரு சிறிய மீன்பிடிக் கிராமமாக இருந்ததுடன் அதன் மொத்தத் தேசிய உற்பத்தி (Gross Domestic Product - GDP)2.87 மில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது.[2] அப்போது பிரித்தானியாவின் கட்டுப்பாட்டில் இருந்த ஹொங்கொங் "நிதி மையத்தில்" இருந்து வெறும் 25 மைல்களே தூரத்தில் இக்கிராமம்

[1] *கலாநிதி கெஹிந்த ஒலயே ஹொங்கொங் சிட்டி பல்கலைக்கழகத்தின் சட்டக் கல்விப் பிரிவில் முதுகலைமானி ஆய்வாளராவார்.

கலாநிதி டினி செஜ்கோ ஹொங்கொங்கின் சீனப் பல்கலைக்கழகத்தின் சட்டப் பீடத்தில் ஒப்பீட்டு மற்றும் தேசங்கடந்த சட்டத்திற்கான நிலையத்தில் இணை ஆய்வாளராக உள்ளார் மற்றும் டபட்ஸ் பல்கலைக்கழகத்தில் சவரின் வெல்த் மற்றும் குளோபல் கெப்பிட்டலுக்கான பிளெட்சர் வலையமைப்பில் இணை ஆய்வாளராக உள்ளார்.

'பசுமை மற்றும் மிடுக்கு அல்லது கறுப்பு மற்றும் செயல்நயமின்மை? ஆசியானின் நிலைபேறான அபிவிருத்தி ஆய்வுக் கொடையில் சீன முதலீட்டாளர்களின் வகிபாத்திரத்தினை ஆராய்தல்' என்பதன் கீழ் பெற்றுக்கொண்ட தாராள உதவிக்காக அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான ஹொங்கொங் பல்கலைக்கழகத்தின் உருவாகிவரும் சந்தைக் கற்கைகள் நிறுவனத்திற்கு கலாநிதி செஜ்கோ நன்றி தெரிவிக்க விரும்புகின்றார்.

அமைந்திருந்த போதிலும், ஓர் அபிவிருத்தியடையாத கிராமமாகவே இது காணப்பட்டது. நான்கு தசாப்தங்களின் பின்னர் சீனா அதன் “திறந்த கதவுகள் கொள்கை” மூலம் வெளிநாட்டு முதலீடுகளுக்கு அனுமதியளித்து தனது முதலாவது விசேட பொருளாதார வலயமாக சென்ஜெனை நிறுவிய காரணத்தினால் “சிறிய கிராமமாக” இருந்த சென்ஜென் வானளாவிய கட்டடங்கள் நிறைந்த நவீன பெருநகரமாக நிலைமாறியது. சென்ஜெனின் பொருளாதாரம் 13711 மடங்காக வளர்ச்சியடைந்து 2020 ஆம் ஆண்டில் மொத்தத் தேசிய உற்பத்தி 429 பில்லியன் டொலர்கள் எனும் பெருமித நிலையை எட்டியது.[3] சென்ஜெனில் தற்போது 13 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். சீனாவின் மெகா டெக் சிட்டி, மிகவும் புத்தாக்கமிக்க நகரம் மற்றும் போட்டித்தன்மை மிக்க நகரம் எனும் பெயர்களைத் தற்போது தனது அடைமொழியாக்கிக்கொண்டுள்ள சென்ஜெனில் ஹுவாயி, லெனோவோ மற்றும் டென்சென்ட் போன்ற நன்கு பரிச்சயமான நிறுவனங்கள் நிலைகொண்டுள்ளன. கடந்த நான்கு தசாப்தங்களில் சீனாவின் அற்புதமான பொருளாதார வளர்ச்சியின் ஒரு சின்னமாக மாத்திரம் சென்ஜென் விளங்காது விசேட பொருளாதார வலயங்களினால் உருவாகக்கூடிய பொருளதார வளர்ச்சியினை மதிப்பிடுவதற்கான ஒரு முன்னுதாரணமாகவும் திகழ்கின்றது.

சென்ஜென் ஒரு நீண்ட வரலாற்றினைக் கொண்டுள்ள போதிலும், கடந்த நூற்றாண்டின் முடிவின் போது தென்கிழக்கு ஆசியாவில் விசேட பொருளாதார வலயங்களின் ஸ்தாபிப்பு பல்கிப் பெருகியுள்ளது. வறிய பிராந்தியங்களின் பொருளதார அபிவிருத்திக்கான ஒரு கருவியாக அரசாங்கங்களும் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி போன்ற சர்வதேச நிதி நிறுவனங்களும் விசேட பொருளாதார வலயங்கள் உருவாக்கப்படுவதை ஊக்குவித்தன. கடந்த 25 வருடங்களில், தென்கிழக்கு ஆசியாவில் விசேட பொருளாதார வலயங்களின் உருவாக்கத்திற்கு அரசாங்க முகவர்களிடம் இருந்தும் பல்தரப்பு நிறுவனங்களிடம் இருந்தும் கணிசமான உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவிகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் ஜப்பான், தென் கொரியா, சீனா மற்றும் ஐரோப்பியச் சங்கத்தின் உறுப்பினரான உறுப்பு நாடுகள் போன்ற பிராந்திய மற்றும் உலகளாவிய பொருளாதாரப் பங்காளர்களிடம் இருந்து வெளிநாட்டு நேரடி முதலீட்டினையும் விசேட பொருளாதார வலயங்கள் கவர்ந்திழுத்துள்ளன. பட்டுப் பாதை வழியேயும் அதற்கு அப்பாலும் நாடுகளின் மத்தியில் இணைப்பினை அதிகரிப்பதை நாடுகின்ற மற்றும் சீனாவுக்கும் பங்குபற்றும் நாடுகளுக்கும் இடையில் வர்த்தக உறவுகளையும் முதலீட்டு உறவுகளையும் மேலும் முன்னேற்ற நாடுகின்ற 2003 ஆம் ஆண்டு உத்தியோகபூர்வமாகத் தொடங்கப்பட்ட பெல்ட் அன்ட் ரோட் முன்னெடுப்பு (Belt and Road Initiative - BRI) நிலம் மற்றும் கடல்சார் விசேட வர்த்தக வலயங்களின் சாத்தியம் தொடர்பாக அதிக கவனத்தினை ஈர்த்துள்ளது.

2021 துறைமுக நகர ஆணைக்குழுச் சட்டத்திற்கான தூண்டுதலாக அமைந்த கொழும்பு துறைமுக நகர விசேட பொருளாதார வலயமானது கடந்த சில வருடங்களில் உலகம் முழுவதிலும் உருவாக்கப்பட்ட பல விசேட பொருளாதார வலயங்களில் ஒன்றாகும். 2021 கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழுச் சட்டம் தொடர்பாக நடத்தப்பட்ட சூடான விவாதங்களின் பின்புலத்தின் அடிப்படையில், உலகம் முழுவதிலும் விசேட பொருளாதார வலயங்களின் இயக்கம் மற்றும் விசேட பொருளாதார வலயங்களின் உடன்படிக்கை ஆகியவற்றில் இருந்து எழுகின்ற தட்டிக் கழிக்க முடியாத சமூகப் பிரச்சினைகளினதும் சட்டப் பிரச்சினைகளினதும் சுருக்கமான ஒப்பீட்டு ரீதியான பார்வையினை இக்கட்டுரை வழங்குகின்றது. பொருளாதார வளர்ச்சியினையும் அபிவிருத்தியினையும் தூண்டுவதற்கு விசேட பொருளாதார வலயங்கள் கணிசமான முன்னெடுப்பினை வழங்கியபோதிலும் கூட அவை மந்திர மாத்திரைகள் அல்ல என்றே நாம் வாதிடுகின்றோம். விசேட பொருளாதார வலயங்களின் வெற்றிக்கு விசேட பொருளாதார வலயச் சட்டவாக்கமும் உடன்படிக்கைகளும் இன்றியமையாதவை என்ற போதிலும், அவற்றின் வெற்றிக்குச் சிறந்த திட்டமிடலும் நல்லாட்சியும் இன்றியமையாதவையாகும்.

## புவியியல் ரீதியாக வரையறுக்கப்பட்ட பிரதேசங்கள்

வேறு பிராந்தியத்தில் அல்லது நாட்டில் கிடைக்காமல் இருக்கக்கூடிய விசேட ஊக்குவிப்புக்களையும் சட்டவாட்சி முறையினையும் வழங்குவதன் மூலம் வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்வதை நோக்கமாகக் கொண்டுள்ள புவியியல் ரீதியாக வரையறுக்கப்பட்ட பிரதேசங்கள் என விசேட பொருளாதார வலயங்களை வரைவிலக்கணப்படுத்த முடியும். பரந்த அடிப்படையில் நோக்குகையில், பொருளாதார மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி வலயங்கள் (Economic and Technological Development Zones - ETDZs),

சுதந்திர வர்த்தக வலயங்கள் (Free Trade Zones - FTZs), ஏற்றுமதிச் செயன்முறை வலயங்கள் (Export-Processing Zones - EPZs) மற்றும் உயர் தொழில்நுட்ப கைத்தொழில் அபிவிருத்தி வலயங்கள் (High-Tech Industrial Development Zones - HIDZs) போன்ற ஏனைய பொருளாதார வலயங்களுடன் "விசேட பொருளாதார வலயங்கள்" எனும் சொற்பதம் பரிமாற்றிப் பயன்படுத்தப்பட்டாலும் விசேட பொருளாதார வலயங்கள் தனித்துவமானவையாகும். இவை பொதுவாக ஏற்றுமதிகளை மேம்படுத்துவதையும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதையும் பொருளாதாரங்களைப் பல்வகைமைப்படுத்துவதையும் கைத்தொழில் அபிவிருத்தியினைப் போஷிப்பதையும் தொழில்வாய்ப்பினை உருவாக்குவதையும் உற்பத்தித்திறன் ஆற்றலைக் கட்டியெழுப்புவதையும் உலகளாவிய பெறுமதிச் சங்கிலிப் பங்கேற்புக்கு (Global Value Chain - GVC) உதவுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

விசேட பொருளாதார வலயங்களின் இன்றியமையாத பண்புகள் அவை முதலீட்டாளர்களுக்கு வழங்குகின்ற அரசிறை மற்றும் அரசிறை சாராத ஊக்குவிப்புக்களாகும். இந்த ஊக்குவிப்புக்கள் விசேட பொருளாதார வலயங்கள் இயங்குகின்ற பிராந்தியங்களுக்கு ஏற்ப மாறுபடுகின்ற போதிலும், காணிக்கான இலகுவான அணுகல், உட்கட்டமைப்பு உதவி, வரி நிவாரணங்கள், விரைவான பிணக்குத் தீர்த்தல்கள், விசேட வியாபார அனுமதிப் பத்திரங்கள் மற்றும் உரிமங்கள் அல்லது தொழில் விதிகள் மற்றும் ஓரிடத்தில் அனைத்துச் சேவைகளையும் பெறுவதன் மூலம் நிர்வாக ஒழுங்குபடுத்தல் மற்றும் வசதிப்படுத்தல் உள்ளிட்ட வியாபாரத்திற்கு நட்பான ஒழுங்குவிதிகளை இயலுமாக்குவதே வலியுறுத்தப்படுகின்றது.

விசேட பொருளாதார வலயங்கள் பல்வேறு வகைகளிலும் வடிவங்களிலும் காணப்படுகின்றன. வளர்முக நாடுகளில் கைத்தொழில் அபிவிருத்தியினை விசேட பொருளாதார வலயங்கள் நோக்கமாக் கொண்டுள்ளதுடன் அவை பல் தொழிற்துறை சார்ந்தவையாக, விசேடத்துவம் வாய்ந்தவையாக அல்லது கவனக்குவிப்பு மிக்கவையாக இருக்கலாம். பாரம்பரிய ரீதியில் விசேட பொருளாதார வலயங்கள் வர்த்தகத்திலும் உற்பத்தியிலும் கவனம்குவித்திருந்தன. எவ்வாறாயினும், கடந்த தசாப்தத்தில் நிதிச் சேவைகள் மற்றும் சுற்றுலாத்துறை போன்ற முதன்மையற்ற தொழிற்துறைகளை நோக்கிய தெளிவான நகர்வினையும் இதில் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இவ்வாறான புதிய யுக விசேட பொருளாதார வலயங்கள் பொதுவாக வர்த்தகமயமாக்கல், அபிவிருத்தி மற்றும் நகரமயமாக்கம் ஆகியவற்றில் கவனம் குவிக்கின்றன. கொழும்பு துறைமுக நகரம் இந்தத் தெளிவான போக்கிற்கான நேர்த்தியான உதாரணமாக விளங்குகின்றது.

வர்த்தகம் மற்றும் அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் (UNCTAD) 2019 அறிக்கைக்கு அமைவாக, கிட்டத்தட்ட 5400 விசேட பொருளதார வலயங்கள் 147 பொருளாதார வலயங்களில் பரவிக் காணப்படுகின்றன. இந்த வலயங்களில் 1400 வலயங்கள் கடந்த ஐந்து வருடங்களில் உருவாகியவை என்பதும் இன்னும் 500 புதிய விசேட பொருளதார வலயங்கள் வரவிருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஆகக்கூடுதலான எண்ணிக்கையிலான விசேட பொருளாதார வலயங்கள் சீனாவிலும் பிலிப்பைன்ஸிலும் இந்தியாவிலும் அமெரிக்காவிலும் ரஷ்யாவிலும் துருக்கியிலும் தாய்லாந்திலும் டொமினிக்கன் குடியரசிலும் கென்யாவிலும் நிகரகுவாவிலும் காணப்படுகின்றன. உலகிலுள்ள விசேட பொருளதார வலயங்கள் அனைத்திலும் நான்கில் மூன்று சதவிகிதமானவை ஆசியாவிலே அமைந்துள்ளன என்பது ஒன்றும் ஆச்சரியத்துக்குரியதல்ல.

கடந்த தசாப்தத்தில் குறிப்பாக ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் வெளிநாட்டு நேரடி முதலீடு என்ற வடிவில் உள்நாட்டுத் தனியார் பங்காளர்களுடனும் அரசாங்கப் பங்காளர்களுடனும் சேர்ந்து சீனா முதலீட்டாளர்கள் விசேட பொருளாதார வலயங்களை நிறுவியுள்ளனர். சீனா ஆதரவுடன் அமைக்கப்பட்ட விசேட பொருளாதார வலயங்களுக்கான உதாரணங்களுள் சீனா - ஓமான் (Duqm) கைத்தொழில் பூங்கா, நைஜீரியாவின் சீனா ஆதரவுடனான ஒகுன் குவாண்டொங் சுதந்திர வர்த்தக வலயம் (Ogun-Guangdong Free Trade Zone - OGFTZ),கைபர் பக்துங்வாவில் சீனா - பாகிஸ்தான் பொருளாதார இடைவெளி (China-Pakistan Economic Corridor - CPEC)இன் கீழ் நிறுவப்பட்ட ரஷகாய் விசேட பொருளாதார வலயம் (Rashakai Special Economic Zone) மற்றும் சீனா எல்லையில் லுவாங் நம்தாவில் பொடென் விசேட பொருளாதார வலயம் ஆகியவை அடங்குகின்றன. முதலீட்டாளர்களுக்குக் கிடைக்கும் உட்கட்டமைப்பு மற்றும் வரி ஊக்குவிப்புக்களின் காரணமாக "தென்கிழக்கு ஆசியாவில் முதலீடு செய்யும் சீனக் கம்பனிகளுக்கு ஒரு சொர்க்கம்"

என ஊக்குவிக்கப்பட்ட தாய் - சீனா ரெயொங்க கைத்தொழில் பூங்கா ஹொலி குழுமம் எனும் தனியாருக்குச் சொந்தமான சீனக் கம்பனிக்கும் (சீனா) அமதா குழுமத்திற்கும் (தாய்லாந்து) இடையிலான ஒரு பங்காண்மையாக 2006 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

## விசேட பொருளதார வலய உடன்படிக்கைகள் மற்றும் சட்டவாக்கம்

விசேட பொருளாதார வலயங்கள் பிரதானமாக தேசிய சட்டவாக்கத்தின் மூலம் நிறுவப்பட்டு ஒழுங்குபடுத்தப்படுகின்றன. இவற்றின் இயக்கத்திற்கான வழிகாட்டல் விதிகளை நிர்ணயிக்கும் சட்டங்களாக, உத்தரவுகளாக அல்லது ஒழுங்குவிதிகளாக இவை இருக்கலாம். விசேட பொருளதார வலயங்கள் காணப்படுகின்ற நாடுகளைப் போன்றே இச்சட்டவாக்கமும் பல்வகைமை மிக்கதாகக் காணப்படுகின்றது. இச்சட்டவாக்கக் கருவிகள் பொதுவாக விசேட பொருளாதார வலயங்கள் நிறுவப்படும் நாடுகளின் அல்லது பிராந்தியத்தின் தனித்துவமான தேவைகளின் பிரதிபலிப்பாக இருக்கின்றன. மிகவும் குறிப்பாக, உலக வர்த்தக அமைப்பின் பொருத்தணைகள், சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள், சர்வதேச முதலீட்டு உடன்படிக்கைகள் மற்றும் இரட்டை வரிவிதிப்புப் பொருத்தணைகள் போன்ற சர்வதேச பொருத்தணைகளின் கீழான அரசுகளின் சர்வதேச கடப்பாடுகள் விசேடமான தேசங்கடந்த பொருளாதாரச் சட்ட விதிகளுக்கான ஏற்பாடுகளை வழங்கி வெளிநாட்டு முதலீட்டாளர்களைப் பாதுகாப்பது,[4]விசேட பொருளாதார வலயங்களின் இயக்கம் மற்றும் ஆளுகையில் உறுதியான தாக்கத்தினைச் செலுத்துகின்றன.

பல்வகைமைமிக்க அரச மற்றும் அரச சார்பற்ற செயற்படுநர்களைச் சம்பந்தப்படுத்தி தேசங்கடந்த சட்டச் செயன்முறைகள் மூலமாக தேசிய சட்ட முறைமைகள் எவ்வாறு பூகோளமயமான உலகுடன் இடையீடு மேற்கொள்கின்றன என்பதற்கு விசேட பொருளாதார வலயங்கள் ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கின்றன. கலப்புப் பெறுபேறுகள் இருந்தபோதிலும் கூட, எந்தவொரு விசேட பொருளாதார வலயத் திட்டமுறையின் வெற்றிக்கும் திடமான ஒழுங்குபடுத்தல் சட்டகங்கள், திடமான நிறுவனங்கள் மற்றும் நல்லாட்சி ஆகியவை இன்றியமையாதவை என்பதற்கான வலுவான சான்றுகள் உள்ளன. விசேட பொருளாதார வலயங்களின் சட்ட உட்கட்டமைப்புக்கள் விசேட பொருளாதார வலயங்களின் கொள்கைகளின் ஒத்திசைவான, வெளிப்படைத்தன்மைமிக்க மற்றும் எதிர்வுகூறத்தக்க அமுல்படுத்தலை உறுதிப்படுத்தவேண்டும். இந்தக் காரணங்களுக்காக, விசேட பொருளாதார வலயங்களின் ஆளுகை அதிகார அமைப்புக்களின் பொறுப்புக்களும் தெளிவாக வரைவிலக்கணப்படுத்தப்படவேண்டும்.

ஒரு நாட்டினுள் அனைத்து விசேட பொருளாதார வலயங்களுக்கும் பிரயோகிக்கத்தக்க தேசிய விசேட பொருளாதார வலயங்களின் சட்டங்களே உலகம் முழுவதும் மிகப் பொதுவான விசேட பொருளாதார வலயக் கொள்கைக் கருவியாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், சில நாடுகள் விசேட பொருளாதார வலயங்களுக்கான வேறான விதிகளை உருவாக்கியுள்ளதன் மூலம் அல்லது உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு விதிகளை இயற்றும் அதிகாரங்களை வழங்கியுள்ளதன் மூலம் ஏனைய அணுகுமுறைகளையும் ஏற்று நடைமுறைப்படுத்தியுள்ளன. UNCTAD தரவுகளின்படி, குறைந்தது 115 நாடுகள் விசேட பொருளாதார வலயச் சட்டங்களை ஏற்று நடைமுறைப்படுத்தியுள்ளன. இந்தச் சட்டங்களை மிக அதிகமாக வளர்முக நாடுகளில் காண முடிகின்றது.

விசேட பொருளாதார வலயங்களை முகாமைத்துவம் செய்து இயக்குகின்ற தரப்புக்களான அரச அதிகார அமைப்புக்களுக்கு இடையிலான உறவுகளை ஒழுங்குபடுத்துகின்ற சர்வதேச ஒப்பந்தங்கள் விசேட பொருளாதார வலயங்களின் இயக்கங்களுக்கு இன்றியமையாத உடன்படிக்கைககளாகும். விசேட பொருளாதார வலயங்கள் அமைந்துள்ள நாடுகளுக்கும் ஒழுங்குபடுத்துநர்களை நியமிக்கும் விசேட பொருளாதார வலயங்களில் இயங்கும் கம்பனிகளுக்கும் உரிமையாளர்களுக்கும் அபிவிருத்தியாளர்களுக்கும் இயக்குனர்களுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள, விசேட பொருளாதார வலயங்கள் பற்றிய ஆய்வுகளில் போதிய அவதானத்தினைப் பெறாத, இந்த உடன்படிக்கைகள் பொதுவாக அபிவிருத்தி உடன்படிக்கைகளும் கூட்டு முயற்சிகளுமாகும். சீன கொன்சோர்டியம் CITIC மியன்மார் துறைமுக முதலீடு லிமிடட்டுக்கும் Kyaukphyuவிசேட பொருளாதார வலய ஆழ்கடல் துறைமுகம் கம்பனி லிமிடட் எனப் பதிவுசெய்யப்பட்ட மியன்மார் அரசாங்கத்திற்கும்

இடையிலான 2020 ஆம் ஆண்டின் கூட்டு முயற்சியினை அண்மைய உதாரணமாகக் காட்டலாம்.

சீன அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி-யாண்மைகள் சீன உதவியுடனான விசேட பொருளாதார வலயங்களில் மிகக்கணிசமான விழுக்காட்டினைப் பொதுவாகக் கொண்டிருப்பதைக் கீழேயுள்ள அட்டவணை காட்டுகின்றது. உதாரணமாக, Kyaukphyuவிசேட பொருளாதார வலயத்தில் CITIC கொன்சோர்டியத்தில் உள்ள 70 சதவிகிதப் பங்கு கைத்தொழில் வலயத்தில் 51 சதவிகிதத்தினை உரிமையாகக் கொண்டுள்ள அதேவேளை மியன்மார் அரசாங்கம் 49 சதவிகிதத்தினை உரிமையாகக் கொண்டுள்ளது. கைத்தொழில் வலயத்தின் நிர்மாணிப்புக்கு CITIC தலைமை தாங்கும். இது மியன்மார் Kyauk Phyuவிசேட பொருளாதார வலய ஹோல்டிங் பப்ளிக் கம்பனி லிமிடட்டின் கீழ் 42 தனியார் மியன்மார் கம்பனிகளைச் சம்பந்தப்படுத்தும். இவ்வகையான உடன்படிக்கையில் அதிகரிப்புக் காணப்படுகின்றது. இதற்கான பிரதான காரணம் சீனப் பங்காண்மையாகும். எவ்வாறாயினும், இந்த உடன்படிக்கைகள் தொடர்ந்தும் இரகசியமானவையாக இருப்பதுடன் இவை உண்மையில் என்ன விதிகளின் கீழ் இணங்கப்பட்டுள்ளன என்பது ஒருபோதுமே பொதுமக்களுக்குத் தெரியவராது. விசேட பொருளாதார வலயங்களில் தடைகளும் சட்டப் பிணக்குகளும் விசேட பொருளாதார வலயச் சட்டவாக்கத்தினால் உருவாகவில்லை, மாறாக விசேட பொருளாதார வலய உடன்படிக்கைகளினாலேயே உருவாகுகின்றன என்பதை எமது ஆய்வுகள் காட்டுகின்றன. இந்த உடன்படிக்கைகள் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் அரசுகளுக்கும் இடையில் முதலீட்டு நடுவர் தீர்ப்புப் பிணக்குகளுக்கு இட்டுச்சென்றுள்ளன. விசேட பொருளாதார வலயச் சட்டங்கள் விசேட பொருளாதார வலயங்களை நிறுவுவதற்கான பொதுவான சட்டச் சட்டகங்களை வரையறுக்கின்ற அதேவேளை அரசுகளுக்கும் முதலீட்டாளர்களுக்கும் இடையிலான உடன்படிக்கைகள் தனித்துவமான விசேட பொருளாதார வலய அடிப்படையிலான கருத்திட்டங்களுக்கான மிகவும் விசேட விதிகளை வழங்குகின்றமை இதற்கான காரணமாக இருக்கலாம்.

## தெரிவுசெய்யப்பட்ட விசேட பொருளாதார வலயங்களின் உரித்தாண்மைக் கட்டமைப்பினை அட்டவணை காட்டுகின்றது

| வருடம் | அரசு | ளுநுணு | பிரதேசம் | வகை | உரித்தாண்மை | சட்ட உடள்படிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 2014 | இலங்கை | கொழும்பு துறைமுக நகரம் | 269 ஹெக்டேயர்ஸ் | சேவைகள் | மீட்கப்பட்ட காணியில் 43% சீனத் துறைமுக பொறியியல் கம்பனி (CHEC)துறைமுக நகரம் கொழும்பு (பிரைவேட் லிமிடட்டுக்கு 99 வருடக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. | இலங்கைக்கும் சீனத் தொடர்பால்கள் நிர்மாணக் கம்பனி லிமிடட்டின் (CCCC) பகுதியான சீனத் துறைமுக பொறிறியல் கம்பனியின் துணைக் கம்பனியான சீனத் துறைமுக பொறியியல் கம்பனி (CHEC) துறைமுக நகரம் கொழும்பு (பிரைவேட் லிமிடட்டுக்கும் இடையிலான அரச தனியார் பங்காண்மை |
| 2020 | மியன்மார் | Kyaukphyu SEZ | 1708 ஹெக்டேயர்ஸ் | கைத்தொழில் வலயம் | CITIC கொன்சோர்டியம் (51%) மற்றும் மியன்மார் (49%) | CITICமியன்மார் துறைமுக முதலீடு லிமிடட்டுக்கும்(70%) Kyauk Phyuவிசேட பொருளாதார வலய முகாமைத்துவக் குழுவுக்கும் (30%)கூட்டு முயற்சி உடன்படிக்கை |
| 2020 | பாகிஸ்தான் | Rashakai SEZ | 406 ஹெக்டேயர்ஸ் | கைத்தொழில் வலயம் | - | DAகைபர் Pakhtunkhwaபொருளாதார வலய அபிவிருத்தி முகாமைத்துவக் கம்பனி(KPEZDMC) மற்றும் சீன வீதி மற்றும் பாலக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையிலான DA |
| 2018 | ஜிபுடி | ஜிபுடி சர்வதேச சுதந்திர வர்த்தக வலயம் | 4800 ஹெக்டேயர்ஸ் | கைத்தொழில் வலயம் | - | சீன கொன்சோர்டியம் (60 சதவிகிதம்) ஜிபுடி (40 சதவிகிதம்) |

| வருடம் | அரசு | ஞநுணு | பிரதேசம் | வகை | உரித்தாண்மை | சட்ட உடன்படிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 2009 | எதியோப்பியா | ஜின்பெய் பொருளாதார மற்றும் வர்த்தகக் கூட்டுத்தாபன வலயம் | 211 ஹெக்டேயர்ஸ் | கைத்தொழில் | 100%சீனாவுக்குச் சொந்தமானது | மொரிசியஸ் ஜின்பெய் பொருளாதார மற்றும் வர்த்தகக் கூட்டுத்தாபன வலயக் கம்பனி லிமிடட் -Shanxi Coking Coal (30.2%), Taiyuan இரும்பு மற்றும் உருக்குக் கம்பனி லிமிடட் (50%)மற்றும் Shanxi Tianli Enterpriseகுழுமம்(19.8%) |
| 2003 | ஜம்பியா | ஜம்பியா – சீன பொருளாதாரம் மற்றும் வர்த்தகக் கூட்டுத்தாபன வலயம் | 1158 ஹெக்டேயர்கள் | கைத்தொழில் | - | சீன Non Ferrous Metal (95 %) மற்றும் ஜம்பியா Consolidated Copper Mines Investment Holdings (5%)இடையிலான கூட்டு முயற்சி உடன்படிக்கை |
| - | பங்களாதேஸ் | சிட்டாகொங் | 303 ஹெக்டேயர்கள் | - | - | JVAசீனத் துறைமுகப் பொறியியல் (70%) மற்றும் பங்களாதேஷ் விசேட பொருளாதார வலய அதிகாரசபைக்கு (30%)இடையிலான கூட்டு முயற்சி உடன்படிக்கை. |
| 2006 | நைஜீரியா | லெக்கி சுதந்திர வர்த்தக வலயம் | 16500 ஹெக்டேயர்கள் | எண்ணெய் மற்றும் வாயு உற்பத்தி | | சீன ஆபிரிக்க லெக்கி முதலீடு லிமிடட் (60%), லாகோஸ் அரசு மற்றும் நைஜீரிய அரசாங்கம்(40%)கூட்டு முயற்சி உடன்படிக்கை |
| 2005 | தாய்லாந்து | தாய் - சீன Rayong கைத்தொழில் வலயம் | 1200 ஹெக்டேயர்கள் | உற்பத்தி | - | JVAHolley Group (சீனா)(75%)மற்றும் அமதா குழுமம் (தாய்லாந்து) (25%)ஆகியவற்றுக்கு இடையிலான கூட்டு முயற்சி உடன்படிக்கை |
| 2008 | எகிப்து | ஏகிப்து சுயஸ் பொருளாதார மற்றும் வர்த்தகக் கூட்டுத்தாபன வலயம் | 703.2 ஹெக்டேயர்கள் | கைத்தொழில் | - | சீனTEDAமுதலீட்டுக் கம்பனி லிமிடட்(75%)மற்றும் Tianjin TEDAசுயஸ் சர்வதேச கூட்டுத்தாபனத்திற்கு. (5%)இடையிலான கூட்டு முயற்சி உடன்படிக்கை |

மூலம்: ஆசிரியர்களின் தொகுப்பு (2021)

## புனைவுகளும் சர்ச்சைகளும்

விசேட பொருளாதார வலயங்கள் புனைவுகளிலும் சர்ச்சைகளிலும் அமிழ்ந்துள்ளன. சுரண்டல், கடன் பொறிகள் மற்றும் நவகாலனித்துவம் பற்றிய செய்திகளைப் பத்திரிகைகள் அடிக்கடி பிரசுரிப்பதைக் காண முடிகின்றது. கடந்த வருடங்களில், சீன வெளிநாட்டு முதலீடுகள் வளர்ச்சியடைந்துள்ளன. அத்துடன் வெளிநாட்டு முதலீடுகளுக்கான போட்டியினைப் பண்பாகக் கொண்டு மிகவும் பல்துருவமயமான சர்வதேச பொருளாதார ஒழுங்கிற்கு மேலும் பங்களிப்பு வழங்கும் விசேட பொருளாதார வலயங்கள் இன்னும் சந்தேகத்துடனேயே நோக்கப்படுகின்றன. அத்துடன், விசேட பொருளாதார வலயங்கள் பொதுவாகப் பரந்த கட்டமைப்பு ரீதியான சமூக மற்றும் அரசியல் நெருக்கடிகளுடன் வளர்முக நாடுகளையே தளமாகக் கொண்டுள்ளன. இவற்றின் அரசியல் நெருக்கடிகள், இயக்கங்கள் மேலும் மேலும் சிக்கற்தன்மைக்கே இட்டுச்செல்லக்கூடும். இருந்தபோதிலும் அண்மைக் காலத்தில் சீன ஆதரவுடனான விசேட பொருளாதார வலயங்கள் கவனக்குவிப்பினைப் பெற்று மிகப் பாதகமான கருத்துக்களைப் பெற்று அவற்றின் இயக்கங்கள் தொடர்பான சர்ச்சைகள் வளர்முக நாடுகளில் மிகப் பொதுவாகக் காணப்படுகின்றமையும் சீனச்சார்பற்ற அனுசரணையுடனான விசேட பொருளாதார

வலயங்களிலும் இதே நிலைமை காணப்படுவதும் தெளிவுபடுத்தப்படவேண்டியது அவசியமானதாகும்.

விசேட பொருளாதார வலயங்களின் இயக்கங்கள் தொடர்பாகக் காணப்படும் பிரதான சமூகச் சட்டச் சர்ச்சைகள் மனித உரிமைகள் மீறல்களேயாகும். விசேட பொருளாதார வலயக் கருத்திட்டங்களின் காரணமாகப் பல மனித உரிமைத் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளன. இராணுவ ஆதரவுடன் இயங்கும் மியன்மார் பொருளாதாரக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து குத்தகைக்குப் பெற்ற நிலத்தில் யங்கொன்னில் 290 மில்லியன் டொலர் துறைமுகத்தினை நிர்மாணித்து வரும் இந்தியாவின் அதானி துறைமுகங்கள் மற்றும் விசேட பொருளாதார வலயம் லிமிடட் மனித உரிமைகள் துஷ்பிரயோகங்கள் தொடர்பாகக் குற்றம் சாட்டப்படும் மியன்மார் இராணுவத்துடன் வியாபாரத் தொடர்புகளைப் பேணுவதாக அண்மையில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. சில விசேட பொருளதாரக் கருத்திட்டங்கள் உள்ளூர்ச் சமுதாயங்களினதும் சிவில் சமூகக் குழுக்களினதும் எதிர்ப்புக்களைத் தூண்டியுள்ளன. மொரிசியசில் சீன ஆதரவுடனான ஜினேபி விசேட பொருளாதார வலயத்திற்காகக் குத்தகைக்குப் பெறப்பட்ட நிலத்தில் பராம்பரியமாக விவசாயம் செய்த விவசாயிகள் 2015 ஆம் ஆண்டில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. மிக அண்மையில், 2020 ஆம் ஆண்டில், விசேட பொருளதார வலயம் சுற்றாடலைப் பாதித்துத் தம் வாழ்வினையும் பாதிக்கும் என்று கூறி தாய்லாந்தில் சொங்லா மாகாணத்தில் 6600 ஏக்கரில் விசேட பொருளாதார வலயத்தினை நிர்மானிப்பதற்கு உள்ளூர் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

விசேட பொருளாதார வலயங்கள் ஏற்படுத்தும் சுற்றாடல் தாக்கங்கள் இரண்டாவது பாரிய பிரச்சினையாகும். சில விசேட பொருளாதார வலயக் கருத்திட்டங்களின் சுற்றாடல் தாக்கம் தொடர்பான சர்ச்சைகள் கணிசமான தாமதங்களுக்கு இட்டுச் சென்றுள்ளதுடன் சில சந்தர்ப்பங்களில் கருத்திட்டங்கள் இரத்தாவதற்கும் காரணமாகியுள்ளன. இதற்கான குறிப்பிடத்தக்க உதாரணம், 2013 ஆம் ஆண்டில் தொடக்கிவைக்கப்பட்ட பர்மாவின் சர்ச்சைக்குரிய தவயி விசேட பொருளாதார வலயமாகும் (Dawei Special Economic Zone - DSEZ) இது நிதிப் பற்றாக்குறை, சுற்றாடல் சேதம் மற்றும் விவசாயிகளின் வெளியேற்றம் தொடர்பான உள்ளூர் மக்களின் எதிர்ப்பு உள்ளிட்ட பல தடைகளை எதிர்கொண்டது. விசேட பொருளாதார வலயங்களின் புவியியல் அமைவிடம் அவற்றின் வெற்றிக்கு மூலகாரணமானது என்றபோதிலும், உள்ளூர்ச் சமுதாயங்களுக்கு இக்கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடங்கள் அவர்களின் நலனோம்புகையிலும் வாழ்வாதரங்களிலும் குறிப்பாக மோசமான ஆளுகை உள்ள நாடுகளில் உள்ள மக்களுக்குப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. கம்போடியாவில் உள்ள விசேட பொருளாதார வலயங்கள் சுற்றாடல் மீறல் முறைப்பாடுகள் சிலவற்றின் மையமாகக் காணப்பட்டன. கம்போடியாவின் சிவாய் ரெய்ங் மாகாணத்தில் உள்ள ஓர் ஆடைத் தொழிற்சாலை தாய்வான் ஆதரவுடன் நடத்தப்பட்ட மன்ஹட்டான் விசேட பொருளாதார வலயத்தில் இருந்து வெளியேறும் சுத்திகரிக்கப்படாத கழிவு நீரை கால்வாயினுள் அனுப்பியதால் 2016 ஆம் ஆண்டில் மீன்களும் கால்நடைகளும் இறந்துபோயின. அதே வருடத்தில் சீன இலத்திரனியல் உற்பத்தியாளரான குவான் டெக் சட்டவிரோதமாகச் சாக்கடை நீரை டேகியோ மாகாண ஓடை ஒன்றினுள் அனுப்பியமையினை கம்போடிய சுற்றாடல் அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

விசேட பொருளாதார வலயங்களில் சீனக் கம்பனிகளால் நடத்தப்படும் கருத்திட்டங்கள் சட்டவிரோத நடவடிக்கைகள் உருவாகும் இடங்கள் எனும் குற்றச்சாட்டுக்கள் கம்போடியாவிலும் லாவோசிலும் தாய்லாந்திலும் மியன்மாரிலும் முன்வைக்கப்படுகின்றன. இவற்றுள் தொழில் தராதரங்களுக்கு இயைபுறாமை, சட்டவிரோதக் குடிவரவு மற்றும் சில ஆலைகளில் சுற்றாடல் நியமங்கள் மீறப்படல் ஆகியவை உள்ளடங்குகின்றன. ஆசியாவில் பல விசேட பொருளாதார வலயங்களில் தொழில் உரிமைகள் மற்றும் தொழிலாளர் பாதுகாப்பு நியமங்கள் மீறப்படுகின்றமை முக்கியமான பிரச்சினையாக இருக்கின்றன. முதன்மையான கரிசணைகளுள் ஊதியம், சிறார் ஊழியம், தொழில் நிபந்தனைகள், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மற்றும் தொழில் ஆகியவை உள்ளடங்குகின்றன. உதாரணமாக, Nkok (GSEZ) இல் உள்ள கெபன் விசேட பொருளாதார வலயத்தில் அமைந்திருந்த இந்தியாவைத் தளமாகக் கொண்ட மரக் கம்பனியில் பணியாற்றும் இந்தியப் புலம்பெயர் தொழிலாளர்கள் மோசமான தொழில் நிலைமைகளுக்கு முகங்கொடுப்பதாகவும் மனித வஞ்சக் கடத்தலுக்கு முகங்கொடுப்பதாகவும் பலவந்த ஊழியத்திற்கு முகங்கொடுப்பதாகவும் 2019 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் எச்சரிக்கை விடுத்தது.

மேலே பரிசீலிக்கப்பட்ட மனித உரிமைகள் மீறலுக்கு மேலதிகமாக ஏனைய அரசியல் சர்ச்சைகளும் விசேட பொருளாதார வலயங்களில் இருந்து எழுகின்றன. இவை குறிப்பாக அரசாங்கம் மாறிய பின்னர் விசேட பொருளாதார வலய உடன்படிக்கைகள் மீள் பேச்சுவார்த்தைக்கு உட்படுவதால் ஏற்படலாம். 2015 ஆம் ஆண்டு மியன்மார் பொதுத் தேர்தலுக்குச் சில காலமே இருக்கையில், விசேட பொருளாதார வலயத்தினை அமைப்பதற்கான உடன்படிக்கையினால் சீனாவின் கடன் பொறியில் விழநேரிடும் என்ற கரிசனையினால் Kyaukphyu SEZதாமதிக்கப்பட்டது. 2021 ஜனவரியில்,மீண்டும் தாமதங்கள் ஏற்பட்ட காரணத்தினாலும் நிதிக் கடப்பாடுகள் மீறப்பட்ட காரணத்தினாலும் தாய்லாந்தின் நிர்மாண ஜாம்பவானான இத்தாலியன் - தாய் டிவலப்மன்டுடனான ஒப்பந்தங்களை இரத்துச் செய்வதாக மியன்மார் அறிவித்தது. விசேட பொருளாதார வலயம் ஒன்றினை நிர்மாணிப்பதற்காக ஜனாதிபதி ஜோன் மகுபுலியின் கீழ் தன்சானியாவுக்கும் சைனா மேர்சன்ட் ஹோல்டிங்ஸ் இண்டர்நெசனலுக்கும் இடையிலான 2013 உடன்படிக்கை நிறுத்தப்பட்டது. 2021 இல் மகுபுலி இறந்த பின்னர் பதவியேற்ற ஜனாதிபதி சாமியா சுலுகு ஹசன் கருத்திட்டத்தினைப் பற்றி மீண்டும் பரிசீலித்து வருகின்றார்.

## வெற்றிக் கதைகள்

ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் விசேட பொருளாதார வலயங்கள் பொதுவாகவே சிறப்பாகச் செயற்படவில்லை என்பதை மேலேயுள்ள பந்திகள் தெளிவாகக் காட்டுகின்றன. விசேட பொருளாதார வலயங்களுக்கு வழங்கப்பட்ட விசேட ஊக்குவிப்புக்கள் கணிசமான வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சலுக்கும் அவற்றின் மீதான ஒட்டுமொத்தச் செலவுகள் மற்றும் நலன்களுக்கும் இட்டுச்செல்ல முடியுமா என்பது பற்றிய கலப்புச் சான்றுகள் இன்னும் உள்ளன. எவ்வாறாயினும், பல வெற்றிக் கதைகள் உள்ளன. மேலும் சில சந்தர்ப்பங்களில் விசேட பொருளாதார வலயங்கள் அவற்றிடம் இருந்து எதிர்பார்க்கப்படுபவற்றை நிறைவேற்றியுள்ளன என்பதுடன் அவை அமைக்கப்பட்டுள்ள நாடுகளினதும் வெளிநாட்டு முதலீட்டாளர்களினதும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றியுள்ளன.[5]இஸ்ரேல், சவுதி அரேபியா மற்றும் எகிப்தின் பிராந்தியக் கடல்களுக்கு நீட்சியடையும் அகபா விசேட பொருளாதார வலயம் ஜோர்தானின் ஹாசிமிய ராஜ்ஜியத்தினால் 2001 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இது ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து 500 மில்லியன் டொலர் மொத்த முதலீட்டுப் பெறுமதியுடைய 100 ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, 2000 பேருக்குத் தொழில்வாய்ப்புக் கிடைத்துள்ளது. ஒலம் இன்டர்நெஷனல் லிமிடட் (40.5%), கெபன் குடியரசு (38.5%), மற்றும் ஆபிரிக்க நிதிக் கூட்டுத்தாபனம் (21%) ஆகியவற்றின் ஈடுபாட்டுடன் கெபொனில் 2010 ஆம் ஆண்டில் கூட்டு முயற்சியாக அமைக்கப்பட்ட Nkok விசேட பொருளாதார வலயம் வெற்றிகரமானதாக இருந்து வருகின்றது. பெருந்தொற்று ஏற்பட்டுள்ள போதிலும் கூட கம்போடியாவின் மிகவும் வறிய பிராந்தியங்களில் ஒன்றாக இருந்த Svay Riengஇல் இருந்தான ஏற்றுமதிகள் பிரதானமாக விசேட பொருளாதார வலயங்கள் காரணமாக 2020 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டின் போது 237 மில்லியன் டொலர்களால் அதிகரித்தன. இது சீனக் கம்பனிகளின் உற்பத்தித் தளமாகப் பிராந்தியத்தினை மாற்றியது.[6]

மத்தியகிழக்கு, ஆபிரிக்கா மற்றும் தெற்காசியாவுக்கான நிதி மையமாக 2004 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட துபாய் சர்வதேச நிதி நிலையம் அதிகரித்த வர்த்தகம் மற்றும் முதலீட்டுப் பாய்ச்சல்களில் சாதனை மட்டங்களை எட்டியது. அதே நேரத்தில் வர்த்தகப் பிணக்குகளுக்கான முக்கியமான பிராந்திய மையமாகவும் DIFC மாறியது.

விசேட பொருளாதார வலயங்களின் வெற்றிக்குச் சிறந்த திட்டமிடல் மற்றும் தன்முனைப்பான முகவர்களுக்கிடையிலான மற்றும் அரசாங்கத்திற்கு இடையிலான ஒருங்கிணைப்பு அவசியமாகும். வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர்வதன் மூலம் Chachoengsao, Chonburi மற்றும் ரேயோங் மாகாணங்களை அபிவிருத்தி செய்து பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் தாய்லாந்து நிறுவனத்தினால் நிறுவப்பட்ட கிழக்குப் பொருளாதார இடைவெளிச் சட்டம் (Eastern Economic Corridor - EEC) நன்கு திட்டமிடப்பட்ட பொருளாதார வலயத்திற்கான ஒரு சிறந்த உதாரணமாகும். சர்வதேச போட்டித்தன்மையினை அதிகரிப்பதற்காகப் பிராந்தியத்தில் வெவ்வேறு பொருளாதாரத் துறைகளை உருவாக்குவதற்காகப் பூரணமானதும் பல்மட்டத்திலானதுமான அபிவிருத்தித் திட்டத்திற்கான ஏற்பாட்டினை EECசட்டம் வழங்குகின்றது. தாய்லாந்தின் பேங்கொக் பிரதேசத்திற்கும் ஏனைய பிரதேசங்களுக்கும் இடையில் காணப்படும் பொருளாதாரச் சமனிலையின்மையினையும் EEC திட்டம் தீர்க்க நாடுகின்றது.

EEC பிரதேசத்தில் தனியார் மற்றும் அரசுக்குச் சொந்தமான முதலீட்டாளர்களுக்கான ஒரு சட்டகத்தினை உருவாக்குவதற்காக EEC அலுவலகமும் தாய்லாந்து அரசாங்கமும் சீன அரசாங்கத் திணைக்களங்களுடனும் முகவர்களுடனும் பல்வேறு புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளன. பாரிய குடாப் பரப்பு (Greater Bay Area - GBA) மற்றும் EEC ஆகியவற்றுக்கிடையில் டிஜிட்டல் பொருளாதாரம், தன்னியக்கம், ஆய்வும் அபிவிருத்தி மற்றும் புத்தாக்கம் போன்ற பொதுநலன் வாய்ந்த பரப்புக்களில் கூட்டுச் சக்தியினையும் ஒத்துழைப்பினையும் உருவாக்குவதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் உதவுகின்றன. புதிய பொருளாதாரத் துறைகளின் உருவாகிவரும் தன்மைக்கு உதவுவதற்காக இற்றைப்படுத்தப்படாத அமுலிலிலுள்ள விதிகளை மிகைத்துச் செயற்படுவதற்காக EEC சட்டம் EEC அலுவலகத்திற்குச் சட்ட அதிகாரத்தினை வழங்குவதுடன் EEC பிரதேசத்தில் புதிய உற்பத்திகளையும் சேவைகளையும் பரிசீலிக்கும் முதலீட்டாளர்களுக்காகச் செம்மையான சட்டகத்தினை உருவாக்குகின்றது.[7] மொத்தத்தில், பல்வேறு பங்காளர்களை ஈடுபடுத்தும் சர்வதேச முன்னெடுப்புக்களுடன் உள்நாட்டுக் குறிக்கோள்களை விசேட பொருளாதார வலயங்கள் எவ்வாறு வெற்றிகரமாக ஒருங்கிணைக்கலாம் என்பது பற்றிய பாடங்களை EEC வழங்குகின்றது.

## கொழும்பு துறைமுக நகரம்: வாய்ப்புக்களும் பாடங்களும்

கொழும்பு துறைமுக நகரம் சிவில் சமூகக் குழுக்களினதும் பொதுமக்களினதும் கடுமையான விமர்சனங்களைச் சம்பாதித்துள்ளது. இலங்கை அரசியலமைப்பின் ஏற்பாடுகளை மீறி கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டமூலம் சக்திவாய்ந்த ஒரு பொருளாதார ஆணைக்குழுவினை உருவாக்கும் என வாதிட்டு 2021 கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டமூலத்தின் ஏற்பாடுகளுக்கு எதிராகத் தனிநபர்களும் அமைப்புக்களும் இலங்கை உயர் நீதிமன்றத்தில் மே மாதம் மனு ஒன்றினைத் தாக்கல் செய்தனர். கொழும்பு துறைமுக நகரம் இலங்கையின் கடன் சுமையினை அதிகரிக்கும் என்றும் கறுப்புப் பணத்தினைத் தூய்மையாக்குவதற்கான ஒரு மையமாகக் கொழும்பினை மாற்றும் என்றும் வரிவிதிப்பு மற்றும் நிதிசார் நடவடிக்கைகளின் மீதான பாராளுமன்ற மேற்பார்வையினைத் தடுக்கும் என்றும் இலங்கையினுள் சீனக் குடியேற்றத்தினை உருவாக்கும் என்றும் விமர்சகர்கள் வாதிட்டனர். கொழும்பு துறைமுக நகரத்தினைச் சுற்றிச் சுழலும் இந்த சர்ச்சைகள் வெற்றிடத்தில் நிகழவில்லை. சீனாவின் ஆதரவுடன் இடம்பெற்ற மற்றொரு பாரிய கருத்திட்டமான ஹம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பாக இடம்பெறும் உள்நாட்டு விவாதங்களுடனும் சர்வதேச விவாதங்களுடனும் இது தொடர்புடையது.[8]

இவற்றினை எல்லாம் தாண்டி, கொழும்பு துறைமுக நகரச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. துறைமுக நகரத்தின் மீது மேற்பார்வை செலுத்துவதற்கான அதிகாரத்தினைத் தற்போது கொழும்பு துறைமுக நகர அதிகாரசபை கொண்டுள்ளது. கீழேயுள்ள அட்டவணை காட்டுவது போல், 2021 சட்டமானது ஏனைய நாடுகளில் இயற்றப்பட்ட விசேட பொருளாதார வலயச் சட்டங்களை ஒத்ததாகக் காணப்படினும், இது வெளிப்படையாகவே கொழும்பு துறைமுக நகரத்திற்கெனத் தயாரிக்கப்பட்டதால் இது தனித்துவமானதாக விளங்குகின்றது.

### அண்மைக்கால விசேட பொருளாதார வலயச் சட்டவாக்கத்தினைக் காட்டும் அட்டவணை

| வருடம் | அரசு | ளுநுணு சட்டம் | பிரதான குறிக்கோள் |
|---|---|---|---|
| 2021 | இலங்கை | கொழும்பு துறைமுக நகர பொருளாதர ஆணைக்குழுச் சட்டம் | விசேட பொருளாதார வலயத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பதிவுகளையும் உரிமங்களையும் அதிகாரத்தினையும் ஏனைய அங்கீகாரத்தினையும் வழங்குவதற்கான அதிகாரம் கொண்ட ஆணைக்குழு ஒன்றினை நிறுவுவதற்காக. |
| 2014 | திமோர் - லெஸ்தே | Oecusse and Ataúro Law இன் சமூகச் சந்தைப் பொருளாதார விசேட வலயம் | Oecusse, Ataúro,விசேட பொருளாதார வலயத்தினை நிறுவுகின்றது. |
| 2021 | சீனா | சீன மக்கள் குடியரசின் ஹைனன் சுதந்திர வர்த்தகத் துறைமுகம் | சீனப் பண்புகளுடன் உயர் மட்ட ஹைனன் சுதந்திர வர்த்தகத் துறைமுகத்தினை நிர்மாணிப்பதற்கு |

| வருடம் | அரசு | ஞநுணு சட்டம் | பிரதான குறிக்கோள் |
|---|---|---|---|
| 2015 | கென்யா | விசேட பொருளாதார வலயச் சட்டம் 2015 | விசேட பொருளாதார வலயங்களை நிறுவுவதற்காகவும் உலகளாவிய முதலீடு மற்றும் உள்நாட்டு முதலீடு ஆகியவற்றினை மேம்படுத்தி வசதிப்படுத்துவதற்காகவும் |
| 2014 | மியன்மார் | மியன்மார் விசேட பொருளாதார வலயச் சட்டம் | விசேட பொருளாதார வலயங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் பாய்ச்சலை மேம்படுத்தி தேசிய பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தின் பிரதான குறிக்கோள்களுக்கு உதவுவுதற்கு |
| 2015 | பொட்ஸ்வானா | விசேட பொருளாதார வலயங்கள் சட்டம் 2015 | விசேட பொருளாதார வலயங்களை உருவாக்கி, அபிவிருத்தி செய்து முகாமைத்துவம் செய்வதற்கான ஏற்பாடுகளை வழங்கல் |
| 2021 | வெனிசூலா | வெனிசூலா விசேட பொருளாதார வலயங்கள் சட்ட முறைமை | விசேட பொருளாதார வலயங்களின் உருவாக்கம், ஏற்பாடு, இயக்கம் மற்றும் நிர்வாகத்தினை ஒழுங்கமைப்பதற்காக |
| 2014 | தென்னாபிரிக்கா | 2014 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க விசேட பொருளாதார வலயங்கள் சட்டம் | விசேட பொருளாதார வலயங்களின் நியமனம், மேம்பாடு, அபிவிருத்தி, இயக்கம் மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றுக்கான ஏற்பாடுகளை வழங்குவதற்காக |
| 2020 | அங்கோலா | சுதந்திர வர்த்தக வலயங்கள் சட்டம் | சுதந்திர வர்த்தக வலயங்களை உருவாக்குவதற்கான விதிகளை நிறுவுகின்றது |
| 2012 | பாகிஸ்தான் | விசேட பொருளாதார வலயங்கள் சட்டம் 2012 | உள்நாட்டு மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்கான சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் சட்டகத்தின் ஏற்பாட்டின் மூலமாக விசேட பொருளாதார வலயங்களை உருவாக்கி, அபிவிருத்தி செய்து இயக்குவதற்கு |

மூலம்: ஆசிரியர்களின் தொகுப்பு (2021)

தெற்காசியாவில் நிதி மற்றும் சேவை மையமாகவும் உலகத் தரம் வாய்ந்த நகரமாகவும் கொழும்பு துறைமுக நகரம் மேம்படுத்தப்பட்டு வருகின்றது. சேவையினை வழங்குகின்ற இலங்கையின் முதலாவது விசேட பொருளாதார வலயம் என்கின்ற ரீதியில், வெற்றிகரமானதாக மாறுகையில் துறைமுக நகரமானது பிராந்தியத்தினுள் பெரும் மாற்றக் காரணியாக மாறமுடியும். இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ச அண்மையில் ஆற்றிய உரையில் துறைமுக நகரம் முதல் ஐந்து வருடங்களில் 200000 தொழில்களை உருவாக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.[9]துறைமுக நகரம் 2041 ஆம் ஆண்டில் பூர்த்தியாகும்போது இலங்கையின் பொருளாதாரத்திற்கு வெளிநாட்டு நேரடி முதலீடு என்ற அடிப்படையில் வருடமொன்றுக்கு 740 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பங்களிப்பாக வழங்கும் என எதிர்வுகூறப்படுகின்றது. மிடுக்கான மற்றும் பசுமையான நகரங்களை நோக்கிய நகர்வுடன் ஒத்திசைகின்ற நிலைபேறான விழுமியங்களை துறைமுக நகர அமுல்படுத்தல் பின்பற்றும். இவை உலகளாவிய போக்குகளுடன் ஒத்திசைகின்ற பாராட்டத்தக்க குறிக்கோள்களாகும். ஆனால் இவற்றின் செயற்திறனைக் காலம் செல்லும்போது மட்டுமே மதிப்பிட முடியும்.

## முடிவுரை

விசேட பொருளாதார வலயங்கள் எதிர்வுகூறத்தக்க அரசாங்கக் கொள்கைகளையும் சிறந்த சர்வதேச பொருளாதார உறவுகள் முகாமைத்துவத்தினையும் முறையான உட்கட்டமைப்பினையும் தேவைப்படுத்துகின்ற நீண்டகாலக் கருத்திட்டங்களாகும். ஏனைய முக்கியமான கருதுகோள்களுள் கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த அமைவிடம், ஒட்டுமொத்த அபிவிருத்தி உபாயமார்க்கத்துடன் வலய உபாயமார்க்கத்தினை ஒருங்கிணைத்தல், சந்தையினைப் புரிந்துகொண்டு ஒப்பீட்டு நலன்களைச் சாதுரியமாகப் பயன்படுத்தல் ஆகியவை உள்ளடங்குகின்றன. இவற்றினை அடைவதற்கு உறுதியானதும் மீண்டெழுந்தன்மை உடையதுமான சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் இன்றியமையாதவையாகும்.உலகப் பொருளாதாரம் கொவிட் 19 பெருந்தொற்றில் இருந்து மீண்டுவருகையில் விசேட பொருளாதார வலயங்களை முகாமைத்துவம் செய்வது கடினமானதாக இருக்கலாம். ஆனால் அதே நேரத்தில் நாடுகளும் உற்பத்தியாளர்களும் தனித்த மூலங்களுடனான தொடர்பினைக் குறைத்து GVC க்களைச் சுருக்குவதைப் பரிசீலித்து வருவதால் இந்த முகாமைத்துவம் மிக முக்கியமானதாக இருக்கின்றது.

விசேட பொருளாதார வலயங்கள் வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கான நூற்றுக்கு நூறுவீதமான உத்தரவாதமல்ல அல்லது பொருளாதார அபிவிருத்தி மற்றும் வெற்றிக்கான மந்திரக்கோலல்ல. விசேட பொருளாதார வலயக் கருத்திட்டங்களின் சிக்கற்தன்மையும் அதில் சம்பந்தப்பட்டுள்ள பல்மட்டப் பிரச்சினைகளும் பூரணமான பல்பண்புப் பகுப்பாய்வினைத் தேவைப்படுத்துகின்றன. மேலும், சட்டப் பகுப்பாய்வுக்கு மேலதிகமாக, பொருளியலாளர்கள் மற்றும் சர்வதேச உறவுகள் நிபுணர்களின் ஈடுபாடு விசேட பொருளாதார வலயங்களினால் எழக்கூடிய புவியியல் பொருளாதார அபாயநேர்வுகள் பற்றிய உலகளாவிய மேல்நோக்கினை வழங்கலாம். அரசாங்கங்கள் அவதானமாக இருக்கவேண்டும். நிபுணர் ஆலோசனையினைப் பெறத் தயாராக இருக்கவேண்டும் என்பதுடன் எழக்கூடிய பிரச்சினைகளை அவை எழுகையிலேயே தீர்ப்பதற்குத் தயாராக இருக்கவேண்டும்.

வினைத்திறன்மிக்க சட்டங்கள், வெளிப்படைத்தன்மைமிக்க விசேட பொருளாதார வலய உடன்படிக்கைகள் மற்றும் புதிய முதலீட்டாளர்களைக் கவரக்கூடிய அதன் ஆற்றல் ஆகியவற்றிலேயே கொழும்பு துறைமுக நகரத்தின் நீண்ட கால வெற்றி தங்கியிருக்கும். பொருளாதாரக் குறிகாட்டிகளுக்கு மேலதிகமாக, கொழும்பு விசேட பொருளாதார வலயத்தின் பரந்த வெற்றி மற்றும் செல்லுபடியாகும் தன்மை ஆகியவை பொதுமக்களின் கரிசணைகளுக்கும் மனித உரிமைகள் பாதுகாப்புக்கும் சமமான முக்கியத்துவத்தினை வழங்கும் ஒழுங்குபடுத்துனர்களின் ஆற்றலலேயே தங்கியுள்ளன. முதலீடுகள் சுற்றாடல் பாதுகாப்பினைக் கீழறுக்கவில்லை என்பதை உறுதிப்படுத்த அதிகாரசபையும் இலங்கை அரசாங்கமும் அரசாங்க முகவர்களும் கருத்திட்ட உருவாக்குனர்களும் அவர்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டும். இந்த ஆய்வு ஆவணத்தில் பரிசீலிக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டுக்கள், குறிப்பாக தாய்லாந்திலுள்ளEECகாட்டியுள்ளதைப் போல், சீனப் பங்காளர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படும் முதலீட்டுக்கு மேலதிகமாக வெவ்வேறு பிராந்தியங்கள் மற்றும் பங்காளர்களிடம் இருந்து வெளிநாட்டு நேரடி முதலீட்டினைக் கவர்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை இலங்கை உறுதிப்படுத்தவேண்டும்.

## உசாவல்கள்


Bunthoeun C, ‘Svay Rieng மூலமான ஏற்றுமதிகள் $237 மில்லியனால் அதிகரித்துள்ளன’*Khmer Times* (16 April 2020) <https://www.khmertimeskh.com/713731/exports-through-svay-rieng-increase-by-237-million/> accessed 16 July 2020

Chaisse J and Dimitropoulos G, ‘சர்வதேச பொருளாதாரச்சட்டத்தில் விசேட பொருளாதார வலயங்கள்: ஒருதலைப்பட்சமான பொருளாதாரச் சட்டத்தினை நோக்கி’ (2021) 24 Journal of International Economic Law 229

Cotula L and Mouan L, ‘விசேட பொருளாதார வலயங்கள்:அபிவிருத்திக்கான இயந்திரங்களா அல்லது சுரண்டல் மையங்களா?’ (IIED Briefing October 2018) <https://pubs.iied.org/sites/default/files/pdfs/migrate/17481IIED.pdf> accessed 16 July 2021

Hung H, ‘இலங்கையின் ஹம்பாந்தோட்டை துறைமுகம்: சீனாவின் கடன் இராஜதந்திரம் பற்றிய ஓர் எடுத்துக்காட்டு’ Institute for Public Policy, and Leadership and Public Policy Executive Education at the Hong Kong University of Science and Technology Research Report 2020026D (2021) <https://cutt.ly/RmGMrXY> accessed 15 July 2021

Liu Q, Wong S and Pong J, ‘ஹொங்கொங் எதிர் சென்ஜென்: மேலாண்மைக்கான போராட்டம்’ *Financial Times* (21 January 2020) <https://www.ft.com/content/8cf60164-2209-11ea-92da-f0c92e957a96> accessed 15 July 2021

Mercurio B and Sejko D, ‘Holes in the Silk: Investor Protection under China’s Belt and Road Initiative’ (2019) 14 Global Trade and Customs Journal 5

Sejko D and Park A, ‘ஆசியாவில் பெல்ட் அன்ட் ரோட் முன்னெடுப்பு: தாய்லாந்து’ (December 2020) Hong Kong University of Science and Technology Institute for Emerging Market Studies Research Paper <https://cutt.ly/OmGCE3Z> accessed 15 July 2021

Sharma P, ‘இலங்கையில் சீனாவின் அதிகரித்து வரும் செல்வாக்கு 1.4 பில்லியன் டொலர் துறைமுக நகரக் கருத்திட்டத்துடன் வளர்ச்சியடைவது பற்றிய இந்தியாவின் கரிசணைகள்’*South China Morning Post* (8 June 2021) <https://www.scmp.com/week-asia/economics/article/3136486/indias-concerns-over-chinas-rising-influence-sri-lanka-grow> accessed 15 July 2021

UNCTAD, ‘உலக முதலீட்டு அறிக்கை 2019: விசேட பொருளாதார வலயங்கள்’ (UNCTAD 2019)

Yuan Y, Guo H, Xu H, Li W, Luo S, Lin H and Yuan Y, ‘சீனாவின் முதலாவது விசேட பொருளதார வலயம்: டெங் டி இல் சென்ஜென் எடுத்துக்காட்டு (ed), *Building Engines for Growth and Competitiveness in China Experience with Special Economic Zones and Industrial Clusters* (The World Bank 2010)55

Zeng D, ‘விசேட பொருளாதார வலயங்களின் கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் மற்றும் அவற்றின் தாக்கங்கள்’ (2021) 24 Journal of International Economic Law 259

# குறிப்புக்கள்

2 Yiming Yuan, Hongyi Guo, Hongfei Xu, Weiqi Li, Shanshan Luo, Haiqing Lin and Yuan Yuan 'சீனாவின் முதலாவது விசேட பொருளாதார வலயம்: டக்ளஸ் சிகுவா செங்கில் சென்ஜென் எடுத்துக்காட்டு (ed), *Building Engines for Growth and Competitiveness in China Experience with Special Economic Zones and Industrial Clusters* (The World Bank 2010)55, 57 (noting that Shenzhen's GDP was US$2.87 million in 1978).

3 Qianer Liu, Sue-Lin Wong and Jane Pong, 'ஹொங்கொங் எதிர் சென்ஜென்: மேலாண்மைக்கான போட்டி' *Financial Times* (21 January 2020) <https://www.ft.com/content/8cf60164-2209-11ea-92da-f0c92e957a96> accessed 15 July 2021

4 Julien Chaisse and Georgios Dimitropoulos, 'சர்வதேச பொருளாதாரச் சட்டத்தில் விசேட பொருளாதார வலயங்கள்: ஒருதலைப்பட்சமான பொருளாதாரச் சட்டத்தினை நோக்கி' (2021) 24 Journal of International Economic Law 229.

5 மிகவும் சிறப்பாகச் செயற்படும் விசேட பொருளாதார வலயங்கள் பினான்சியல் டைம்ஸ் மற்றும் FDI Intelligence Free Zonesவிருதுகளினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதில் வெற்றியீட்டியுள்ள விசேட பொருளாதார வலயங்களைக் கோடிட்டுக்காட்ட நாடும் விசேட பொருளாதார வலய விருதுகளை ஐக்கிய நாடுகளும் உருவாக்கியுள்ளது.

6 Chhut Bunthoeun, 'Svay Rieng மூலமான ஏற்றுமதிகள் $237 மில்லியன்களால் அதிகரித்துள்ளன'*Khmer Times* (16 April 2020)<https://www.khmertimeskh.com/713731/exports-through-svay-rieng-increase-by-237-million/>accessed 16 July 2020.

7 EEC கருத்திட்டங்களின் முக்கியத்துவம் பற்றிய விரிவான பகுப்பாய்விற்காகப் பார்க்க Dini Sejko and Albert Park, 'The Belt and Road Initiative in Asia: Thailand' (December 2020) Hong Kong University of Science and Technology Institute for Emerging Market Studies Research Paper <https://cutt.ly/OmGCE3Z> accessed 15 July 2021.

8 Holvert Hung,'இலங்கையின் ஹம்பாந்தோட்டை துறைமுகம்: சீனாவின் கடன் இராஜதந்திரத்திற்கான எடுத்துக்காட்டு' Institute for Public Policy, and Leadership and Public Policy Executive Education at the Hong Kong University of Science and Technology Research Report 2020026D (2021) <https://cutt.ly/RmGMrXY> accessed 15 July 2021.

9 Pranay Sharma,''இலங்கையில் சீனாவின் அதிகரித்து வரும் செல்வாக்கு 1.4 பில்லியன் டொலர் துறைமுக நகரக் கருத்திட்டத்துடன் வளர்ச்சியடைவது பற்றிய இந்தியாவின் கரிசணைகள்'*South China Morning Post*(8 June 2021)<https://www.scmp.com/week-asia/economics/article/3136486/indias-concerns-over-chinas-rising-influence-sri-lanka-grow> accessed 16 July 2021.

# துறைமுக நகரம், ஆளுகை மற்றும் மக்கள்

*பேராசிரியர் சாவித்ரி குணசேகர*[1]*

*கொழும்புத் துறைமுக நகரத்தின் முன்னெடுப்பினை, இலங்கையில் ஆளுகை நிறுவனங்கள் மற்றும் செயன்முறைகள் மீதான அதன் தாக்கத்தின் அடிப்படையிலும் இலங்கையின் எதிர்காலத்தின் மீதான அதன் தாக்கத்தின் அடிப்படையிலும் கட்டுரை ஆசிரியரான பேராசிரியர் சாவித்ரி குணசேகர ஆராய்கின்றார். இவரின் பகுப்பாய்வு, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டமூலத்தினையும் சட்டமூலத்தின் அரசியலமைப்புடனான பொருந்துந்தன்மையினை உயர் நீதிமன்றத்தில் ஆட்சேபிக்கும் பொது நலன் வழக்காடலையும் உள்ளடக்குவதுடன் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புப் பற்றிய பகுப்பாய்வொன்றினையும் வழங்குகின்றது.*

## 1. அறிமுகம்

கொழும்பு மாநகரின் எழில்கொஞ்சும் இடங்களில் ஒன்றில் இருந்து மீட்கப்பட்ட பிரதேசம் உள்ளடங்கலாக, சமுத்திரமும் கடற்கரையும் அழகுற விரிந்து வியாபித்திருக்கும் இடத்தில் செயற்கையாக உருவாக்கப்பட்ட 446.6153 ஹெக்டேயர் பிரதேசமே இப்போது கொழும்புத் துறைமுக நகரமாக அமைந்திருக்கின்றது. இந்தப் பிரதேசம் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் பிரத்தியேக கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவத்தின் கீழ் ஒரு விசேட பொருளாதார வலயமாக மாறும். இலங்கைப் பாராளுமன்றத்தினால் 2021 மே 19 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கக் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தினால் விசேட பொருளாதார வலயம் மற்றும் ஆணைக்குழு ஆகியன நிறுவப்பட்டுள்ளன. விசேட பொருளாதார வலயங்களை உருவாக்கும் கருத்தியல் ஒரு புதிய கருத்தியல் அல்ல. இவ்வாறான வலயங்கள் ஆசியா மற்றும் ஆபிரிக்காவின் பல பாகங்களில் காணப்படுகின்றன.[1] இலங்கையின் கொழும்புத் துறைமுக நகர விசேட பொருளாதார வலயம் - அல்லது “கொழும்புத் துறைமுக நகரம்” என்பது சட்டத்தின் 1 ஆம் அட்டவணையில் (பிரிவு 2) நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒரு பிரதேசமாகும். அட்டவணையானது, மேல் மாகாணத்தில் கொழும்பில் இவ் வலயத்திற்காக ஒதுக்கப்பட்ட காணி ஒதுக்கீட்டினைத் தெளிவுபடுத்துகின்றது. இது மீட்கப்பட்ட நிலத்தினையும் அண்டியுள்ள ஏனைய பிரதேசங்களையும் உள்ளடக்குகின்றது.

“சேவை நாட்டம் கொண்ட தொழிற்துறைகளுக்கு” உதவி வழங்கிப் “பல்வகைமைமிக்க சேவைப் பொருளாதாரம்” என்னும் விதத்தில் இந்த விசேட பொருளாதார வலயம் செயற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. “வலயத்தினுள் வியாபாரம் செய்வதை இலகுவாக்கலின் மேம்பாட்டிற்கான

1 * கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் சட்டப் பேராசிரியர்.

ஒற்றைச் சாளர முதலீட்டு வசதிப்படுத்துனர்'' என சட்டத்தின் முன்னுரையிலும் 6 ஆம் பிரிவிலும் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு (CPCEC) விபரிக்கப்பட்டுள்ளது. சர்வதேச வர்த்தகம், கடல்வழிப் போக்குவரத்து, கரைகடந்த வங்கிச் சேவை மற்றும் நிதிச் சேவைகள், தகவல் தொழில்நுட்ப வெளிவளம், சுற்றுலாத்துறை மற்றும் களியாட்டம் போன்ற பரப்புக்களில் ஒரு ''சர்வதேச மையமாக'' இயங்கி, வெளிநாட்டு நேரடி முதலீட்டினை வசதிப்படுத்துவதற்காகத் தனது விசாலமான உரிமைகளையும் அதிகாரங்களையும் பயன்படுத்துவதே ஆணைக்குழுவிற்கான ஆணையாகும். சட்டத்தின் முன்னுரைக்கமைய, ''அரச மற்றும் தனியார் பொருளாதார நடவடிக்கை'' மூலம் துரித தேசிய அபிவிருத்தியினை முன்னெடுப்பதற்கான தனது கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்காகவே கொழும்புத் துறைமுக நகரக் கருத்திட்டம் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. மேலதிக முதலீட்டினை மேம்படுத்தல், வலயத்தினுள் புதிய தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதல், ''தொழில்நுட்ப, தொழில்முறை மற்றும் தொழில்முனைவு நிபுணத்துவத்தினை'' வசதிப்படுத்தல் ஆகியவை தொடர்புடைய குறிக்கோள்களாகக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

கொழும்புத் துறைமுக நகர முன்னெடுப்புக்காகக் காணி மீட்பு நடவடிக்கை தொடங்கப்பட்டதில் இருந்தே அது சர்ச்சைக்குரிய ஒரு விடயமாக இருந்து வருகின்றது. இக்கருத்திட்டத்தில் சீன அரசாங்கத்தின் வகிபாத்திரம், இந்தப் பங்காண்மையின் தாக்கம், தேசிய இறைமைக்கான அச்சுறுத்தல்கள் ஆகியவை கலந்துரையாடல்களினதும் விவாதங்களினதும் அங்கங்களாக இருந்து வருகின்றன. பாதகமான சுற்றாடல் அழிவுகளுக்கான சாத்தியம், கருத்திட்டத்தின் நீண்டகாலத் தாக்கம் தொடர்பாகக் கரிசனைகளை எழுப்பியுள்ளது.

கணிசமான பங்கிலாபங்களைக் கொண்டுவருகின்ற மற்றும் பொருளாதாரத்திற்கும் மக்களுக்கும் மேல்மட்டத்தில் இருந்து வரும் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற ஒரு தனிவேறான வியாபாரப் பிரதேசமாகக் கொழும்புத் துறைமுக நகரத்தினை முகாமை செய்ய முடியும் எனவும் அடுத்த ஐந்து வருடங்களில் 200,000 தொழில்கள் உருவாக்கப்படும், இலங்கைத் தொழிலாளர்களுக்கு வெளிநாட்டு நாணயத்தில் சம்பளம் வழங்கப்படும், வலயத்தின் இயக்கத்தின் பிரதான பங்காளரான சீனா உலகளாவிய ஒரு பொருளாதார வல்லரசு, இவ்வாறான ஒரு பங்காண்மை என்பது வெளிநாட்டுச் சக்தி ஒன்றுக்கு இறைமையினை மாற்றம் செய்வதாக அமையாது, ஆனால் அது வெளிநாட்டு உறவுகளில் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பாக இருக்கும், இது இலங்கையின் பாரம்பரிய அணிசேராக் கொள்கையுடனும் ஒத்திசைகின்றது எனவும் ஆதரவாளர்கள் வாதிட்டு வருகின்றனர்.

சட்டம் நிறைவேற்றப்படுவதற்காகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மனுதாரர்களாகப் பரந்த வீச்சிலான அரசியல் சார்ந்த மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களினாலும் 14 இடைவரு மனுதாரர்களினாலும் உயர் நீதிமன்றத்தில் ஆட்சேபிக்கப்பட்டது. அரசியலமைப்பின் எந்த ஏற்பாடுகளுடனும் வரைவுச் சட்டமூலம் முரண்படவில்லை எனச் சட்டத்துறைத் தலைமையதிபதி அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளார். இருப்பினும், சட்டவாக்கத்தில் உள்ள ஏற்பாடுகளில், 26 ஏற்பாடுகள் மூன்றில் இரண்டு விசேட பெரும்பான்மையொன்றினாலும் 9 ஏற்பாடுகள் விசேட பெரும்பான்மையொன்றினாலும் மக்கள் தீர்ப்பினாலும் மாத்திரமே இயற்றப்படலாம் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.[2] சட்டமூலம் திருத்தப்பட்டுச் சட்டவாக்கம் எளிய பெரும்பான்மையினால் சட்டமாக்கப்பட்டது. கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் இப்போது இந்த நாட்டின் சட்டங்களில் ஒன்றாகும்.

கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டமூலத்தின் மீதான வழக்காடலில் வாதிடப்பட்ட இரண்டு பிரதான விடயங்கள் சில முக்கியமான சட்ட மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பானவையாகும். இதில் ஒன்று, புதிதாக மீட்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகரப் பிரதேசத்தின் முகாமைத்துவத்தினையும் கட்டுப்பாட்டினையும் ஆணைக்குழுவுக்கு மாற்றுவதற்கான ஜனாதிபதியின் அதிகாரமாகும். மற்றைய விடயம், கொழும்பு நிர்வாக மாவட்டத்தின் எல்லைகளினுள் கொழும்புத் துறைமுக நகரத்தின் மீட்கப்பட்ட பிரதேசத்தினை உள்ளடக்குவதன் மூலம் கொழும்பு நிர்வாக மாவட்டத்தின் வரைவிலக்கணத்தினை மாற்றுவதற்கான நிறைவேற்றுத்துறையின் அதிகாரம். இந்த இரண்டு விடயங்களும் அடுத்துவரும் பிரிவுகளில் பரிசீலிக்கப்படும்.

## 2. கொழும்புத் துறைமுக நகரம் என அழைக்கப்படும் நிலத்தின் ஆள்புல அந்தஸ்து

கொழும்புத் துறைமுக நகரத்தில் செயற்கையாக உருவாக்கப்பட்ட நிலப்பரப்பு அரசியலமைப்பின் 5 ஆம் உறுப்புரையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு இலங்கைப் பிராந்தியத்தின் ஒரு பகுதியல்ல என மனுதாரர்களில் ஒருவரின் சட்டத்தரணி வாதிட்டார். செயற்கையாக மீட்கப்பட்ட நிலம் ''முடிக்குரிய காணி'' அல்ல என்னும் காரணத்தினால், முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவுக்குக் (CPCEC) காணி அளிப்பு ஒன்றினை ஜனாதிபதியினால் வழங்க முடியாது என அவர் குறிப்பிட்டார். மேலதிக மன்றாடியார் தலைமையதிபதியின் எதிர்வாதத்தினை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றம், இலங்கையின் ஆள்புலத்தின் ஒரு பகுதியான மீட்கப்பட்ட பிரதேசமே கொழும்புத் துறைமுக நகரம் என முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தின் (1947) (இப்போது அரச காணிகள் கட்டளைச்சட்டம் என மீள்பெயரிடப்பட்டுள்ளது) பிரிவுகள் 58, 60 மற்றும் 110 (1) தெளிவாகச் சுட்டிக்காட்டுவதாகத் தீர்ப்பளித்தது. மீள்பெயரிடப்பட்ட அரச காணிகள் கட்டளைச்சட்டத்தின் மேற்குறிப்பிட்ட பிரிவுகளைக் குறிப்பீடு செய்த நீதிமன்றம், ''கரை முனங்கினை (foreshore) அல்லது கடற்படுக்கையினை மீட்பதற்கும் அவ்வாறு கடலில் இருந்து மீட்கப்பட்ட நிலத்தின் எப்பிரதேசங்களிலும் கட்டடங்களை எழுப்புவதற்கும்'' இப்பிரிவுகள் ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்குவதாகக் குறிப்பிட்டது. அவ்வாறு மீட்கப்பட்ட பிரதேசத்தினைக் குத்தகைக்கு விடுவதற்கு அல்லது வேறுவிதமாக உரிமை மாற்றுவதற்கு (முடியினைத் தற்போது பதிலீடு செய்துள்ளவரான) ஜனாதிபதிக்கு கட்டளைச்சட்டம் வலுவூட்டுகின்றது என்னும் முடிவான தீர்ப்பினைக் கனம் நீதிபதிகள் வழங்கினர்.[3]

இலங்கையில் முடிக்குரிய காணிகளையும் கரை முனங்கினையும் (சட்டத் தலைப்பு) முகாமை செய்வதற்காகவும் கட்டுப்படுத்துவதற்காகவும் அவ்வாறான காணிகளை அளிப்பதற்கும் உரிமை மாற்றுவதற்கும் ஏற்பாடுகளை வழங்குவதற்காக பிரித்தானியக் காலனித்துவ அரசாங்கத்தினால் 1947 ஆம் ஆண்டு முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டம் இயற்றப்பட்டது. ''இராணியின் பெயரினாலும் இராணியின் சார்பிலும்'' முடிக்குரிய காணிகளின் முன்னுரிமையான அல்லது இடையேற்பாடான அளிப்பினை வழங்குவதற்கும் விற்பதற்கும் குத்தகைக்கு விடுவதற்கும் அல்லது வேறுவிதமாக உரிமை மாற்றுவதற்கும்'' தேசாதிபதியினால் முடியும்.(பி. 2 (1)இ (2). 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் பின்னர் தயாரிக்கப்பட்ட 1980 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட சட்டவாக்கங்கள் அமுலாக்கப்பட்டு வந்து நிறைவேற்று அதிகாரம் என்ற சொல்லுக்கு ''ஜனாதிபதி'' என்னும் சொல்லும் ''முடிக்குரிய காணிகள்'' என்னும் சொல்லுக்கு ''அரச காணிகள்'' என்ற சொல்லும் பதிலீடு செய்யப்பட்டன. காணிகளை அளிப்பதற்கான ஜனாதிபதியின் அதிகாரங்களை 20 ஆவது திருத்தத்தினால் திருத்தப்பட்டவாறான உறுப்புரை 33(ஊ) (முன்பு 19 ஆவது திருத்தத்தின் உறுப்புரை 33(2)(ஊ)) குறித்துரைக்கின்றது. கனம் நீதிபதிகளின் அபிப்பிராயம், அரச காணிகளின் வரைவிலக்கணம் பற்றிய அரச காணிகள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுடனும் அரச காணிகள் மீதான ஜனாதிபதியின் அதிகாரம் பற்றிய கட்டளைச்சட்டத்துடனும் அரசியலமைப்புடனும் தெளிவாக இயைபுறுகின்றது.

ஆயினும், காலனித்துவ நியதிச்சட்டம் ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட ஏற்பாடுகளையும், 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் 3 ஆம் உறுப்புரையில் பொதிந்துள்ள மக்களின் இறைமையின் புதிய நியமத்தின் மீதான அவற்றின் தாக்கங்களையும், காணி போன்ற முக்கியமான வளத்தில் மக்களின் உரிமைகளையும் பற்றிப் பகுப்பாய்வு செய்வதற்கான ஒரு வாய்ப்பினைச் சட்டத்தரணியும் நீதிமன்றமும் தவறவிட்டமை துரதிர்ஷ்டவசமானதாகும்.

1947 ஆம் ஆண்டு முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டம் இயற்றப்பட்டபோது, இன்றியமையாத முக்கியத்துவமிக்க பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சொத்தான காணிகள் மீதான அரசாங்கத்தின் கட்டுப்பாட்டினை வலிதாக்குவதே பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் காலனித்துவச் சட்டவாக்க நிகழ்ச்சிநிரலின் ஓர் அங்கமாகக் காணப்பட்டது. சர்ச்சைக்குரிய முடிக்குரிய காணிகள் அத்துமீறல் கட்டளைச்சட்டம் உள்ளடங்கலாக, 1840 முதல் 1947 வரை இயற்றப்பட்ட பல தொடரான ஏனைய சட்டங்கள் காணிக்கான உரித்துக்களைக் காலனித்துவ அரசாங்கம் கையாளுவது தொடர்பானவையாகவும் அக்காணிகளின் உரித்தினை எடுப்பதை ஒழுங்குபடுத்துவது தொடர்பானவையாகவும் அரசின் நிறைவேற்றுத் தலைமையான முடியின் அதிகாரம் தொடர்பானவையாகவும் காணப்பட்டன. உள்ளூர் மக்கள் காணிகளின் மீதான அவர்களின்

உரிமைகளை இழந்தபோதிலும், சமுதாயத்தின் நன்மைக்காகக் காணிகளைப் பயன்படுத்துதல் என்பதே கொள்கைக்கான தர்க்க ரீதியான காரணமாகக் குறிப்பிடப்பட்டது.

காணி என்னும் இந்த முக்கியமான வளத்தினை மக்களுக்கான நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் பொது நலனுக்காகவும் முடி அல்லது அரசு வைத்திருத்தல் என்னும் கருத்தியல், காலனித்துவக் காலப்பகுதி முழுவதும் காணிக் கொள்கைகளிலும் சட்டவாக்கத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாவது காலனித்துவக் காணி ஆணைக்குழுவின் படி (1927 – 1929) முடிக்குரிய காணி என்பது ‘‘அவ்வாறான காணிகள் அரசாங்கத்தின் தனிப்பட்ட நலனுக்காக அல்லது அரசாங்கத்தின் நன்மைக்காக முடியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டவில்லை, ஆனால், எந்த ஒரு நபரிடமும் ஒப்படைக்கப்பட்டிராத அனைத்துக் காணிகளும் பொதுச் சமுதாயத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராக முடியினால் வைத்திருக்கப்படவேண்டும் என அனைத்துக் காணிகளையும் குறித்துரைப்பதற்கான சௌகரியமான ஒரு சொற்பதமாகவே அது இருந்தது.’’[4] உண்மையில், 1947 ஆம் ஆண்டின் முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தினை இயற்றுகையில் இந்தத் தர்க்கத்தினைப் பிரித்தானியக் காலனித்துவ அரசாங்கம் குறிப்பிட்டிருந்தது. ‘‘பொதுமக்களின் பாதுகாவலனாக முடியின் உரித்தாண்மை உரிமைகளைத்’’ தெளிவுபடுத்துவதே குறிக்கோளாக இருந்தது. இலங்கையின் காணிச் சட்டத்தின் பிரதான மூலமாக இருக்கும் ரோமன் டச்சுச் சட்டத்தின் நியமங்களையும் கருத்தியல்களையும் கூடப் பிரித்தானியக் காலனித்துவ ஆட்சி மூல ஆதாரமாகக் குறிப்பிட்டிருந்தது. எனவே ரோமன் டச்சுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் ஒரு பிரிவான ‘‘மக்களுடைமை’’ என்னும் அனைத்து மக்களுக்கும் சொந்தமான கடல் போன்ற சொத்துக்களும் ‘‘அரசுடைமை’’ என்னும் அரசுக்குச் சொந்தமான பொது ஆறு மற்றும் ஓடைகள் மற்றும் பொது வீதிகள் மற்றும் கடற்கரைகள் போன்ற சொத்துக்களும் மக்களின் நலனுக்காக அரசினால் வைத்திருக்கப்படுகின்றன என்பதை முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டம் அங்கீகரித்துள்ளது.[5]

முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தில் பிரதிபலிக்கப்படுகின்றவாறாக, ரோமன் டச்சுச் சட்டம் மற்றும் பிரித்தானியக் காலனித்துவச் சட்டம் ஆகியவற்றின் கருத்தியல்கள் *புலங்கலம வழக்கில்* (எப்பாவல கனிய வள அகழ்வு) நீதிபதி ஏ. ஆர். பி. அமரசிங்க வழங்கிய தீர்ப்பில் சுதேச சட்ட, சமூக மற்றும் பொருளாதார விழுமியங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. ‘‘நிறைவேற்று அதிகாரத்திடம் உடைமையாக்கப்பட்டுள்ள இயற்கை வளங்கள் மீதான அரசின் சட்ட உரித்தாண்மை நம்பிக்கைப் பொறுப்பாக வைத்திருக்கப்படவேண்டும் அல்லது மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்தப்படவேண்டும்’’ என்பதற்கான மற்றும் ‘‘நிறைவேற்று அதிகாரத்தின் பிரயோகம் நீதிமுறை மீளாய்விற்கு உட்படுகின்றது’’ என்பதற்கான அடிப்படையினை அரசியலமைப்பு வழங்கியுள்ளது என்ற கருத்தினையும் கனம் நீதிபதி வெளியிட்டுள்ளார்.’’[6]

மக்களுக்காக நம்பிக்கைப் பொறுப்பின் அடிப்படையில் வைத்திருக்கப்படும் அரச காணிகள் என்னும் கண்ணோட்டத்தில் மேற்கொள்ளப்படும் அரச காணிகள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின் ஒரு பகுப்பாய்வு, ஆணைக்குழுவில் கொழும்புத் துறைமுக நகரக் காணியினை உடைமையாக வைத்திருப்பதற்கான ஜனாதிபதியின் அதிகாரத்தின் மீதான அரசியலமைப்பு ரீதியான உட்குறிப்பீடுகளினதும் ‘‘அரசாங்கம் சந்தைப்படுத்தக்கூடிய காணி’’ மற்றும் ‘‘கருத்திட்டக் கம்பனி சந்தைப்படுத்தக்கூடிய காணி’’ போன்ற சட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள கருத்தியல்களினதும் ஆழமான பகுப்பாய்வுக்குப் பங்களிப்பு வழங்கியிருக்கலாம். அத்துடன் நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம், மாநகரசபைக் கட்டளைச்சட்டம் மற்றும் பட்டினம் மற்றும் நாடு திட்டமிடல் கட்டளைச்சட்டம் போன்ற காணிப் பாவனை பற்றிய, கொழும்புத் துறைமுக நகரத்தினுள் பிரயோகிக்கத்தக்க ‘‘எழுத்திலான சட்டங்களில்’’ இருந்தான முக்கியமான சட்டவாக்கங்கள் விலக்கிவைக்கப்பட்டுள்ளன.[7]

## 3. மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தின் ஒரு பகுதியாகத் துறைமுக நகரம்

‘‘கொழும்புத் துறைமுக நகரம்’’ என அழைக்கப்படும் மீட்கப்பட்ட நிலப் பரப்பினை உள்ளடக்குவதற்காக இந்தச் சட்டத்தின் முதலாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள கொழும்பு நிர்வாக மாவட்டத்தின் எல்லைகள் பாராளுமன்றத் தீர்மானம் ஒன்றினால் மாற்றப்பட்டுள்ளன எனப் பிரகடனப்படுத்தி 1955 ஆம் ஆண்டின் நிர்வாக மாவட்டங்கள் சட்டத்தின் கீழ் உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சர் ஒரு வர்த்தமானி அறிவித்தலை

2019 ஆகஸ்ட் மாதத்தில் வெளியிட்டார். இந்த நடைமுறையின் செல்லுபடியாகுந்தன்மை கொழும்புத் துறைமுக நகரச் சட்டமூல வழக்காடலில் மனுதாரர்களினால் ஆட்சேபிக்கப்பட்டது. ஆயினும், நடைமுறைகளின் செல்லுபடியாகுந்தன்மைக்கு இதற்கு முன்னர் நீதிமன்றத்தில் ஆட்சேபிப்புத் தெரிவிக்கப்படவில்லை எனவும் 1955 ஆம் ஆண்டின் நிர்வாக மாவட்டங்கள் சட்டத்தின் கீழான நடைமுறைகளுக்கு அமைவாகக் கொழும்புத் துறைமுக நகரம் கொழும்பு நிர்வாக மாவட்டத்தின் பகுதியாக மாறியுள்ளது எனவும் உயர் நீதிமன்றம் தீர்மானித்தது.

மாகாண சபைப் பட்டியலில் (விடயம் 18, பட்டியல் I) உள்ளடக்கப்பட்ட ஒரு விடயமாகக் காணி இருந்தது என்பது மனுதாரரின் ஒரு மேலதிக வாதமாக இருந்தது. காணி தொடர்பாகவும் காணி மாற்றம் தொடர்பாகவும் காணிப் பாவனை தொடர்பாகவும் இந்த மாகாண சபைகள் சடடங்களை இயற்ற முடியும். இவ்வாறான காணிகளின் பாராதீனப்படுத்தல் மற்றும் மாற்றம் செய்தல் அதிகாரங்களை ஜனாதிபதி பிரயோகிக்கையில் மாகாண சபைகளுடன் கலந்தாலோசிப்பு நடத்தவேண்டுமென அரசியலமைப்பின் 154 எ (3) ஆம் உறுப்புரை தேவைப்படுத்துகின்றது எனச் சட்டத்தரணி வாதிட்டார். எனவே, கொழும்புத் துறைமுக நகரச் சட்டமூலத்தினை மாகாண சபைகளுக்கு ஆற்றுப்படுத்தத் தவறியமை அரசியலமைப்பினை மீறியமையாகும். மாகாண சபைகள் எவையுமே அமைக்கப்படாத காரணத்தினால் மாகாண சபைகளின் கருத்துக்களைப் பெறுவதற்காக மாகாண சபைகளுக்கு ஆற்றுப்படுத்துவது சாத்தியமற்றதாகியிருந்தது என உயர் நீதிமன்றம் தீர்மானித்தது. இந்தச் சூழ்நிலையில் சட்டமூலத்தினை மாகாண சபைகளுக்கு ஆற்றுப்படுத்தத் தவறியமை இந்தச் சட்டவாக்கத்தினைப் பாராளுமன்றம் இயற்றுவதைத் தடுக்கவில்லை என நீதிமன்றம் முடிவு செய்தது. தேவைப்படுத்தப்படும் நடைமுறைகளுடன் இயைபுறாமை என இது கருதப்படவில்லை என்பதுடன் மாகாண சபைகள் தொடர்பான பாராளுமன்றத்தின் சட்டவாக்க அதிகாரம் பற்றிய அரசியலமைப்பு ஏற்பாடுகளை மீறியதாகவும் கருதப்படவில்லை. “நடவடிக்கை முறை நடவடிக்கை ஒன்றுடன் இயைபுறாமை காணப்படுகின்றதா என்பதைத் தீர்மானிப்பதற்குச் சட்டத்திற்கு அமைவானதாக இருக்கும் மாகாண சபைகளின் இருப்பு முன்தேவைப்பாடாகும்'' என நீதிமன்றம் குறிப்பிட்டது (பக் 23).

காணி தொடர்பாக மாகாண சபையொன்றின் அதிகாரங்கள் என்னும் விடயம் தொடர்பாக முன்தீர்ப்புச் சட்டத்திலும் சட்டவியலிலும் உள்ள வெவ்வேறு கருத்துக்களையும் உயர் நீதிமன்றம் பரிசீலித்தது. காணி என்பது மாகாண சபைக்கான ஒரு விடயம் எனவும் அமைக்கப்படாத மாகாண சபையின் கருத்துக்களைப் பெறத் தவறுதல் அரசியலமைப்புடன் முரண்படுகின்றது எனவும் பாராளுமன்றத்தின் விசேட மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் நிறைவேற்றப்படவேண்டும் எனவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய *திவிநெகும* சட்டமூலத்தில் (2021)[8] உள்ள பொருள்கோடலைப் பின்பற்றப்போவதில்லை என உயர் நீதிமன்றம் தீர்மானித்தது. சட்டத்திற்கு அமைவாக மாகாண சபைகள் அமைக்கப்படாத காரணத்தினால் கலந்தாலோசிப்பு என்னும் நடவடிக்கைமுறை நடவடிக்கையின் செயலாற்றுகையின் சாத்தியமின்மையே உயர் நீதிமன்றத்தின் முன்னைய தீர்மானத்தினை நிராகரிப்பதற்கான அடிப்படைக் காரணமாகும். ஆயினும், காணி தொடர்பான மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் மற்றும் மாகாண அரசாங்கத்தின் அதிகாரங்கள் என்னும் பொருண்மையான விடயங்களை நீதிமன்றம் பரிசீலிக்கவில்லை. மாகாண சபைகள் அமைக்கப்பட்டு, அரச காணிகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் நிறைவேற்று அதிகாரங்களைப் பிரயோகித்து ஜனாதிபதியினால் கொழும்புத் துறைமுக நகரத்தினுள்ளும் மாகாணங்களினுள்ளும் காணி பாராதீனப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டால் இது ஒரு தொடரும் பிரச்சினையாக இருக்க முடியும்.

காணியில் மாகாண சபைகள் கொண்டுள்ள அதிகாரங்கள் பற்றிய மாகாண சபைகள் பட்டியல் விடயம் 18 பட்டியல் 1 இன் உசாவலை அரச காணிகள் கட்டளைச்சட்டத்தின் 110 (1) ஆம் பிரிவில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளவாறாக அரச காணிக்கான ஓர் உசாவல் எனப் பொருள்கோடல் செய்ய முடியாது எனப் புலமைசார் ஆக்கங்கள் ஆலோசனை வழங்கியுள்ளன.[9] இவ்வாறான காணிகள் 13 ஆவது திருத்தத்தின் பின்னர் தொடர்ந்தும் மத்திய அரசாங்கத்தின் உடைமையாக்கப்பட்டுள்ளன என்பதுடன் இந்த விடயம் தேசிய காணி ஆணைக்குழுவின் ஆணையினுள் உள்ள ஒரு விடயமாகவும் காணப்படுகின்றது.

மாகாணத்தினுள் உள்ள காணி தொடர்பாக மாகாண சபையொன்றின் நிலை என்பது மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண அரசாங்கங்களுக்கும்

இடையிலான அதிகாரப் பகிர்வு என்னும் கோட்பாட்டுடன் தொடர்புடைய அரசியல் சர்ச்சைக்குரிய ஒரு விடயமாக இருந்து வருகின்றது. மாகாணங்களினுள் உள்ள காணியினை, கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவத்திற்கான பூரண அதிகாரத்துடன் ஆணைக்குழுவிற்கு உடைமையாக்குவதற்கு கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கலாம் என்பது முரண்நகையான ஒரு விடயமாகும். தேசியப் பிரச்சினைக்கான பதிலாக மாகாணங்களுடனான மிகவும் செயற்திறன்மிக்க அதிகாரப் பகிர்வு என்னும் விடயம் பல தசாப்தங்களாகத் தொடர்ச்சியாக ஆட்சியில் இருந்து வந்த அரசாங்கங்களினால் நிராகரிக்கப்பட்டு வந்தபோதிலும், கொழும்புத் துறைமுக நகரம் என அழைக்கப்படும் இந்த முக்கியமான பிரதேசத்திலுள்ள இந்தப் பரந்த அதிகாரங்களின் "பரவலாக்கம்" இடம்பெறும்

## 4. ஆளுகை மற்றும் மக்களுக்கான கொழும்புத் துறைமுக நகரத்தின் தாக்கங்கள்

கொழும்புத் துறைமுக நகரத்தின் பூகோள அரசியல் தாக்கங்கள் இந்த ஆய்வுக் கட்டுரையில் பரிசீலிக்கப்படமாட்டாது. எமது தற்போதைய ஆளுகை முறைமை மற்றும் அரசாங்க நிறுவனங்களின் ஒழுங்குறுத்துகை என்பவற்றின் அடிப்படையில் ஆணைக்குழுவின் நிர்வாகம் நாட்டில் ஏற்படுத்தும் உள்நாட்டுத் தாக்கங்கள் இலங்கையின் அரசியலமைப்பியலுக்கும், பொது நிர்வாகத்திற்கும், சட்டவாட்சிக்கும் முக்கியமான விடயமொன்றாகும்.

### (அ) அரசியலமைப்பியல் மற்றும் சட்டவாட்சி

அரசியலமைப்பியல் மற்றும் சட்டவாட்சி ஆகிய கருத்தியல்கள் இலங்கையின் பாராளுமன்ற ஜனநாயக முறைமையில் வேரூன்றியுள்ளன. எமது அரசியலமைப்பின் (1978) அளவுகோல்களினுள்ளும் வரம்புகளினுள்ளும் அரச அதிகாரம் பிரயோகிக்கப்படவேண்டும் மற்றும் அரச நிறுவனங்கள் செயற்படவேண்டும் என்பதையே இந்த கருத்தியல்கள் அங்கீகரிக்க நாடுகின்றன. அதிகாரத் துஷ்பிரயோகத்தினைத் தடுப்பதற்காகவும் மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் மீறப்படுவதைத் தடுப்பதற்காகவும் அரச அதிகாரப் பிரயோகத்தை அரசியலமைப்பு மட்டுப்படுத்துவதுடன் அரசாங்க நிறுவனங்களின் செயற்பாட்டினையும் நுண்ணாய்வு செய்கின்றது. குறித்துரைக்கப்பட்டுள்ள காலப்பகுதி ஒன்றிற்குப் பதவி வகிக்கின்ற தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஓர் அரசாங்கம், அரசியலமைப்பில் தரப்பட்டுள்ள அரச அதிகாரத்தின் வரம்புகள் பற்றிய நியமங்களுக்கும் வகைப்பொறுப்புமிக்க ஆளுகைக்கும் இயைபுறவேண்டும்.

சீனா மற்றும் கிழக்காசிய நாடுகளில் உள்ளதைப் போன்றவாறு, ஆளுகையின் வெவ்வேறு முறைமைகளைக் கொண்டுள்ள நாடுகள் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளாக சுகாதாரம் மற்றும் கல்விக்கான பரந்த அடிப்படையிலான அணுகலை வழங்குகின்ற அதேவேளை கவர்ச்சிமிக்க பொருளாதார வளர்ச்சி இலக்குகளை அடைந்துள்ளன என்பதை கொவிட் பெருந்தொற்றுக்கான உலகளாவிய பதிற்செயற்பாடுகள் எடுத்து விளக்கியுள்ளன. ஆளுகை, கொள்கை வகுத்தல் மற்றும் தேசிய வளங்களின் ஒதுக்கீடுகள் என்னும் ஆளுகையின் இப்பாரம்பரியங்களை இலங்கையும் கொண்டுள்ளது. சமூக மற்றும் பொருளாதார உரிமைகளை மக்களின் வலியுறுத்தத்தகு உரிமைக் கோரிக்கைகளாக எமது அரசியலமைப்பு (1978) அங்கீகரிக்கவில்லை. இருப்பினும், மனித விருத்திக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான மக்களின் உரிமைகளின் ஒரு பரிணாமமாக சுகாதாரத்துக்கான அணுகலையும் கல்விக்கான அணுகலையும் தசாப்தகால அரச கொள்கை எமது மக்களுக்கு வழங்கியுள்ளது.

பொது நிர்வாகத்திற்குப் பிரயோகிக்கத்தக்க சீன ஆளுகை மற்றும் ஒழுங்குபடுத்தல் முறைமைகள் அரச அதிகாரங்களுக்கு வரம்பிடும் கருத்தியலை அங்கீகரிக்கவில்லை. இது மனித உரிமைகள் பற்றிய பிரதான சர்வதேசப் பொருத்தனைகளில் பொதிந்துள்ள குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளின் மீறலுக்குக் காரணமாக அமைகின்றது. இந்த உரிமைகள் அபிலாஷைமிகு நியமங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவற்றினைச் சட்ட நடவடிக்கை முறைகள் மூலமாக அமுலாக்க முடியாது. ஆயினும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் எமது இலங்கை அரசியலமைப்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதுடன் எமது நீதிமன்றங்களில் உள்ள சட்ட நடவடிக்கைமுறை மூலமாக வலியுறுத்தத்தக்கவையாகும். ஜனாதிபதியின் அதிகாரம் என்னும் கருத்தியலை வலுப்படுத்திய

அரசியலமைப்புக்கான சர்ச்சைக்குரிய 20 ஆவது திருத்தம் கூட, நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக இருக்கையில் இடம்பெறும் அடிப்படை உரிமை மீறல்களுக்கு நாட்டின் ஜனாதிபதியினை வகைப்பொறுப்புமிக்கவராக ஆக்குவதற்கு 19 ஆவது திருத்தத்தினால் கொண்டுவரப்பட்ட மாற்றங்களை அகற்றவில்லை.[10]

கொழும்புத் துறைமுக நகரக் கருத்திட்டத்தினைக் காட்டமாக விமர்சிப்பவர்கள் இந்த முன்னெடுப்பில் சீனாவின் ஈடுபாட்டினைச் சிலவேளைகளில் பயங்கரமான ஒன்றாகச் சித்தரிக்கின்றனர். சீன ஆளுகை முறைமையின் சில சாதகமான அம்சங்களை அங்கீகரிப்பது சரியான ஒன்றாகும். இருப்பினும், சீனாவின் பங்காண்மையுடனானதாக இருந்தாலும் கூட, கொழும்புத் துறைமுக நகரத்தின் ஆளுகை மற்றும் நிர்வாகத்தின் தனிப்பண்புக் கூறுகளால் இந்த நாட்டில் ஏழு தசாப்தங்களாக நிலைத்திருக்கும் பாராளுமன்ற ஜனநாயகத்தின் தற்போதைய முறைமையினைக் கீழறுக்க முடியாது மற்றும் கீழறுக்கக் கூடாது. அடிப்படை உரிமைகள், குறிப்பாக பேச்சுச் சுதந்திரம், கருத்து வெளிப்பாட்டுக்கான சுதந்திரம் மற்றும் தகவலறியும் சுதந்திரம் உள்ளிட்ட எமது உள்நாட்டு அரசியலமைப்பு மற்றும் சட்டத்தினை மீறுகின்றமைக்காக ஜனாதிபதி வகைப்பொறுப்பும் பொது நிறுவன ரீதியான வகைப்பொறுப்பும் இருக்கவேண்டும். எமது அரசியலமைப்பின் கீழ் அரசு சாராச் செயற்படுநர்கள் அடிப்படை உரிமைகள் மீறலுக்கான நேரடியான வகைப்பொறுப்பினைக் கொண்டிருக்க மாட்டார்கள். ஆனால், அரசு சாராச் செயற்படுநர்களால் அடிப்படை உரிமைகள் மீறப்படுகையில் அவற்றினைத் தடுப்பதற்குச் செயற்படாமல் இருந்தமைக்கான வகைப்பொறுப்பினை அரசு கொண்டுள்ளது என்பதை அங்கீகரிக்கும் தெளிவான சட்டவியல் உயர் நீதிமன்றத்தில் உள்ளது.[11]

ஆபிரிக்காவிலும் சீனா உள்ளடங்கலாக கிழக்காசியாவிலும் விசேட பொருளாதார வலயங்கள் பற்றிய ஆய்வுக்கான சான்றடிப்படை உள்ளது. இவ்வாறான வலயத்தின் வெற்றி அல்லது தோல்வி, வலயங்களை முகாமை செய்து நிர்வகிப்பதற்காக நிறுவப்பட்டுள்ள ஒழுங்குபடுத்தல் சட்டகம் மற்றும் நிறுவனங்களின் செயற்திறனில் தங்கியுள்ளது என்பதை இது தெளிவுபடுத்துகின்றது. வகைமாதிரியாக, முதலீட்டாளர்களுக்கான வரி நிவாரணம் மற்றும் முன்விருப்புக்குரிய கொள்கைகள் மற்றும் வலயத்தில் தொழிலாளர்களை அமர்த்துவதற்கும் அகற்றுவதற்குமான அனுமதி போன்ற அரசிறை மற்றும் அரசிறை சாராத ஊக்குவிப்புக்களுடன் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக வியாபாரம் செய்வதன் இலகுதன்மையே பிரதான குறிக்கோளாகும்.[12] இந்தக் கண்ணோட்டம் வரைவுச் சட்டமூலத்தில் பொதிந்திருந்தது என்பதை கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டமூலத்தின் ஏற்பாடுகள் தெளிவாகச் சுட்டிக்காட்டின. வரைவானது கிழக்காசிய விசேட பொருளாதார வலயங்களில் பரிச்சயமுடைய வெளிநாட்டு மதியுரைஞர் ஒருவரினாலேயே பெரும்பாலும் தயாரிக்கப்பட்டுள்ளது. சட்டமூலத்தினை நீதிமுறை மீளாய்வுக்கு உட்படுத்திய உயர் நீதிமன்றத் தீர்மானம், சட்டமூலத்தின் பல ஏற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தது.

இலங்கை அரசியலமைப்பு மற்றும் சட்ட முறைமையில் உள்ள ஆளுகை மற்றும் பொதுநிர்வாக நியமங்கள் ஆகியவற்றின் விதிகள் மற்றும் நியமங்களுக்கு வெளியே செயற்படுகின்ற ஒழுங்குபடுத்தல் சட்டகம் மற்றும் நிறுவனங்களை நிறுவுவதற்கு, கொழும்புத் துறைமுக நகரத்தின் பிரதான பங்காளரான சீனாவின் தனிச்சிறப்புப் பண்புகளுக்கு இயைபுறுகின்ற வேறு வகையான ஆளுகை இப்போது நியாயப்படுத்தும் அடிப்படைக் காரணமாக இருக்க முடியாது.

கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் குறிக்கோள்கள், அதிகாரங்கள், மற்றும் கடமைகள் மற்றும் செயற்பாடுகள் ஆகியவை ஆணைக்குழு கட்டாயமாக ‘‘நிலைபேறான அபிவிருத்தியினை மேம்படுத்தவேண்டும்’’ என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.[13] ‘நாட்டின் துரித அபிவிருத்தி’ என்னும் கருத்தியல் சட்டத்தின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் பொருத்தனைக் கடப்பாடுகள், சர்வதேசச் சட்டம் மற்றும் உலகளாவிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDGs) ஆகியவற்றில் பிரதிபலிக்கும் மனித உரிமைகள் அடிப்படையிலான அபிவிருத்தி என்னும் கருத்தியலுடன் இக்குறிக்கோள்கள் ஒத்திசையவேண்டும்.

அபிவிருத்தியினை அடைவதற்காக கொழும்புத் துறைமுக நகரத்தில் உள்ள நிர்வாகமும் ஆளுகையும் எமது அரசியலமைப்புடனும், எழுத்திலான சட்டத்துடனும் இந்தச் சர்வதேச விதிகள் மற்றும் நியமங்களுடனும் இயைபுறலுக்காக

கண்காணிக்கப்படலாம் மற்றும் கண்காணிக்கப்படல் வேண்டும்.

அரசியலமைப்பு ரீதியாக உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கும் இலங்கையினால் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள சர்வதேசப் பொருத்தனைகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருளாதார மற்றும் சமூக உரிமைகளுக்கும் இடையிலான இணைப்பு நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் சித்தாந்தத்திற்கு அடிப்படையானதாகும். பொதுவாக, மனித உரிமைகள் ஆதரித்துவாதாடல் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளில் கவனம் குவிக்கின்றது. அதேவேளை, ஆளுகைக்கான சீனாவின் அணுகுமுறையினை அங்கீகரிப்பவர்கள் மக்களின் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளுக்கு முன்னுரிமை வழங்குகின்றனர். நிலைபெறுதகு அபிவிருத்தியின் வரைவிலக்கணத்தில் உரிமைகளின் இந்த இரண்டு தொகுதிகளையும் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகள் கூட்டிணைத்து முன்னுரிமைப்படுத்துகின்றன. நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகள் பலவற்றில் சுற்றாடல் பாதுகாப்பு கூட்டிணைக்கப்பட்டுள்ளது. அதேவேளை, சமத்துவம் மற்றும் பாகுபாடின்மை, தொழிலாளர் உரிமைகள் மற்றும் வன்முறையில் இருந்து பாதுகாப்பு உள்ளிட்ட குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளின் பரிணாமங்களும் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகள் சிலவற்றிலும் விழுமியச் சட்டகத்திலும் கூட்டிணைக்கப்பட்டுள்ளன. எனவே, கொழும்புத் துறைமுக நகரத்தினை உந்திச்செலுத்தும் எவ்விதமான பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி மாதிரியானது, மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தியினையும் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளையும் அமுல்படுத்துவதற்கான இலங்கையின் கடப்பாட்டில் வேர்கொண்டிருக்கவேண்டுமேயன்றி அதில் இருந்து விலகக்கூடாது.

## (ஆ) மக்களின் இறைமையும் ஜனாதிபதியின் அதிகாரமும்

ஜனாதிபதி சில குறித்துரைக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டுள்ளார் என்பதைக் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் அங்கீகரிக்கின்றது. ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள மிகவும் முக்கியமான அதிகாரம் துறைமுக நகரப் பிரதேசத்தினுள் உள்ள காணியினை ஆணைக்குழுவிற்கு உடைமையாக்குதலாகும், (பிரிவு 65 (1) (3)). ஆணைக்குழுவினையும் அதன் தலைவரையும் ஜனாதிபதியே நியமிக்கின்றார். உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்களும் தலைவரும் இலங்கையர்களாக இருக்கவேண்டும். (பி. 7 (1)). ஆணைக்குழுவின் இறுதிக் கணக்காய்வு அறிக்கையினைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கான, கொழும்புத் துறைமுக நகர முதன்மைத் திட்டத்திற்கு ஒருங்கியல்பினை வழங்குவதற்கான, மற்றும் திட்டம் தொடர்பாக நெறிப்படுத்தலை வழங்குவதற்கான அதிகாரம், கொழும்புத் துறைமுக நகரத்திற்குப் பொறுப்பான அமைச்சர் ஒருவரிடம் ஒப்படைக்கப்படாவிட்டால், ஜனாதிபதியிடம் அளிக்கப்படுகின்றன. (பிரிவு 15 (2), 23 (5), 4 (1) 4 (6)). ஆணைக்குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரியினை – பணிப்பாளர் தலைமையதிபதியை நியமிப்பதில் ஆலோசனை வழங்கும் வகிபாத்திரத்தினையும் ஜனாதிபதி கொண்டுள்ளார் (பிரிவு 24 (1). கரை கடந்த வங்கிச் சேவை மற்றும் விதிவிலக்குகள் மற்றும் உபாயமார்க்கமிகு முக்கியத்துவம் மிக்க வியாபாரங்களுக்கான ஊக்குவிப்புக்கள் தொடர்பில் ஏனைய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன (பகுதி எனை மற்றும் ஐ). ஜனாதிபதி அல்லது கொழும்புத் துறைமுக நகரத்திற்குப் பொறுப்பான அமைச்சர், சட்டத்தின் (பிரிவு 71) கீழ் ஒழுங்குவிதிகள் தேவைப்படும் விடயங்களுக்காக ஒழுங்குவிதிகளை உருவாக்கும் பரந்த அதிகாரத்தினைக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதி இப்போது கட்டற்ற அதிகாரங்களைக் கொண்டுள்ளார் என்னும் பிரபல மனப்பதிவினை அரசியலமைப்புக்கான 20 ஆவது திருத்தம் உருவாக்கியுள்ளது. இதன் தொடர்ச்சியாக, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான மேற்குறிப்பிட்ட அதிகாரங்களையும் எந்த வித மட்டுப்பாடுகளும் இன்றிப் பிரயோகிக்க முடியும். ஆயினும், மக்களுக்கு வகைப்பொறுப்புமிக்க ஆளுகை என்னும் அரசியலமைப்பு ரீதியான கருத்தியலின் மையமாக இருப்பது, அரச பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் அல்லது நியமிக்கப்படுபவர்கள் ''அதிகாரத்தினை'' வகிக்கின்றார்கள் என்பதை விடப் ''பதவியினையே வகிக்கின்றார்கள்'' என்பதாகும். மக்கள் அவர்களை ''அதிகாரத்தில்'' அமர்த்துவதை விடப் ''பதவியிலேயே'' அமர்த்துகின்றனர். இது 1972 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பில் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டு தனித்துவமான விதத்தில் 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பில் கூட்டிணைக்கப்பட்ட

''மக்களின் இறைமை'' என்னும் கருத்தியலையே மீண்டும் குறிக்கின்றது. இறைமை மக்களிடம் உள்ளது என 3 ஆம் உறுப்புரை தெளிவுபடுத்துகின்றது. மேலும், அரசாங்கத்தின் அதிகாரங்களையும் அடிப்படை உரிமைகளையும் வாக்களிப்பதற்கான உரிமையினையும் இது உள்ளடக்குகின்றது. அரசாங்கத்திற்கு மூன்று தூண்கள் உள்ளன என 4 ஆம் உறுப்புரை குறிப்பிடுகின்றது. மக்களின் அரசாங்கத்தின் அதிகாரங்களின் பிரதிபலிப்பாகப் பாராளுமன்றம், ஜனாதிபதி மற்றும் நீதிமன்றங்கள் ஆகியவை முறையே சட்டவாக்க அதிகாரங்களையும் நிறைவேற்று அதிகாரங்களையும் நீதிமுறை அதிகாரங்களையும் பிரயோகிக்கின்றன. எனவே நீதிமன்றங்கள் சட்டவியல் சம்பந்தப்பட்ட முன்தீர்ப்புச் சட்டத்தில் 3 ஆம் மற்றும் 4 ஆம் உறுப்புரைகளை இணைத்துள்ளன. ஜனாதிபதி, தனது ஜனாதிபதி அதிகாரங்களைப் பிரயோகிக்கையில் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதைத் தவிர்ப்பதற்காக ஜனாதிபதியின் வகைப்பொறுப்புத் தொடர்பில் 19 ஆவது திருத்தம் ஒரு தனித்துவமான ஏற்பாட்டினை அறிமுகப்படுத்தியது. இந்த ஏற்பாடு 20 ஆவது திருத்தத்தில் தக்கவைக்கப்பட்டுள்ளது.[14]

எனவே அரசாங்கத்தின் ஏனைய முக்கிய தூண்களான பாராளுமன்றத்தினாலும் நீதிமன்றங்களினாலும் தனது நிர்வாகம் நுண்ணாய்வு செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக ''சர்வ சக்திமிக்க ஜனாதிபதி'' 20 ஆவது திருத்தத்தினால் வலுவூட்டப்பட்டுள்ளார் என்னும் புலனுணர்வு தவறானதாகும். எமது அரசியலமைப்பின் கீழ் மூன்று தூண்களும் ஆளுகையில் ஒரு வகிபாத்திரத்தினைக் கொண்டுள்ளன. ஜனாதிபதி பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக் கொண்டுள்ளார் என்பதுடன் அவரின் நடவடிக்கைகளும் நீதிமுறை நுண்ணாய்விற்கு உட்படுகின்றன.

ஜனாதிபதி வழங்கிய 2021 ஆம் ஆண்டு பொசன் தினச் செய்தியில், தான் பௌத்த நெறிகளில் அரசனின் கடமைகள் பற்றிய *தச ரஜ தர்மத்தினால்* வழிநடத்தப்படுவதாகக் குறிப்பிட்டார். இந்த நெறிகள் மன்னன் மக்கள் மீது கொண்டுள்ள கடப்பாடுகள் பற்றிய இன்றியமையாத ஞானத்தினை உள்ளடக்கலாம். ஆயினும், இந்த நாட்டில் ஜனாதிபதி என்பவர் மன்னர் ஒருவர் அல்ல என்பதை இலங்கைப் பிரசைகள் தமக்குத் தாமே நினைவூட்டிக்கொள்ள வேண்டும். எமது உயர் நீதிமன்றம், 2018 ஆம் ஆண்டு பாராளுமன்றம் கலைக்கப்பட்ட வழக்கில், நாம் 1972 ஆம் ஆண்டில் குடியரசாகியதில் இருந்து இந்த நாட்டிற்கென அரசர் எவரும் அறியப்படவில்லை என்றும் ஜனாதிபதி அவரது பதவியினை மரபுரிமையாக வரித்துக்கொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தது.[15] விளைவாக, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தினால் வழங்கப்படும் ஜனாதிபதியின் அதிகாரங்களின் பிரயோகம் பாராளுமன்றத்தினதும் நீதிமன்றங்களினதும் நுண்ணாய்விற்கு உட்படும்.

கொழும்புத் துறைமுக நகரச் சட்டமூலத்தினை மீளாய்வு செய்த உயர் நீதிமன்றம் அச்சட்டமூலத்தின் பல ஏற்பாடுகள் அரசியலமைப்புடன் முரண்படுவதைக் கண்டுபிடித்தது. இவை பின்னர் திருத்தப்பட்டன. நியமனங்கள் தொடர்பாகச் சட்டத்தில் பொதிந்துள்ள வழிகாட்டல்களுக்கு இயைபுறுவதற்காக, ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமிக்கும் ஜனாதிபதியின் அதிகாரம் நீதிமுறையினால் நுண்ணாய்வு செய்யப்படலாம் என நீதிமன்றம் விசேடமாகக் குறிப்பிட்டிருந்தது. தற்றுணிபு அதிகாரத்தின் தன்னிச்சையான பிரயோகம் நீதிமன்றத்தில் ஆட்சேபிக்கப்படலாம் என நீதிமன்றம் குறிப்பிட்டது (ப.26). அரசியலமைப்பின் (1978) 3 ஆம் மற்றும் 4 ஆம் உறுப்புரைகளில் பொதிந்துள்ள மக்களின் இறைமை தொடர்பான ஏற்பாடுகளை முன்னிறுத்தி, 1947 ஆம் ஆண்டின் காலனித்துவ அரச காணிகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவுக்கு காணி அளிப்புக்களை வழங்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தினையும் நீதிமன்றம் நுண்ணாய்வு செய்திருக்கவேண்டும் என மரியாதையுடன் குறிப்பிடப்படுகின்றது.

## (இ) பாராளுமன்றத்தின் மேற்பார்வை வகிபாத்திரம்

மக்களின் இறைமை என்னும் கருத்தியலை அடிப்படையாகக் கொண்ட ஆளுகை பற்றிய அரசியலமைப்புச் சட்டகம், பாரளுமன்ற அதிகாரங்களுக்கும் பொறுப்புக்களுக்கும் ஜனாதிபதியின் அதிகாரங்களுக்கும் பொறுப்புக்களுக்கும் இடையில் சமநிலை பேணுவதற்கு அழைப்பு விடுக்கின்றது. வளங்களை ஒதுக்குவதிலும் அரச நிதியிடலிலும் ஆளுகையின் சட்டவாக்கத் தூண் (பாராளுமன்றம்) முக்கியமான மேற்பார்வை வகிபாத்திரத்தினைக் கொண்டுள்ளது. பாராளுமன்றத்தின் வகிபாத்திரம் பற்றிய 148 ஆம் உறுப்புரை உள்ளடங்கலாக அரசியலமைப்பில் உள்ள குறிப்பிட்ட அத்தியாயமும் ஏற்பாடுகளும் ''அரச

நிதியில் பாராளுமன்றம் பூரண கட்டுப்பாட்டினைப் பிரயோகிக்கின்றது'' எனச் சுட்டிக்காட்டுகின்றது.□ அனைத்து அரசாங்கப் பொறுப்பேற்புக்களின் கணக்குகள் பற்றிய கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை பாராளுமன்ற மேற்பார்வையினைப் பிரயோகிப்பதில் முக்கியமான பொறிமுறையாக மாறுகின்றது.[16] அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பாராளுமன்றத்தின் நிதி மேற்பார்வை பற்றிய ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு கொழும்புத் துறைமுக நகரச் சட்டமூலத்தின் ஒழுங்குபடுத்தல் முறைமையில் உள்ள பல ஏற்பாடுகளை உயர் நீதிமன்றம் நுண்ணாய்வு செய்துள்ளது. இதன் காரணமாக இறுதியாக இயற்றப்பட்ட சட்டவாக்கத்தில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. பாராளுமன்றத்தின் மேற்பார்வை வகிபாத்திரத்தினை வலுப்படுத்துவதற்காக மேலும் திருத்தங்கள் வேண்டும் என எதிர்க்கட்சி கோரியது. ஆனால், பாராளுமன்றத்தின் வகிபாத்திரம் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான இருகட்சி அணுகுமுறையில் இவை கூட்டிணைக்கப்படவில்லை.

கொழும்புத் துறைமுக நகரம் கரை கடந்த கம்பனிகளைக் கொண்டிருக்கும். ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட உரிமங்களின் அடிப்படையில் வலயத்தினுள் சேவைகளை வழங்கும் ''அதிகாரமளிக்கப்பட்ட நபர்கள்'' என்னும் அந்தஸ்தினை இவை கொண்டிருக்கும். இவை 2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படவேண்டும். ஆனால் சட்டத்தின் ஏற்பாடுகள் இந்தக் கம்பனிகளுக்குப் பூரணமாகப் பிரயோகிக்கப்படமாட்டாது. 1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தங்கள் சட்டமும் கொழும்புத் துறைமுக நகரத்தினுள் எவ்வித பிரயோகத்தினையும் கொண்டிராது. வலயத்தில் பிரயோகிக்கப்படும் இலங்கையின் ''எழுதப்பட்ட சட்டத்தில்'' இருந்து விலக்கப்பட்ட சட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

முக்கியமான இலங்கைச் சட்டங்களைப் பிரயோகிக்காமை தொடர்பாகத் தீவிரமான கரிசனைகள் எழுப்பப்பட்டுள்ளன. ''வெளிநாட்டு நேரடி முதலீடாக'' வலயத்தினுள் எவ்வித வெளிநாட்டு நாணயத்தினையும் கொண்டுவருவதன் மூலம் பயங்கரவாதிகளுக்கு நிதியிடல் உள்ளடங்கலாக கறுப்புப் பணம் தூய்தாக்கப்படுவதற்கான சாத்தியம் தொடர்பான தீவிர கரிசனைகளும் எழுப்பப்பட்டுள்ளன. உண்ணாட்டரசிறைச் சட்டம் (2017) மற்றும் வரிவிதிப்பின் ஒழுங்குபடுத்தல் முறைமை மற்றும் வெளிநாட்டு நாணயச் சட்டம் (2017) ஆகியவற்றின் பிரயோகம் தொடர்பிலும் விதிவிலக்குகள் காணப்படுகின்றன.[17] இவ்வாறான தேசியச் சட்டங்களுக்கு விதிவிலக்களிப்பதற்கும் அவற்றினைப் பிரயோகிக்காமைக்கும் ''வியாபாரம் செய்வதன் இலகுதன்மையை'' வசதிப்படுத்தல் மற்றும் வலயத்தினுள் ''ஒழுங்குபடுத்தல் சட்டகங்களுக்கு இயைபுறலைக் குறைத்தல்'' போன்ற அடிப்படைக் கோட்பாடுகளை மையப்படுத்தி நியாயப்படுத்தல் வழங்கப்படுகின்றது. இருப்பினும், பாரிய ஊழலையும் பொது நிர்வாகத்தில் தேசிய வளங்களின் துஷ்பிரயோகத்தினையும் அடிக்கடி சான்றாகக் காண்கின்ற ஒரு நாட்டில், வினைத்திறனையும் துரித பொருளாதார வளர்ச்சியினையும் உறுதிப்படுத்துவதற்கான பாராளுமன்ற மேற்பார்வை மீதான மட்டுப்பாடுகளும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் முறைமைகளுக்கு ''இயைபுறாமையினை'' சட்டரீதியானவையாக ஆக்குவதும் நிதி ஆளுகைக்கு பாரதூரமான அபாயநேர்வினை ஏற்படுத்துகின்றன. வலயத்தினுள் காணப்படும் மோசமான நிதி ஆளுகை, துரிதமான மற்றும் நிலைபெறுதகு அபிவிருத்தியினை அடைவதற்கான சாத்தியங்களின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தலாம்.

உறுதியான ஆளுங்கட்சிப் பெரும்பான்மை இருக்குமிடத்தில், வகைப்பொறுப்புமிக்க ஆளுகைக்கு இன்றியமையாததான பாராளுமன்ற மேற்பார்வை பலவீனமானதாக மாறலாம். பாராளுமன்றத்தில் ஆளுங்கட்சியிலும் எதிர்க்கட்சியிலும் உள்ள உறுப்பாண்மையினதும் பிரதிநிதித்துவத்தினதும் தரமே செயற்திறன்மிக்க விவாதங்களுக்கும் கலந்துரையாடலுக்கும் பங்களிப்பு வழங்குகின்றது என்பதுடன் தேசிய நலனுக்காக நிதி மேற்பார்வை மற்றும் ஆளுகை தொடர்பில் இருகட்சிக் கருத்தொருமிப்பினையும் உருவாக்குகின்றது. இலங்கையின் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையில் பாராளுமன்றத் தேர்தல்களுக்கான நியமனச் செயன்முறையில் அரசியல் கட்சிகள் வகிக்கும் செல்வாக்குமிக்க வகிபாத்திரம், இந்த முக்கியமான நிறுவனத்திற்குத் தகைமையும் நேர்மையும் உள்ள நபர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான மக்களின் ஆற்றலை மட்டுப்படுத்துகின்றது. பாராளுமன்றத்திற்குப் பல்வகைமையினையும் தொழில்ரீதியான நிபுணத்துவத்தினையும் கொண்டுவரும் எனக் கருதப்படும் தேசியப் பட்டியல் மூலமாகத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட வேட்பாளர்களைப் பாராளுமன்றத்திற்கு நியமிக்கும்

தற்போதைய நடைமுறையும் தாம் பிரதிநிதித்துவம் செய்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்படாத கட்சிகளுக்கு உறுப்பினர்கள் கட்சி மாறுவதும் பாராளுமன்ற நிறுவனம் மீது பொதுமக்கள் அதிருப்தி அடைவதற்குப் பங்களிப்பு வழங்கியுள்ளன. தேசியத் தேர்தல்களின் பின்னர் வாக்காளர்கள் கையறுநிலையினையே உணர்கின்றனர். பாராளுமன்றத்தில் கூச்சல்மிக்க ஆரவாரப் பேச்சுக்களும் அர்த்தமற்ற பகைமைப் பேச்சுக்களும் பரிமாறப்படுவது நாளாந்தம் அதிகரித்துவரும் நிலையில் புதிய இளம் உறுப்பினர்களும் அனுபவமிக்க மூத்த உறுப்பினர்களும் பயன்மிகு பங்களிப்புக்களை வழங்குவர் என்பதற்கான அற்பமான வாய்ப்புக்களே காணப்படுகின்றன. அண்மையில் இடம்பெற்ற தொலைக்காட்சிக் குழுக் கலந்துரையாடல் ஒன்றில், புதிய உறுப்பினர் ஒருவரிடம் பொதுமக்களின் கரிசனைக்குரிய நடப்புப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவரின் சிறுபான்மைக் கட்சி எவ்வாறு செயற்படும் என்று கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் வழங்கிய பதில் - “எங்களிடம் அதிகாரத்தை வழங்குங்கள்” என்பதாக இருந்தது. இந்தப் பதிலை அவர் இரு தடவைகள் குறிப்பிட்டார். பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவது பற்றி அவர் எவற்றினையும் குறிப்பிடவில்லை. “பழமையான இடதுசாரிக் கட்சி” ஒன்றினைச் சேர்ந்த மூத்த அரசியல்வாதி ஒருவர், கொழும்புத் துறைமுக நகரத்தினுள் தொழிலாளர்களின் உரிமைகள் சீரழிக்கப்படும் சாத்தியம் பற்றித் தான் கரிசனை கொண்டு அதற்காகத் தான் திருத்தம் ஒன்றை வரைந்ததாகக் குறிப்பிட்டார். “தனது சிரேஷ்ட உறுப்பினர்களினால்” திருத்தத்தை வாபஸ் பெறுமாறு தனக்கு அழுத்தம் வழங்கப்பட்டதாக அவர் விளக்கினார்!

பாராளுமன்றத்தின் அதிகாரங்களும் பொறுப்புக்களும், குறிப்பாக அரச நிறுவனங்கள் மற்றும் தேசிய வளங்களின் நிதி முகாமைத்துவம் தொடர்பான அதிகாரங்களும் பொறுப்புக்களும் 20 ஆவது திருத்தத்தின் மூலம் அகற்றப்பட்டு அதன் விளைவாக ஜனாதிபதியின் அதிகாரங்கள் விரிவாக்கப்பட்டுள்ளன எனக் கூறுவது தவறானதாகும். பாராளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் “இறப்பர் முத்திரையாக” மாற்றுவது அரசியலமைப்போ அல்லது சட்டமோ அல்ல மாறாக உறுப்பினர்களான அவர்களே தம்மை அவ்வாறு மாற்றிக்கொள்கின்றனர்.

அரசியலமைப்பினாலும் எமது சட்டங்களினாலும் ஏற்பாடு வழங்கப்பட்டுள்ள கொழும்புத் துறைமுக நகரத்தின் நிதி மேற்பார்வை என்பது, பாராளுமன்றத்தினை ஒரு நிறுவனமாக வலுப்படுத்துவதற்கான தேர்தல் மற்றும் அரசியலமைப்பு மறுசீராக்கல்கள் இன்றி நிறைவேற்றப்படாத ஒரு எதிர்பார்ப்பாக அமையலாம். ஆயினும், தமது அரசியலமைப்பு அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்கான கடப்பாட்டினைக் கொண்டிராத பெரும்பான்மையினரின் பிரதிகூலத்திற்கு, பொறுப்பும் சிந்தனை வெளிப்பாட்டுத் திறனும் கொண்ட எதிர்க்கட்சியினாலும் ஊடகங்களினாலும் சிவில் சமூகத்தினாலும் நட்டஈடு செலுத்தமுடியும். தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்பு வழங்கும் எனக் கருதப்படும் ஒரு பொருளாதார வலயத்திற்கு இன்றியமையாததான நிதி வகைப்பொறுப்பின் நியமங்களுக்கு கொழும்புத் துறைமுக நகர ஆணைக்குழு இயைபுறுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஒரு வழியாக அது இருக்கலாம்.

### (ஈ) ஒரு பொது நிறுவனம் என்ற ரீதியில் கொழும்புத் துறைமுக நகரத்தின் முகாமைத்துவமும் நிர்வாகமும்

சட்டத்தில் நியமனங்களுக்கெனப் பொதியப்பட்டுள்ள சில தெரிவடிப்படைகளுக்கு அமைவாக ஆணைக்குழுவுக்கான நியமனங்கள் ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்படுகின்றன. கொழும்புத் துறைமுக நகரச் சட்டமூலம் பற்றிய தீர்மானத்தில், ஆணைக்குழுவுக்கு நியமனங்களை மேற்கொள்வதில் தகைமையற்ற ஜனாதிபதித் தற்றுணிபு என்னும் கருத்தியலை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது. அவை நீதிமுறை மீளாய்வுக்கு உட்படுகின்றன. [18]

நீதித்துறைப் பதவிக்கு ஷிராணி பண்டாரநாயக்க நியமிக்கப்பட்டமை தொடர்பான வழக்கில்,[19] நீதித்துறைப் பதவிக்கான நியமனங்களை மேற்கொள்வதற்கான விசேட தெரிவடிப்படையினைக் கொண்டிராத அரசியலமைப்பு ஏற்பாட்டினைக் கூட, நீதித்துறைப் பதவிகளுக்கான தகைமைகள் பற்றிய ஏனைய ஒழுங்குபடுத்தல் ஏற்பாடுகளுக்கு ஒத்திசைவான முறையில் நீதிமன்றங்களினால் பொருள்கோட முடியும் என நீதிபதி மார்க் பெர்னான்டோ தீர்ப்பு வழங்கியிருந்தார். ஆயினும், பகிரங்க ஆணைக்குழுக்களுக்கான நியமனங்கள் திறனாய்வுமிக்க கருத்துரைகளுக்கு உட்படுத்தப்படலாம் என்ற போதிலும் அவ்வாறான நியமனங்கள் பொதுவாக நீதிமன்றத்தில் ஆட்சேபிக்கப்படுவதில்லை. கொழும்புத் துறைமுக

நகரப் பொருளாதார ஆணைக்குழுவுக்கான ஜனாதிபதியின் நியமனங்களின் பொது நுண்ணாய்வினை உயர் நீதிமன்றத்தில் உள்ள சட்டவியல் ஊக்கப்படுத்துகின்றது.

கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு (ஊீஊநுஊ) விரிவான அதிகாரங்கள் கொண்ட ஒரு சக்திவாய்ந்த ஆணைக்குழுவாகும். கொழும்புத் துறைமுக நகரத்தில் வியாபாரத்தில் ஈடுபடக்கூடிய முதலீட்டாளர்கள் ''அதிகாரமளிக்கப்பட்ட நபர்கள்'' என அவர்களுக்கு 'உரிமங்களை வழங்குவதிலும்' அனுமதி வழங்குவதிலும் பதிவினை வழங்குவதிலும் ஆணைக்குழு பூரண தற்றுணிபினைக் கொண்டுள்ளது போல் தென்படுகின்றது. ஆணைக்குழு ஒரு ''ஒற்றைச் சாளர முதலீட்டாளர் வசதிப்படுத்துனர்'' என விபரிக்கப்படுகின்றது. கொழும்புத் துறைமுக நகரத்தின் தனிச்சிறப்புப் பண்பாகக் காணப்படுவது வியாபார இயக்கங்களையும் செயற்பாடுகளையும் ''இலகுபடுத்தல்'' என்பதால், சட்டங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் முறைமைகளுக்கு இயைபுறுவது ''சுமையாகக்'' கருதப்படுகின்றது. உரிமங்களையும் அனுமதியினையும் பதிவினையும் வழங்குவதில் ஆணைக்குழுவுக்குக் கணிசமான அதிகாரங்களையும் தற்றுணிபினையும் வழங்குவதற்கும் அடையாளம் காணப்பட்ட எழுத்திலான சட்டங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் சட்டகங்களில் இருந்து விதிவிலக்களிப்பதற்கும் இதுவே அடிப்படையான காரணமாகக் காணப்படுகின்றது.

கொழும்புத் துறைமுக நகரச் சட்டமூலம் உயர் நீதிமன்றத்தில் ஆட்சேபிக்கப்பட்டபோது, வலயத்தின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தில் ஆணைக்குழு கொண்டுள்ள வரம்பற்ற தற்றுணிபு பற்றியும் முக்கியமான தேசிய நிதி நிறுவனங்களைச் சேர்ந்த பதவி வழி உறுப்பினர்கள் ஆணைக்குழுவில் இல்லாமல் இருப்பது பற்றியும் மனுதாரர்கள் கேள்வி எழுப்பினர். சட்டத்தில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ள ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைகளின் தற்றுணிபும் தீர்மானம் வகுக்கும் அதிகாரங்களும் அவற்றின் சொந்தச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் கீழ் அவற்றிடமிருந்து அகற்றப்படக்கூடாது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. சம்பந்தப்பட்ட ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் ஒத்திசைவு தற்போது பெறப்படவேண்டும், மேலும், ஆணைக்குழுவினால் இந்தச் சட்டங்கள் அமுல்படுத்தப்படுவது ஆணைக்குழுவினால் தடைசெய்யப்படலாகாது. இந்தக் கண்ணோட்டத்தினை கூட்டிணைப்பதற்காகச் சட்டத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே, இந்த ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைகளின் அதிகாரங்கள் மதிக்கப்படவேண்டும் என்னும் தேவைப்பாட்டுக்கு ஆணைக்குழுவின் ஒழுங்குபடுத்தல் அதிகாரங்கள் உட்படுத்தப்படுகின்றன.[20]

அரச சேவையினையும் பொது நிர்வாகத்தினையும் பலவீனமாக்குவதற்கு அரசியல் தலையீடுகள் தாக்கம் செலுத்தியுள்ளன என்பதைப் பொது நிர்வாகத்தின் அண்மைக் காலப் போக்குகள் சுட்டிக்காட்டுகின்றன. கூட்டுத்தாபனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் போன்ற அரச நிறுவனங்களின் ஆளுகை அமைப்பின் உறுப்பினர்களாக இருப்பவர்கள் செயலறுநிலையில் இருப்பதை மக்கள் கண்கூடாகக் காண்கின்றனர். 'பிணை முறி மோசடி', 'சில் துணி விநியோகம்' போன்ற நிகழ்வுகளும் தேசிய விமானசேவைச் சபையின் செயற்பாடுகளும் மிகவும் இன்றியமையாத அமைப்புக்களில் உயர் பதவிகளை வகிப்பவர்கள் முக்கியமான அரச நிறுவனங்களின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் தொடர்பாக எவ்வாறு எதிர்வினையற்றவர்களாகவும் எவ்வித ஈடுபாடுமற்ற வெறும் பார்வையாளர்களாகவும் பொதுவாகச் செயற்படுகின்றனர் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. சிற்றுண்டிகளைப் பகிர்ந்துகொண்டு இன்வார்த்தைகளைப் பரிமாறிக்கொண்டு ''சர்ச்சைக்குரியவை'' எனப் புலனுணரப்படும் எவ்விதமான விடயங்களையும் தவிர்த்துக் கூட்டங்களில் இருந்து வெளியேறுவதற்குப் பழக்கப்பட்டவர்களாக இவர்கள் உள்ளனர். ஆளுகை அமைப்புக்களில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் காட்டும் அக்கறையின்மை மற்றும் எதிர்வினையின்மை தலைவர்கள் அதிகாரத்தினைத் துஷ்பிரயோகம் செய்வதை வசதிப்படுத்துகின்றன. நடுநிலையான கொள்கை உருவாக்கமாகவும் தீர்மானம் வகுத்தலாகவும் இருக்கவேண்டிய அரசியல் தலையீட்டுக்கான ஓர் உகந்த சூழலாக இது இருக்கின்றது. இத்தனிச்சிறப்புப் பண்புகள் தொடர்ந்தால், கொழும்புத் துறைமுக நகர ஆணைக்குழு மக்களுக்கு வகைப்பொறுப்பு மிக்க வகையில் தேசிய அபிவிருத்தியில் தனது வகிபாத்திரத்தினையும் பொறுப்பினையும் நிறைவேற்றும் ஒரு பொது நிறுவனமாக இயங்கும் என எதிர்பார்ப்பது கடினமானதாக இருக்கும்.

ஆணைக்குழுவிடம் உடைமையாக்கப்பட்டுள்ள கொழும்புத் துறைமுக நகரத்தில் உள்ள *காணி*

"அரசாங்கம் சந்தைப்படுத்தக்கூடிய காணி" எனவும் "கருத்திட்டக் கம்பனி சந்தைப்படுத்தக்கூடிய காணி" எனவும் இரண்டு வழிகளில் விபரிக்கப்படுகின்றன. சட்டத்திற்கும் ஏனைய "எழுத்திலான சட்டங்களுக்கும்" உட்பட்டு காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு ஆணைக்குழு வலுவூட்டப்பட்டுள்ளது. இந்த இரண்டு வகைக் காணியினையும் ஆணைக்குழு இதேவிதமாக "கூட்டாட்சியாதன சிறுகூறுகளாக" இறையிலி நில அடிப்படையில் குத்தகைக்கு விட முடியும் அல்லது மாற்ற முடியும்.

"அரசாங்கம் சந்தைப்படுத்தக்கூடிய காணி" என்பது கொழும்புத் துறைமுக நகரத்தினுள் உள்ள குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட மற்றும் இதேபோன்ற அரசாங்கத்தின் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காகக் கிடைக்கச்செய்யப்படும் மீட்கப்பட்ட நிலப் பிரதேசமாகும். சில வரையறுக்கப்பட்ட அபிவிருத்திகள் காணியினை வதிவிட மற்றும் வர்த்தக நோக்கங்களுக்காகவும் "சமுதாய மட்ட அபிவிருத்திக்காகவும்" பயன்படுத்துவதைக் குறிக்கின்றன. "கருத்திட்டக் கம்பனி சந்தைப்படுத்தக்கூடிய காணி" என்பது, நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் கருத்திட்டக் கம்பனிக்கு அதன் வதிவிட, வர்த்தக, களியாட்ட ஓய்வுநேரப் பொழுதுபோக்கு மற்றும் அதேபோன்ற அபிவிருத்திகளுக்காக விநியோகிக்கப்பட்டுக் கருத்திட்டக் கம்பனிக்கு "முதன்மைக் குத்தகைக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் மீட்கப்பட்ட நிலப் பரப்பாகும்.[21]

நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் (1978) கொழும்புத் துறைமுக நகரப் பிரதேசத்தினுள் 'பிரயோகத்தினைக் கொண்டிராத' ஒரு சட்டமாக விலக்கிவைக்கப்பட்டுள்ள போதிலும், நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் விநியோகிக்கப்பட்டு கொழும்புத் துறைமுக நகரத்தின் உடைமையாக்கப்பட்டுள்ள காணி தொடர்பான எவ்விதமான உறுதி மாற்றம் அல்லது குத்தகை அல்லது அதேபோன்ற ஆவணம், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்படுவதாக இப்போது கருதப்படும். இது நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் இருந்து பெற்றுக்கொண்ட உறுதி மூலத்தினை ஆணைக்குழு தொடர்வதை உறுதிப்படுத்துகின்றது. கொழும்புத் துறைமுக நகரத்தினுள் காணி என்னும் இந்த முக்கியமான தலைப்புத் தொடர்பாக இந்த நிறுவனம் எவ்வாறு ஆணைக்குழுவுடன் தொடர்புபடுகின்றது என்பது தெளிவற்றதாக உள்ளது.[22] கொழும்புத் துறைமுக நகரச் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்மானத்தில், ஆணைக்குழுவினாலும் அரச காணிகள் கட்டளைச்சட்டத்தினாலும் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் காணி அளிப்புக்களை மேற்கொள்வதற்கான அவரின் அதிகாரங்களை வலியுறுத்தியபோது, உடைமையாக்கப்பட்ட காணிகளின் குத்தகை மற்றும் மாற்ற அதிகாரம் ஆணைக்குழுவினால் பிரயோகிக்கப்படும் என நீதிமன்றம் ஊகித்தது. காணிக் குத்தகை மற்றும் காணி மாற்றம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் கட்டிடங்கள் பாதுகாக்கப்படல் ஆகிய கருத்தியல்களில் உள்ள தெளிவின்மை தீர்க்கப்படவில்லை.

## கொழும்புத் துறைமுக நகரத்தினுள் மரபுரிமைக் கட்டிடங்களைப் பாதுகாத்தல்

நன்கு பிரபலமான "கொழும்பு கோட்டை மரபுரிமைச் சதுக்கத்தில்" உள்ள பழைய கட்டிடங்களின் எதிர்காலம் பொதுக் கலந்துரையாடல்களின் பேசுபொருளாக இருந்து வருகின்றது. கண்டி மற்றும் காலியில் உள்ள கட்டிடங்கள் தொல்பொருள் திணைக்களத்தினால் "மரபுரிமைக் கட்டிடங்களாக" குறிக்கப்பட்டுள்ளன. காலஞ்சென்ற கலாநிதி ரோலன்ட் சில்வா இந்தத் திட்டத்தினை முன்னெடுத்தார். "மரபுரிமைத் தலங்களாக" வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட கட்டிடங்களின் பாதுகாப்பு, திருத்தம் மற்றும் பராமரிப்பில் நகர அபிவிருத்தி அதிகாரசபையும் மாநகர சபையும் தொல்பொருள் திணைக்களமும் இப்போது ஒருங்கிணைக்கும் வகிபாத்திரத்தினைக் கொண்டுள்ளன.

இருப்பினும், கொழும்பு கோட்டையில் உள்ள கட்டிடங்கள் இவ்விதமாக குறிக்கப்படவில்லை. கொழும்புத் துறைமுக நகரத்தின் சமூக மற்றும் கலாசாரத் தாக்கத்தினைப் பரிசீலிப்பதற்கான யூரி சபையில் இலங்கைக் கட்டிடக் கலைஞரான பானி விஜேரத்ன உள்ளடங்கியிருந்தார். இக்கருத்திட்டத்தின் திட்டமிடலின் போது அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. இருப்பினும் தற்போது கொழும்புத் துறைமுக நகரத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ள "மரபுரிமைச் சதுக்கத்தில்" உள்ள முக்கியமான புராதன கட்டிடங்கள் பாதுகாக்கப்படும் விதம் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளின் விடயமாக இருக்கவில்லை.

அழிவு அல்லது சேதத்திற்கு உள்ளாகும் ஆபத்தில் தனியார் காணிகளில் உள்ள புராதனச் சின்னங்கள் உள்ளடங்கலாக 1815 இற்கும் 1850 இற்கும் முற்பட்ட காலப்பகுதியினைச் சேர்ந்த ''புராதனச் சின்னங்கள்'' என அழைக்கப்படும் கட்டிடங்களின் பாதுகாப்புக்கான ஏற்பாடுகளை பழமையான காலனித்துவ நியதிச்சட்டமான தொல்பொருட்கள் கட்டளைச்சட்டம் (1940) வழங்குகின்றது. இவ்வாறான கட்டிடங்கள் பொது நலனுக்காகப் ''பாதுகாக்கப்பட்ட சின்னங்கள்'' எனப் பிரகடனப்படுத்தப்பட முடியும்.[23] ''மரபுரிமைச் சதுக்கத்தினுள்'' உள்ள கட்டிடங்கள் தொல்பொருள் கட்டளைச்சட்டத்திற்குக் கொண்டுவரப்படும் ஒரு துரித திருத்தத்தின் மூலம் ''பாதுகாக்கப்பட்ட சின்னங்களாகப்'' பிரகடனப்படுத்தப்பட முடியும். இது ஒருங்கிணைக்கப்பட்ட பாதுகாப்புப் பதிற்செயற்பாட்டினை வசதிப்படுத்தும். இலங்கையின் மிகச்சிறந்த பாதுகாப்புக் கட்டிடக்கலைஞர்கள் மற்றும் தனியார் துறையின் பங்கேற்புடன் தொல்பொருள் திணைக்களம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை போன்ற அதிகாரசபைகளும் நிறுவனங்களும் இந்த வனப்புமிக்க கட்டிடங்கள் தொடர்ந்தும் நன்கு பாதுகாக்கப்பட்ட மரபுரிமைத் தலங்களாகக் கலாசார ரீதியாகப் பொருத்தமான மற்றும் நுண்மையான புதுப்பிப்பு மற்றும் திருத்தியமைப்புக்களுடன் தொடர்ந்திருக்கின்றன என்பதை உறுதிப்படுத்த உதவ முடியும்.

மேலே குறிப்பிடப்பட்ட கொழும்புத் துறைமுக நகரத்துக்கான யூரி அறிக்கையினால் பாதுகாப்புப் பணிக்கான ஓர் அடிப்படையினை வழங்க முடியும். கோட்டையின் ''மரபுரிமைச் சதுக்கத்தினுள்'' அமைந்துள்ள இந்த முக்கியமான கட்டிடங்களைப் பாதுகாத்தல் என்னும் விடயத்திற்கு பதிற்செயற்பாடாற்றத் தவறுகின்றமையானது, இலங்கையின் மரபுரிமைத் தலங்கள் என்னும் கருத்தியலுடன் முரண்படும் விதிகள் மற்றும் நியமங்களுக்கு அமைவாக ''அதிகாரம் பெற்ற முகவர்'' கம்பனி ஒன்று இந்தக் கட்டிடங்களைக் கடைசியில் அழிப்பதற்கோ அல்லது புதுப்பிப்பதற்கோ இட்டுச்செல்லலாம். சீனக் கம்பனி ஒன்று திஸ்ஸ வாவியினைத் தூர் வாரிய நிலை மீண்டும் நிகழ்வதை நாம் காண நேரிடலாம்.

## அரசியலமைப்பில் உள்ள சமத்துவம் மற்றும் பாகுபாடு காட்டப்படாமை பற்றிய விதிகளை மதித்தல்

கொழும்புத் துறைமுக நகரச் சட்டமூலத் தீர்மானத்தில், உயர் நீதிமன்றம் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் கொழும்புத் துறைமுக நகரத்தில் வியாபாரம் செய்வதற்கு உரிமங்களையும் அனுமதியினையும் வழங்குதல், ''அதிகாரமளிக்கப்பட்ட நபர்களைப்'' பதிவுசெய்தல் தொடர்பான ஏனைய சில விடயங்களைப் பரிசீலித்தது. சம்பந்தப்பட்ட எழுத்திலான நியதிச்சட்டங்களின் ஏற்பாடுகளை மீறி, ஆணைக்குழு தன்னிச்சையான தீர்மானங்களை எடுப்பதற்கு அனுமதிக்காதிருக்கும் சட்டத்தின் முக்கியத்துவத்தினை உயர் நீதிமன்றம் வலியுறுத்தியது. வழங்கப்படும் விதிவிலக்குகளின் ''நியாயமான வகைப்படுத்தலின்'' அடிப்படையில் தனித்துவமான வழிகாட்டல்களை நிர்ணயிப்பதன் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட நபர்களுக்கு விதிவிலக்குகள் மற்றும் நன்மைகளை அளித்தலில் பாகுபாடு தவிர்க்கப்படவேண்டும்.

சமத்துவத்திற்கான அடிப்படை உரிமை மற்றும் சட்டத்தின் சமமான பாதுகாப்பு ஆகியவை பற்றிய அரசியலமைப்பின் 12 ஆம் உறுப்புரையினை அமுலாக்குவதற்கான மற்றும் உறுதிப்படுத்துவதற்கான தேவையில் கனம் நீதிபதிகள் கவனம் குவித்தனர். ஆயினும், கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளில் இருந்து கரை கடந்த கம்பனிகளை விலக்கிவைத்தமையினை இந்த விதிகளின் மீறலாக நீதிமன்றம் கருதவில்லை. ஏனெனில், கரை கடந்த கம்பனிகளுக்கு விலக்களிப்பது பற்றிய ஏற்பாடுகளைச் சட்டம் கொண்டிருந்தது. கம்பனிகள் பதிவாளர் நாயகம் ஓர் ஒழுங்குபடுத்தல் அதிகாரியாக சட்டத்தில் கருதப்படுகின்றார் என்பதையும் சுட்டிக்காட்டிய நீதிமன்றம், வலயத்தினுள் கம்பனிகள் சட்டத்தின் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளின் அமுல்படுத்தலை ஆணைக்குழுவின் தீர்மானங்கள் மீறக்கூடாது என்பதையும் சுட்டிக்காட்டியது. பேசப்படும் சட்டவாக்கம் வலயத்தினுள் பிரயோகிக்கப்படுவதால் கறுப்புப் பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் அபாயநேர்வுகள் பற்றிய வாதத்தினை நீதிமன்றம் நிராகரித்தது.[24]

தமது வளாகங்களின் குத்தகையின் எதிரிணைப் பங்களிப்பு அடிப்படையில் அதிகாரமளிக்கப்பட்ட நபர்களுடன் கொழும்புத் துறைமுக நகரத்தினுள் இலங்கையர்கள் வியாபாரத்தில் ஈடுபடுவதை அனுமதிப்பதற்கு ஆணைக்குழு வலுவூட்டப்பட்டுள்ளது.

காணியின் பெறுமதி முதலீட்டின் பகுதியாகும். நிதிகள் நாட்டிற்கு வெளியே இருந்தான வெளிநாட்டு நாணயத்தில் இருந்தாலேயன்றி அவர்களால் வேறு எந்த வகையிலும் இந்த வியாபாரங்களில் முதலீடு செய்ய முடியாது. கொழும்புத் துறைமுக நகரத்திற்கு *வெளியே* இலங்கையர்களுடன் வியாபாரத் தொழில் முனைவில் அதிகாரமளிக்கப்பட்ட நபர்கள் பங்காண்மை அமைப்பதற்கும் அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வாறான முயற்சிகள் பொதுநலன் சார்ந்தவையாக இருக்கின்றன மற்றும் இலங்கையின் தேசிய பொருளாதாரத்தினை முன்னேற்றுபவையாக இருக்கின்றன என்பதை உறுதிப்படுத்துமாறு ஆணைக்குழு தேவைப்படுத்தப்படுகின்றது. வலயத்தினுள் இயங்குகின்ற அதிகாரமளிக்கப்பட்டுள்ள நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விதிவிலக்கு அவர்கள் வலயத்திற்கு வெளியே இயங்குகையில் வழங்கப்படவில்லை என்பதையும் ஆணைக்குழு உறுதிப்படுத்தவேண்டும். பின்னைய தேவைப்பாடு திருத்தமாகவே சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில், அவ்வாறான விதிவிலக்கினை வழங்குவது வலயத்திற்கு வெளியே நடைபெறும் ஏனைய வியாபார முயற்சிகளுக்கு எதிராகப் பாகுபாடு காட்டும் என உயர் நீதிமன்றம் கருதியது.[25]

கரை கடந்த கம்பனிகள் உள்ளடங்கலாக அதிகாரமளிக்கப்பட்ட நபர்கள் வலயத்திற்கு வெளியேயுள்ள நிறுவனங்களில் இருந்தும் நபர்களிடம் இருந்தும் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். கொழும்புத் துறைமுக நகரம் ஆணைக்குழுவின் அதிகாரப் பரப்பினுள் ஒரு ''வதிவிடச் சமுதாயத்தினைக்'' கொண்டிருக்கும். இந்த நோக்கத்திற்காக ''நகர பொதுவசதி இயக்கங்களை மேம்படுத்துவதற்கு'' ஆணைக்குழு தேவைப்படுத்துகின்றது. இருப்பினும், வலயத்தினுள் பிரயோகிக்கப்பட முடியாததாகக் கருதப்படும் நியதிச்சட்டங்களுள் மாநகரசபைகள் கட்டளைச்சட்டமும் ஒன்றாகும். அதிகாரமளிக்கப்பட்ட நபர்கள் நீர் மற்றும் வெளிச்சம் போன்ற சேவைகளை வலயத்திற்கு வெளியே இருந்து அணுகிப் பெறும் முக்கியமான விடயத்தினை உயர் நீதிமன்றத் தீர்மானம் கருத்தில் கொள்ளவில்லை.[26]

எனவே, ஆணைக்குழுவின் நிர்வாகம் சட்டத்துடனும் அரசியலமைப்புடனும் இயைபுறுகின்றது என்பதை எவ்வாறு உறுதிப்படுத்துவது என்பது தொடர்பாகச் சில வழிகாட்டல்களைத் தீர்ப்பு வழங்கியது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஆணைக்குழுவில் செல்வாக்குச் செலுத்துமா என்பதை எதிர்வுகூறுவது கடினமானதாகும். சட்டத்தின் பிரதியுடன் தீர்ப்பு இணைக்கப்பட்டு, கொழும்புத் துறைமுக நகரம் மற்றும் ஆணைக்குழு பற்றிய தகவல்களின் பகுதியாக சகல உறுப்பினர்களுக்கும் ''அதிகாரமளிக்கப்பட்ட நபர்களுக்கும்'' விநியோகிக்கப்படவேண்டியதாக இருக்கக்கூடும்.

## (உ) நீதிமன்றங்களினதும் கொழும்புத் துறைமுக நகரத்தினதும் வகிபாத்திரமும் பொறுப்பும்

அரசியலமைப்பில் தரப்பட்டுள்ளவாறு, எமது நாட்டின் ஆளுகைக் கட்டமைப்பில் உள்ள பிரதான தூண்களில் ஒன்று நீதித்துறையாகும். நீதித்துறையின் வகிபாத்திரமும் பொறுப்பும் மக்களின் இறைமையில் அமைந்துள்ளது. ஆளுகையின் ஏனைய தூண்களான பாராளுமன்றத்தினதும் நிறைவேற்று அதிகாரமான ஜனாதிபதியினதும் தலையீடு இன்றிய நீதித்துறையின் சுயாதீனமே மக்களின் இறைமை என்னும் கருத்தியலுக்கு மையமானதாகும். ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அதிகாரமும் பொறுப்பும் நிறைவேற்றப்படுகையில்இடம்பெறும் பரிசீலிப்புக்களும் சமப்படுத்தல்களும் (Checks and balances) மக்களின் நலனோம்புகையினையும் ஆளுகையில் அதிகாரத் துஷ்பிரயோகத்தில் இருந்து அவர்கள் பாதுகாக்கப்படுகின்றனர் என்பதையும் உறுதிப்படுத்துவதுடன் இணைந்துள்ளன. நீதிமன்றங்களின் மூலமாக அரசியலமைப்பு ரீதியாகப் பாதுகாக்கப்படுகின்ற அடிப்படை உரிமைகளின் அமுலாக்கத்துடனும் அரச நிறுவனங்களினால் அதிகாரம் தன்னிச்சையாகப் பயன்படுத்தப்படுவதற்கு ஆட்சேபணை தெரிவிப்பதற்கான ஆற்றலுடனும் மக்களின் இறைமை இணைக்கப்பட்டுள்ளது. ஆளுகையில் ஏனைய தூண்களின் வகைப்பொறுப்புமிக்க ஆளுகையினை வசதிப்படுத்துவதில் நீதிமன்றங்களின் முக்கியமான வகிபாத்திரத்தினை கொழும்புத் துறைமுக நகர வழக்காடலில் உயர் நீதிமன்றத் தீர்ப்பு அங்கீகரிக்கின்றது.

ஒரு பொது நிறுவனமாகக் கொழும்புத் துறைமுக நகரத்தின் நிர்வாகமானது அடிப்படை உரிமைகள் பற்றிய அத்தியாயத்துடன் இயைபுறவேண்டும் என்பதைக் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டமூலத் தீர்மானத்தில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தெளிவுபடுத்தி வலியுறுத்துகின்றது.[27] சட்டமூலத்தில் உள்ள பல

ஏற்பாடுகள் அரசியலமைப்புடன் இயைபுறாதவை என அகற்றப்பட்டதுடன் அரசியலமைப்பின் 12 மற்றும் 14 (ஐ) (எ) மற்றும் (ஏ) ஆகிய உறுப்புரைகளை மீறும் சாத்தியத்தின் அடிப்படையில் இறுதிச் சட்டத்தில் திருத்தப்படவேண்டியிருந்தன. சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைகள் உள்ளிட்ட நியதிச்சட்டங்களின் தீர்மானம் வகுத்தல் அதிகாரங்களுக்கு ஆணைக்குழு இயைபுறுவதன் முக்கியத்துவத்தினை நீதிமன்றம் வலியுறுத்தியது. அரசியலமைப்பின் 12 (1) மற்றும் 148 ஆகிய உறுப்புரைகளுக்கு இயைபுற்றுத் தற்றுணிபுமிக்க அதிகாரங்களை ஆணைக்குழு பயன்படுத்துவதன் தேவையினை, குறிப்பாக அரசிறை விதிவிலக்குகள் உள்ளிட்ட விதிவிலக்குகளை அளிப்பதில் இயைபுறுவதன் தேவையினை உயர் நீதிமன்றம் எடுத்தாண்டிருந்தது.

முன்பு குறிப்பிட்டதைப் போல், அரசின் செயலின்மையின் விளைவாக அரச சார்பற்ற செயற்பாடுகள் அடிப்படை உரிமைகளை மீறுகையில் அரசின் செயலின்மை ஆட்சேபிக்கப்பட முடியும்.[28] சிவில் நீதிமன்றத்தில் அவர்களைப் பொறுப்புக்கூறவைப்பதற்கு அடிப்படை உரிமைகள் ஓர் அடிப்படையாக இருக்கமுடியும் என்ற வாதம் இருக்கின்றது. பேச்சுச் சுதந்திரம் மற்றும் கருத்து வெளிப்பாட்டுக்கான சுதந்திரம் மற்றும் நடமாட்ட சுதந்திரம் மீதான முக்கியமான அடிப்படை உரிமைகளைப் பிரசைகளினால் மாத்திரமே உரிமைகோர முடியும் என்பது சுவாரஸ்யமானதாகும். இது "அதிகாரமளிக்கப்பட்ட நபர்களான" மற்றும் துறைமுக நகர சமுதாயத்தின் உறுப்பினர்களான பிரசையல்லாதவர்களுக்கான உட்குறிப்பீடுகளைக் கொண்டுள்ளது.[29] அரச சாராச் செயற்படுநர்கள் மற்றும் அடிப்படை உரிமை மீறல் தொடர்பான விடயங்கள் வழக்காடலில் எழவில்லை. ஆனால் விடயத்தின் மீதான சட்டவியல் கொழும்புத் துறைமுக நகரத்தில் பிரயோகிக்கப்படும்.

ஆணைக்குழுவுக்கான ஜனாதிபதியின் "சட்டத்திற்கு அமைவற்றதான" ஒரு நியமனம் தொடர்பாக நீதிமுறை மீளாய்வு காணப்படலாம் என்பதை உயர் நீதிமன்றம் தீர்ப்பில் ஏற்றுக்கொண்டிருந்தது. நியமனத்திற்கான அதிகாரத்தின் தன்னிச்சையான பயன்பாட்டினைப் "பொருத்தமான சட்ட நடவடிக்கைமுறையில்" ஆட்சேபிக்க முடியும் எனத் தீர்ப்புக் குறிப்பிட்டது.[30] ஒரு முன்னணி வழக்கில், வழிகாட்டல் இன்றி உயர் நீதிமன்றத்துக்குச் சட்ட நூலகப் பணியாளர் ஒருவரை ஜனாதிபதி நியமிக்கக்கூடியதாக இருக்கும் வகையில் தற்றுணிபு எல்லையற்றதாக இருக்கும் அளவுக்கு ஜனாதிபதியின் நியமனம் தொடர்பான அரசியலமைப்பு ஏற்பாடுகள் வரம்பற்ற தற்றுணிபினை வழங்கியதா என மனுதாரரின் சிரேஷ்ட சட்டத்தரணி நீதிமன்றத்திடம் கேட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது! நீதிபதி மார்க் பெர்னான்டோவின் தீர்ப்பு பின்வருமாறு இதனைத் தெளிவுபடுத்தியது, "அதிகாரம் தற்றுணிபு மிக்கது, ஆனால் வரம்பற்றதல்ல. அது கட்டுண்டதுமல்ல அல்லது கட்டற்றதுமல்ல". உயர் நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவர் உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாகவும் இருக்கவேண்டும் என்பதுடன் ஏனைய சில நிபந்தனைகளையும் நிறைவேற்றவேண்டும்" எனக் கனம் நீதிபதி மேலும் குறிப்பிட்டார்.[31] கொழும்புத் துறைமுக நகர வழக்கில் சிரேஷ்ட சட்டத்தரணி தெரிவித்த ஒரு கூற்றில், இந்த நீதிமன்றத்தின் நீதிபதியாக ஒரு வெளிநாட்டவர் கூட நியமிக்கப்படலாம் என்பதற்கு நீதித்துறை நியமனங்கள் தொடர்பான சட்டவியல் துணைவலு சேர்க்கவில்லை எனக் குறிப்பிட்டார். கொழும்புத் துறைமுக நகரச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதியினதும் ஆணைக்குழுவினதும் நியமன அதிகாரங்கள் எல்லையற்ற தற்றுணிபு என விபரிக்கப்பட முடியாதவை ஆகும் என்பதுடன் அரசியலமைப்பு விதிகள் மற்றும் நியமங்களை மீறியமைக்காக ஆட்சேபிக்கப்படவும் முடியும்.

கொழும்புத் துறைமுக நகரத்தினுள் இழைக்கப்படும் குற்றச்செயல்களை விசாரிப்பதற்கான நியாயாதிக்கத்தினை நீதிமன்றங்கள் கொண்டுள்ளன.[32] எவ்வாறாயினும், அதிகாரமளிக்கப்பட்ட நபர் அல்லது நபர்கள் இந்தச் சட்டத்தின் கீழ் குற்றம் ஒன்றினை இழைக்கையில், குற்றமானது "தனது அறிவின்றி இழைக்கப்பட்டது என அல்லது குற்றம் இழைப்பதைத் தவிர்ப்பதில் அவர் போதிய கவனம் செலுத்தினார் என நிரூபிக்கப்பட்டால், அவர்கள் அக்குற்றத்தினை இழைத்ததாகக் கருதப்படமாட்டார்கள் என சட்டத்தில் உள்ள ஏற்பாடு குறிப்பிடுகின்றது."[33] ஆணைக்குழுவின் குறிக்கோள்களாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் "வியாபாரத்தினை மேற்கொள்வதன் இலகுதன்மையினை வசதிப்படுத்தல்" மற்றும் (சட்டம் மற்றும் ஒழுங்குவிதிக்கு) "இயைபுறல் பொறுப்பில் இருந்து விடுவித்தல்" ஆகிய தனிச்சிறப்புப் பண்புகளுடன் இது இயைபுறுகின்றது.[34] இதேபோன்று, கொழும்புத் துறைமுக நகர ஆணைக்குழுச் சட்டத்துடன் இயைபுறும் பொதுவான எந்த எழுத்திலான சட்டத்திலும் பதிவு உரிமங்களிலும் உறுதிகளிலும் மாற்றங்களிலும் அல்லது குத்தகைகளிலும் உள்ளவற்றுக்கு மாற்றமாக

ஏற்பாட்டில் உள்ளது எதுவாக இருப்பினும், புதிய முதலீட்டாளருக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் அதனை முடிவுறுத்த முடியாது அல்லது திருத்த முடியாது. சில விதிவிலக்குகள் குறிப்பிடப்பட்டுள்ளன.[35] நாட்டில் நீதி நிர்வாகம் என்னும் சூழமைவில் சட்டத்தில் உள்ள இந்த விசேட ஏற்பாடுகளின் நோக்கெல்லையும் பிரயோகங்களும் தெளிவற்றவையாக உள்ளன. உதாரணமாக, குற்றம் ஒன்றினைப் பற்றிய "அறிவின்மை" மற்றும் சட்டத்தின் கீழ் நியதிச்சட்டத் தவறு தொடர்பில் "போதிய கவனம்" அல்லது கவனம் எடுத்தல் ஆகியவற்றின் எதிர்வாதத்தின் நோக்கெல்லை என்ன?

வியாபாரத்தினை மேற்கொள்வதன் இலகுதன்மை என்னும் குறிக்கோளின் அடிப்படையில், பிணக்குத் தீர்விற்கான ஒரு முறையாக சட்டம் நடுத்தீர்ப்பினை முன்னுரிமைப்படுத்துகின்றது. இது, உயர் நீதிமன்றத்தினால் சுட்டிக்காட்டப்பட்டவாறாக, நடுத்தீர்ப்புக் கட்டாயமானதல்ல ஆனால் கருத்தொருமிப்புமிக்க உடன்பாட்டின் அடிப்படையில் என நீதிமன்றங்களை "அகற்றவில்லை."[36] சிவில் அல்லது வர்த்தக வழக்குகளைக் கொழும்புத் துறைமுக நகரத்தில் "துரிதமாகவும் நாளாந்த அடிப்படையிலும்" விசாரிப்பதற்கு முன்னுரிமை வழங்குமாறு நீதிமன்றங்களைத் தேவைப்படுத்தும் சட்டத்தின் விசேட பகுதியினையும் உயர் நீதிமன்றம் பரிசீலித்தது. மக்களின் நீதிமுறை அதிகாரங்கள் தொடர்பான மற்றும் சமத்துவம் மற்றும் பாகுபாடின்மைக்கான பிரசைகளின் உரிமை என்னும் கருத்தியல் தொடர்பான அரசியலமைப்பின் 3, 4 மற்றும் 12 ஆகியவை மீறப்படுகின்றன என்னும் மனுதாரரின் வாதத்தினை கனம் நீதிபதிகள் நிராகரித்தனர். வியாபாரத்தினை மேற்கொள்வதன் இலகுதன்மை மற்றும் புதிய முதலீடுகளைக் கவர்தல் ஆகிய குறிக்கோள்களை அடையும் நோக்கத்திற்கான "நியாயமான வகைப்படுத்தல்" என இந்த ஏற்பாடு நீதிமன்றத்தினால் கருதப்பட்டது.[37]

இந்த நாட்டின் மிகப் பெரும்பான்மையான மக்களுக்கு நீதி மறுக்கப்படுவதற்கு இட்டுச்சென்ற சிறுவர் துஷ்பிரயோகம் மீதான வழக்குகளில் ஏற்பட்ட தாமதங்கள் உள்ளடங்கலாகப் பல பரப்புக்களில் தாமதங்கள் நிலவும் சூழமைவில், இச்சிறப்புரிமையினை அளிப்பதன் "நியாயமானதன்மை" சந்தேகத்துக்குரியது எனக் மரியாதையுடன் சமர்ப்பிக்கப்படுகின்றது. நிச்சயமாக, நீதி நிர்வாகத்தில் சட்டத் தாமதங்கள் என்பவை ஒரு பொதுவான பிரச்சினையாக இருப்பதுடன் இவை நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை முறைகளை மேம்படுத்துவதற்கான இலக்குவைக்கப்பட்ட இடையீடுகளுடன் களையப்படவேண்டும். தேசிய முன்னுரிமையின் அடிப்படையில் இந்த நோக்கத்திற்காக வேறு பல பரப்புக்களும் தெரிவுசெய்யப்படாவிட்டால், துரிதமான நடவடிக்கைக்காகக் கொழும்புத் துறைமுக நகரத்தினுள் வர்த்தக வழக்காடலின் ஒரு வகைக்கு முன்னுரிமை வழங்குவது பாகுபாடுமிக்கதாக அமையும்.

## முடிவுகள்

வலயங்களினுள் செயற்திறன்மிக்க ஒழுங்குவிதி மற்றும் முகாமைத்துவத்தின் மூலமான வகைப்பொறுப்புமிக்க ஆளுகை இருக்கையில் மட்டுமே விசேட பொருளாதார வலயங்கள் செயற்திறனுடன் செயற்படுகின்றன என்பதற்கான சான்றடிப்படை காணப்படுகின்றது. சுற்றாடல் பாதிப்புக்கள் மற்றும் தீர்மானம் வகுத்தலில் அரசியல்மயமாக்கம் போன்ற பாதகமான தாக்கங்கள் வாக்குறுதியளிக்கப்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கான வலயங்களின் ஆற்றலைக் கீழறுக்கின்றன.[38]

இதைத் தவிர, எழுத்திலான அரசியலமைப்பு, மற்றும் பிரதானமான சட்ட விதிகள் மற்றும் ஆளுகை முறைமையின் நியமங்கள் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டுள்ள நாட்டின் ஒழுங்குபடுத்தல் முறைமையில் இருந்து இவ்வாறான வலயங்கள் விலகிச் செல்லக்கூடாது. வியாபாரம் மற்றும் மனித உரிமைகள் அடிப்படையிலான பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியினை இணைக்கும் பல்தரப்புச் சமவாயத்தினை உருவாக்குவதற்கும் ஏற்று நடைமுறைப்படுத்துவதற்குமான வியாபாரம் மற்றும் முன்மொழிவுகள் பற்றிய ஐநா வழிகாட்டல் கோட்பாடுகள், தேசிய அபிவிருத்தியில் அரசு சாராப் பெருநிறுவனச் செயற்படுநர்களின் வகிபாத்திரம் பற்றிய புதிய சிந்தனையினைப் பிரதிபலிக்கின்றன. பெருநிறுவனச் சமூகப் பொறுப்புக்கும், மனித உரிமைகள் மற்றும் நிலைபெறுதகு அபிவிருத்தி பற்றிய சர்வதேச விதிகளுடன் பொருளாதார வளர்ச்சியினைச் சமநிலைப்படுத்தலுக்கும் முன்னுரிமை வழங்கப்படுகின்றது. இலங்கை ஏற்று அங்கீகரித்துள்ள சர்வதேசப் பொருத்தனைகளுடன் உள்நாட்டுச் சட்டங்கள், கொள்கைகள் மற்றும் ஆளுகையினை ஒத்திசைவிப்பதற்கான அரசாங்கத்தின் கடப்பாடுகளின் அடிப்படையில் நாடு எழுத்திலான

அரசியலமைப்பினையும் ஜனநாயக ஆளுகை மாதிரியினையும் கொண்டுள்ளது.[39] வழக்காடலில் சர்வதேச விதிகள் பரிசீலிக்கப்படவில்லை எனினும், நிலைபெறுதகு அபிவிருத்தி பற்றிய இந்தப் போக்குகளுக்கு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இயைபுறுவது போல் தென்படுகின்றது.

அரசிறை மற்றும் அரசிறை சாரா ஊக்குவிப்புக்களையும் முன்விருப்புக்குரிய வியாபாரக் கொள்கைகள் மற்றும் ஆட்சேர்ப்பு மற்றும் தொழில்விலக்கலையும் வழங்கி, வியாபாரம் செய்வதன் இலகுதன்மையினை ஊக்குவித்து வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கும் குறிக்கோள்களே இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் எழுத்திலான சட்டம் ஆகியவற்றினைப் புறக்கணித்து கொழும்புத் துறைமுக நகரச் சட்டமூலத்தினை வரைவதற்கு சட்டமூல வரைஞர்களுக்குத் தெளிவாக வழிகாட்டியுள்ளது. கொழும்புத் துறைமுக நகரச் சட்டமூலம் உயர் நீதிமன்றத்தில் ஆட்சேபிக்கப்பட்டபோது, பல மனுக்களினதும் அடிப்படையாக இருந்தது எமது தேசிய ஒழுங்குபடுத்தல் முறைமையுடன் சட்டமூலம் இயைபுறவில்லை என்பதேயாகும். எமது அரசியலமைப்பு மற்றும் சட்ட முறைமை ஆகியவற்றின் சட்டகங்களுக்கு வெளியேயான சட்ட ஒழுங்குவிதிக்கான ஒரு தனித்துவமான நிலப்பகுதியாகத் துறைமுக நகரப் பொருளாதார வலயம் செயற்பட முடியாது என உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு முடிவினை வெளியிட்டிருந்தது.

சட்டமூலத்தின் பல ஏற்பாடுகள் நீதிமுறை மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு, அரசியலமைப்பினை மீறுகின்றமைக்காக அவற்றினை அகற்ற முடியும் என்பதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு உள்ளிட்ட பொது நிறுவனங்கள் நாட்டின் சட்டம் மற்றும் அரசியலமைப்புச் சட்டகத்திற்கு வெளியே செயற்பட முடியாது எனத் தெளிவாகப் பிரகடனப்படுத்தப்படுவதற்கு மனுவும் உயர் நீதிமன்றத்தின் அபிப்பிராயமுமே பங்களிப்பு வழங்கியிருந்தன. எனவே, நாட்டின் அரசியலமைப்பு மற்றும் சட்டத்துடன் "இயைபுறும் பொறுப்பு" என அசலான சட்டமூலம் எதைக் கருதியதோ அதில் இருந்து முதலீட்டாளர்கள் முற்றுமுழுவதும் விடுவிக்கப்படுகின்ற ஒரு "வியாபார நிலப்பரப்பு" "சர்வதேச மையம்" ஆகக் கொழும்புத் துறைமுக நகரம் இருக்க முடியும் என்கின்ற பொதுமக்களின் மனப்பதிவினை ஆட்சேபிப்பதற்கான ஓர் அடிப்படையினை உயர் நீதிமன்றத்தின் அபிப்பிராயம் வழங்குகின்றது. எமது சட்டம் மற்றும் அரசியலமைப்பின் விதிகள் மற்றும் நியமங்கள் ஆகியவற்றுக்கு அமைவாக மக்களாலும் சிவில் சமூகத்தினாலும் ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களினாலும் கொழும்புத் துறைமுக நகர நடவடிக்கைகள் கண்காணிக்கப்படலாம் மற்றும் கண்காணிக்கப்படவேண்டும் என்னும் முக்கியமான ஓர் உறுதிப்படுத்தல் காணப்படுகின்றது.

அரசியலமைப்பில் ஆளுகையின் சட்டவாக்கத் தூணாக இருக்கும் பாராளுமன்றத்தில் இயற்றப்படுவதற்காகச் சமர்ப்பிக்கப்படும் சட்டங்கள் மற்றும் கொள்கைளின் உருவாக்கம் தொடர்பான தீவிரமான வினாக்களையும் கொழும்புத் துறைமுக நகரச் சட்டமூலம் பற்றிய வழக்காடல் எழுப்புகின்றது. இந்த யதார்த்தங்களின் அடிப்படையில் நோக்குகையில், பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் கொழும்புத் துறைமுக நகரச் சட்டமூலத்தினை அரசியலமைப்புடன் இயைபுறுகின்ற ஒரு சட்டமூலம் என எவ்வாறு பகிரங்கமாகச் சட்டத்துறைத் தலைமையதிபதி விபரிக்கலாம்?[40]

சட்டத்துறைத் தலைமையதிபதியின் சார்பில் ஆஜராகிய மேலதிக மன்றாடியார் தலைமையதிபதி திருமதி பர்சானா ஜமீல், உயர் நீதிமன்றத்தினால் மீளாய்வு செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளக்கூடியது எனக் கருதப்பட்ட சட்டமூலத்தின் சில ஏற்பாடுகள் தொடர்பாகச் சிறப்பான வாதத்தினை முன்வைத்தார். பாராளுமன்றத்தில் சட்டமூலம் நிறைவேற்றப்படுகையில் குழுநிலையின் போது பிரேரிக்கப்படும் எனக் குறிப்பிட்டு ஏற்பாடுகளுக்கான திருத்தங்களையும் திருமதி ஜமீல் சமர்ப்பித்தார். சில ஏற்பாடுகளின் அரசியலமைப்புடன் பொருந்தாத்தன்மையினை அகற்ற இது உதவியது.

வழக்காடலில் சட்டமூலம் ஒன்று ஆட்சேபிக்கப்படுகையில் சட்டமூலத்திற்குத் திருத்தங்களைச் சமர்ப்பிக்கும் நடவடிக்கை முறையின் அங்கீகாரம், உத்தேச சட்டவாக்கத்தினை அதன் அரசியலமைப்புடன் பொருந்தும் தன்மைக்காக நுண்ணாய்வு செய்து சட்டமூலம் ஒன்றிற்கு மாற்றங்கள் மேற்கொள்ளப்படுவது தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கும் தெளிவான பொறுப்பில் இருந்து சட்டத்துறைத் தலைமையதிபதியை விடுவிக்கின்றது என கௌரவத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது. சட்டமூலம் ஒன்று ஆட்சேபிக்கப்படுவதற்கு முன்னரே சட்டத்துறைத் தலைமையதிபதி

அதனைப் நுண்ணாய்வு செய்வதே, அரசியலமைப்பு விதிகளுடன் இயைபுறுகின்ற சட்டம் மற்றும் கொள்கை வகுப்பில் ஈடுபடுவதற்கான அரசாங்கத்தின் வகைப்பொறுப்பினை வலுப்படுத்துகின்றது. உயர் நீதிமன்றத்தில் நீதிமுறை மீளாய்வின் போது எதிர்காலப் பாராளுமன்றக் குழுநிலைத் திருத்தங்கள் என்ற அடிப்படையில் சட்டமூலம் ஒன்றிற்கு மாற்றங்களைச் சமர்ப்பிக்கும் நடைமுறை, 20 ஆவது திருத்த வழக்காடலில் மனுதாரர்களின் சட்டத்தரணியினால் ஆட்சேபிக்கப்பட்டது. ஆனால் உயர் நீதிமன்றத்தினால் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பாராளுமன்றத்தினால் விவாதிக்கப்பட்டு இயற்றப்படுவதற்காகச் சட்டமூலம் ஒன்று சமர்ப்பிக்கப்படுவதற்கு *முன்னர்* அதன் அரசியலமைப்புடன் பொருந்துந்தன்மையினை நுண்ணாய்வு செய்வதற்கான பொறுப்பினை நிறைவேற்றுவதற்கு பதிலாக இந்த முறையற்ற நடைமுறையினைப் பின்பற்றுவதற்கு சட்டத்துறைத் தலைமையதிபதி திணைக்களத்தினை இது ஊக்குவித்திருப்பது துரதிர்ஷ்டவசமானதாகும். சட்டமூலங்களைப் பரிசீலிக்கும் தனது அணுகுமுறையினை மீளாய்வு செய்வதைப் பற்றி உயர் நீதிமன்றம் தீவிரமாகப் பரிசீலிப்பதை இந்த நடைமுறை நிச்சயமாகத் தகுதியுடையதாக்குகின்றது.

நகர அபிவிருத்திச் சட்டம், மாநகர சபைகள் கட்டளைச்சட்டம் போன்ற முக்கியமான நியதிச்சட்டங்களை கொழும்புத் துறைமுக நகர ஆணைக்குழுச் சட்டம் விலக்கிவைப்பதன் தாக்கங்கள் கொழும்புத் துறைமுக நகர ஆணைக்குழுவின் பணிகள் ஆரம்பிக்கையிலேயே தெளிவாகும். இதேபோன்று, உண்ணாட்டரசிறைச் சட்டம் மற்றும் தொழிலாளர்களின் வேலை முடிவுறுத்தல் சட்டம் போன்ற முக்கியமான நியதிச்சட்டங்களில் இருந்து விலக்களிப்பதால் அல்லது அவற்றில் இருந்து ஊக்குவிப்புக்களை அளிப்பதால் ஆணைக்குழு ஏற்படுத்தும் தாக்கங்களையும் அது செயற்படத் தொடங்குகையிலேயே தெளிவாகக் காண முடியும்.[41] தொழிலாளர்களின் வேலை முடிவுறுத்தல் சட்டத்தினைக் கொழும்புத் துறைமுக நகர வியாபாரங்களில் பிரயோகிக்கப்படுவதில் இருந்தும் விலக்கிவைப்பது இப்பிரதேசத்திற்கு வெளியே உள்ள தொழில் உறவுகளில் பிரயோகிக்க முடியாத வேலைக்கமர்த்தல் மற்றும் வேலையில் இருந்து அகற்றல் கருத்தியலுக்கு இட்டுச்செல்லும். 1977 – 1980 காலப்பகுதியில் சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில் சட்டங்களில் இருந்தான இவ்வகையான விதிவிலக்குகள் அறிமுகப்படுத்தப்பட்டபோது, சுதந்திர வர்த்த வலயத்தின் உள்ளேயும் வெளியேயும் தொழிற்சாலைகளில் பெண் தொழிலாளர்கள் சுரண்டப்படுவதைத் தடுப்பதற்கு உதவியது பெண்கள் குழுக்கள் உள்ளிட்ட சிவில் சமூக அமைப்புக்களின் செயற்பாட்டியமே. முதலீட்டாளர் நம்பிக்கையினை மேம்படுத்துவதற்கும் "வியாபாரம் செய்வதன் இலகுதன்மையினை வசதிப்படுத்துவதற்கும்" சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இயைபுறுவதைக் குறைவானதாக்கும் குறிக்கோள்கள், பொது நிறுவனங்களை முகாமைத்துவம் செய்து நிர்வகிப்பதில் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளையும் தொழிலாளர் உரிமைகளையும் புறக்கணிக்கும் சிறப்புப் பண்பினை மேலும் ஏற்புடையதாக்கவில்லை மற்றும் வலுப்படுத்தவில்லை என்பதை உறுதிப்படுத்த இதேபோன்ற ஈடுபாடு அவசியமானதாக இருக்கலாம். மக்களின் அடிப்படை உரிமைகளைக் கீழறுப்பதன் மூலமும் சட்ட அமுலாக்கலில் அரசியல் தலையீட்டினை ஏற்புடையதாக்குவதன் மூலமும் சட்டம் மற்றும் அரசியலமைப்பு மீறலுக்கான சட்டக்காப்பு மூலமும் நீதி நிர்வாகத்தில் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையினை மேலும் பாழ்படுத்துவதை ஊக்குவிக்காமல் இருப்பது முக்கியமானதாகும்.

மனுதாரர்களின் ஆட்சேபணை காரணமாகவும் வழக்காடலில் நீதிமுறை மீளாய்வின் காரணமாகவும் கொழும்புத் துறைமுக நகரச் சட்டத்திற்கு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையினையும் தாண்டி, "அரசு ஒன்றினுள் அரசாக" இருக்கும் ஒரு நிலப்பரப்பாக மாறுவதற்கு கொழும்புத் துறைமுக நகரம் அனுமதிக்கப்படுமானால் அது ஒரு செம்மையான முரண்நகையாகவே இருக்கும். பல்வேறு அரசியல் கட்சிகளின் ஆட்சிகளின் போது மாகாணங்களுடன் அதிகாரப் பரவலாக்கம் மற்றும் அதிகாரப் பகிர்வு என்னும் கருத்தியல் சர்ச்சைக்குரிய ஒரு விடயமாக இருந்து வரும் சூழமைவிலேயே இந்த நிலை காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் உயர் நீதிமன்றத்தின் சட்டவியல் "மக்களின் இறைமை" என்னும் முக்கியமான கருத்தியலை அங்கீகரித்துள்ளது. உயர் நீதிமன்றத்தில் கொழும்புத் துறைமுக நகர வழக்கு மற்றும் பாராளுமன்றத்தினைக் கலைத்த வழக்கு (2018) ஆகியவை, மக்களின் இறைமையினைச் சீர்குலைத்துக் கீழறுக்கும் "இறைமைமிக்க" அல்லது நிறைவேற்று அதிகாரமிக்க வேறு அரச அதிகாரங்கள் இருக்க முடியாது என்பதை ஏற்றுக்கொண்டுள்ளன. "பொது நன்மைக்காகப் பயன்படுத்தப்படலாம்

என்பதற்காக மட்டுமே அதிகாரத்தினை வைத்திருக்கும் அரச அதிகார அமைப்புக்கு கட்டற்ற தற்றுணிபு முற்றுமுழுவதும் பொருத்தமற்றதாகும்'' என *த சில்வா எதிர் அத்துகோரல* வழக்கில் (1993) நீதிபதி *மார்க் பெர்னான்டோ* வழங்கிய அரச அதிகாரத்தின் பகுப்பாய்வின் ஏற்றுக்கொள்ளக்கூடிய தன்மையினை நீதிமன்றங்கள் அங்கீகரித்துள்ளன.[42] ஜனாதிபதியின் அதிகாரங்கள் பிரயோகிக்கப்படுவதற்கும் இந்த வார்த்தைகள் வழிகாட்டலை வழங்கவேண்டும். நாட்டின் உச்ச நீதிமன்றமான உயர் நீதிமன்றத்தினால் கொலைக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டமையினைப் புறக்கணித்து சர்ச்சைக்குரிய அரசியல்வாதி ஒருவர் பொசன் பூரணை தினத்தில், கருணைமிக்க செயலாக, மன்னிப்புக்கான ஜனாதிபதியின் அதிகாரத்தின் சர்ச்சைக்குரிய பிரயோகத்தினால் சுதந்திரமாக விடுதலை பெற்று வெளியேறுவது இயலுமாக்கப்பட்டது. மன்னிப்புக்கான அதிகாரம் எல்லையற்ற தற்றுணிபு அல்ல என்றும் அது மன்னிப்புக்களின் அரசியலமைப்பு ரீதியான ஏற்பாடுகளுக்குக் கட்டாயம் இயைபுறவேண்டும் என்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வெளியிட்ட பகிரங்க அறிக்கையில் வலியுறுத்தியிருந்தது.[43] எமது தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் குற்றவியல் தவறுகளுக்காக நீதிமன்றக் குற்றத்தீர்ப்புக்கள் இருக்கையில் அரசிலயமைப்பின் அளவுகோல்களுக்கு வெளியே ஜனாதிபதி மன்னிப்பு வழங்க முடியாது என்பதால் ஜனாதிபதியின் சில மன்னிப்புக்கள் தொடர்பாக நீதிமன்றங்களில் வழக்காடல் இருக்கின்றது. கொழும்புத் துறைமுக நகர நிர்வாகத்தில் இது தெளிவாகப் புரிந்துகொள்ளப்படவேண்டும்.

2021 பொசன் பூரணை தினத்தில் கூறியது போன்று, ஆளுகையில் *''தச ரஜ தர்மத்துக்கு''* தாம் அடிபணிவது பற்றி ஜனாதிபதி பேசுகையில், ஜனாதிபதி ஒரு மன்னரல்ல என்பதையும் மக்களிடம் இறைமையினை வழங்கும் சட்டம் மற்றும் எழுத்திலான அரசியலமைப்பு வழங்கும் அவரின் அதிகாரத்தினைப் பிரயோகிப்பதன் மூலமே ஆளுகின்றார் என்பதையும் மக்களும் ஆளுகையின் ஏனைய அங்கங்களான பாராளுமன்றமும் நீதிமன்றங்களும் கட்டாயம் நினைவுபடுத்தவேண்டும். 20 ஆவது திருத்தத்தினால் விரிவாக்கப்பட்ட ஜனாதிபதியின் அதிகாரம் என்னும் கருத்தியலை விடத் தனித்துவமான மக்களின் இறைமை என்னும் கருத்தியலே கொழும்புத் துறைமுக நகரத்தினை ஆணைக்குழு நிர்வகித்து ஆளுகை செய்வதற்கு வழிகாட்டவேண்டும்.

இன்று மக்களின் மனங்களில் ''இறைமை'' என்ற சொற்பதம் தொடர்பாகக் குழப்பம் காணப்படுகின்றது. ஜனாதிபதி என்பவர் ஆளுகையில் மன்னனின் போர்வை போர்த்தியவர் என பௌத்த துறவிகளும் அரசியல்வாதிகளும் அடிக்கடி குறிப்பிடுகின்றனர். இதேபோன்று, இலங்கை அரசின் இறைமை மக்களின் இறைமையுடன் குழப்பிக்கொள்ளப்பட்டுள்ளது. மக்களின் இறைமை என்பது இலங்கை தேச அரசின் இறைமையில் தலையிட அனுமதி வழங்குகின்ற மேற்கத்தேய சித்தாந்தம் என மக்களின் மனித உரிமைகள் திறனாய்வில் ஆட்சேபிக்கப்படுகின்றது.

ஆயினும், எமது அரசியலமைப்பின் அடிப்படை மனித உரிமைகள் பற்றிய அத்தியாயத்திலும் அவற்றின் சித்தாந்தங்கள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதான சர்வதேச மனித உரிமைகள் பொருத்தனைகள், அரச அதிகாரத் துஷ்பிரயோகத்தின் வரலாற்று ரீதியான அனுபவத்தில் இருந்து கட்டியெழுப்பப்பட்ட விதிகளாகும். இதனால்தான், இலங்கை போன்ற தேச அரசுகள் அவற்றின் தேசிய அரசியலமைப்புக்களில் இந்த விதிகளையும் நியமங்களையும் உள்வாங்கி, பல தசாப்தங்களாக பல்தரப்பு மனித உரிமைகள் பொருத்தனைகளை ஏற்று அங்கீகரித்து இந்த அணுகுமுறையினை வலுப்படுத்திவருகின்றன. சர்வதேச மனித உரிமைகள் பொருத்தனைகளை ஏற்று அங்கீகரிப்பதும் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகள் (SDG) போன்ற உலகளாவிய கொள்கைகளை ஏற்றுக்கொள்வதும் அரச இறைமையினை இலங்கை அரசு *தன்னார்வத்துடன்* குறைத்துக்கொள்வதன் பிரதிபலிப்பாகும் என்பதைச் சட்டத்துறைத் தலைமையதிபதி போன்ற அரச சட்ட ஆலோசகர் உள்ளிட்ட பாராளுமன்றம், நீதிமன்றம் மற்றும் நிறைவேற்று அதிகாரம் ஆகியவை அறிந்திருக்கவேண்டும். இந்த விதிகளை உள்நாட்டு அரசியலமைப்பு, சட்டங்கள், கொள்கைகள் மற்றும் ஆளுகை ஆகியவற்றில் ஒத்திசைவிப்பதற்கான ஆர்வத்தின் வெளிப்பாடே இதுவாகும்.

இன்று நாம் சிலவேளைகளில் இலங்கையினை ''பலவீனமான'' அல்லது ''செயலிழந்த ஜனநாயகமாகக்'' கருதுகின்றோம். இருப்பினும் ஆளுகையின் இந்த வடிவினை நாம் பல தசாப்தங்களாகத் தக்கவைத்து வருகின்றோம். கொழும்புத் துறைமுக நகரம் தொடர்பான பொதுச் சர்ச்சை சிலவேளைகளில் கருத்திட்டமானது அதன் பிரதான பங்காளரான உலகின் வளர்ந்து வரும் வல்லரசான சீனாவின் வெளிநாட்டு ஆதிக்கத்தினை ஊக்குவிக்கும் என்ற கருத்தில்

மையம்கொண்டிருக்கின்றது. வெளிநாட்டுச் சக்தி ஒன்று "கைப்பற்றுவதால்" கொழும்புத் துறைமுக நகரத்தில் ஆணைக்குழுவினாலும் ஜனாதிபதியினாலும் புதியதும் வித்தியாசமானதுமான வகையிலான ஆளுகை ஒன்று நிறுவப்படும் என்றும் கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. இருப்பினும், வெளிநாட்டுச் செல்வாக்குக் காரணமாக இவ்வாறான கைப்பற்றலும் ஆளுகையின் நிலைமாற்றமும் இடம்பெற்றால், எமது காலனித்துவ வரலாற்றில் நடந்தது போல், அது ஆளுகையில் பதவி வகிக்கின்ற மக்களினதும் நிறுவனங்களினதும் தனிநபர்களினதும் உடந்தை மற்றும் செயலற்றதன்மையினால் ஏற்பட்டதாகவே இருக்கும்.

இறைமையுடைய மக்களின் நலனோம்புகைக்காக வகைப்பொறுப்புமிக்க ஆளுகைக்கு சாதகமான மாற்றத்தினையும் பங்களிப்பினையும் வழங்கவேண்டிய பொறுப்பினை அரச நிறுவனங்களிலும் பாராளுமன்றத்திலும் அரச துறையிலும், அல்லது நீதித் துறையிலும் உள்ள தனிநபர்கள் கொண்டுள்ளனர். பல தசாப்தங்களாக நாம் ஏற்றுக்கொண்டிருக்கும் ஜனநாயக ஆளுகையினை அரசியலமைப்பியல் மற்றும் அரச அதிகாரத்தின் வரம்பு ஆகியவற்றின் அடிப்படையில் வலுப்படுத்தி, கீழறுக்காது இருப்பதற்கான பொறுப்பினை அவர்கள் கொண்டுள்ளனர். எதேச்சதிகாரத்தின் அரசியல் நடைமுறை வழக்கினையும் ஆளுகையில் கட்டற்ற அரசியல் அதிகாரத்தினையும் அவர்களும் மக்களும் சிவில் சமூகமும் ஏற்புடையதாக ஆக்கக்கூடாது. ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மைக் கட்சி உள்ளிட்ட அரசியல்வாதிகள் "அதிகாரத்தினுள் வருவதில்லை." அவர்கள் பொதுப் பதவியினை வகிக்கின்றனர் என்பதுடன் இறைமையுள்ள மக்களுக்கு அவர்கள் வகைப்பொறுப்பினையும் கொண்டுள்ளனர். இந்தக் கண்ணோட்டத்துடனேயே நாம் செயற்பாட்டியத்தின் மூலமாகவும் ஈடுபாட்டின் மூலமாகவும் கொழும்புத் துறைமுக நகரத்தின் நிர்வாகத்தினையும் செயற்பாட்டினையும் கண்காணித்து ஆட்சேபிக்கவேண்டும்.

எமது நீதிமன்றங்களும் சட்டத்துறைத் தலைமையதிபதியும் அரசின் சட்ட அதிகாரிகளும், அடிப்படை உரிமைகள் மற்றும் ஆணைகள் தொடர்பான சட்டவியலின் அடிப்படையில் எழுத்திலான அரசியலமைப்பினையும் மக்களின் இறைமைக் கருத்தியலையும் பற்றிப்பிடித்து கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார வலயத்தினுள் நிர்வாக அதிகாரத்தின் வகைப்பொறுப்புமிக்க பிரயோகத்தினையும் பற்றிப்பிடிக்கவேண்டும். இதே உணர்வினையே பாராளுமன்றம் கலைக்கப்பட்ட வழக்கில் (2018) நீதிபதி நளின் பெரெரா வெளிப்படுத்தியிருந்தார். "எமது நீதிமன்ற முறைமையில் நிலைகுலையாதிருக்கும் பொதுமக்களின் நம்பிக்கை, அரசியல் சக்திகள் மற்றும் அரசியல் ஒப்பந்தங்கள் ஆகியவற்றில் இருந்து முற்றுமுழுவதும் உண்மையாகவும் தோற்றப்பாட்டிலும் விலகியிருத்தல் மூலம் செழுமைப்படுத்தப்படவேண்டும்" எனக் கனம் நீதிபதி குறிப்பிட்டிருந்தார்."[44] அரசியலமைப்பு ரீதியான ஜனநாயக ஆளுகை என்னும் இலட்சியத்திற்கான தொடர்ச்சியான கடப்பாடு இருந்தால் மாத்திரமே கொழும்புத் துறைமுக நகரத்தின் பொருளாதார வளர்ச்சியில் இருந்து எதிர்பார்க்கப்படும் பங்கிலாபங்களையும் நன்மைகளையும் இந்த நாட்டு மக்கள் அனுபவிப்பர். அரஹத் மஹிந்த முன்னொரு காலத்தில் மற்றொரு பொசன் பூரணை தினத்தில் தேவநம்பியதிஸ்ஸ மன்னனுக்குக் கூறியது போல், நிலம் மக்களுக்குச் சொந்தமானது, பொதுப் பதவியில் இருப்பவர்கள் அவர்களின் வளங்களின் தற்காலிகப் பாதுகாவலர்கள் மட்டுமே.

நீதிபதி ஏ. ஆர். பி. அமரசிங்க இதே கருத்தினை நன்கு பிரபலமான *புலங்குளம எதிர் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சுச் செயலாளர்* வழக்கில் (2000) சொல்வாண்மையுடன் மீளுரைத்துள்ளார். (2000). இறைமை என்பது மக்களிடம் உள்ளது. இது பிரிக்க முடியாதது என அரசியலமைப்புப் பிரகடனப்படுத்துகின்றது எனக் கனம் நீதிபதி குறிப்பிட்டார் (3 ஆம் உறுப்புரை). "பிரதிநிதித்துவ ஜனநாயகம் என்பதால், அந்தந்தக் காலப்பகுதிக்காகச் சில குறிப்பிட்ட செயற்பாடுகள் யாரிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அந்த நபர்களின் மூலமே மக்களின் அதிகாரம் பிரயோகிக்கப்படுகின்றது." பாராளுமன்றத்தினையும் ஜனாதிபதியினையும் நீதிமன்றங்களையும் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு, "அரசின் பாகங்கள் என்பவை மக்கள் அவர்களின் வளங்களின் பராமரிப்பினையும் பாதுகாப்பினையும் கடப்படுத்தி வழங்கியிருக்கும் பாதுகாவலர்களாகும்" எனக் கனம் நீதிபதி மேலும் குறிப்பிட்டார். இது அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள அரசாங்கத் திட்டத்தினை மட்டும் அளிக்காது எமது ஆட்சியாளர்களின் கடமைகளின் அறிவொளிமிக்க கருத்தியல்களையும் சேர்த்தே வழங்குகின்றது."[45]

மக்களின் மேற்பார்வை, குறிப்பாக ஊடகங்கள் மற்றும் சிவில் சமூகம் போன்றவற்றின் மேற்பார்வை, பாராளுமன்றம் போன்ற ஆளுகைத் தூண்களின்

மேற்பார்வை மற்றும் நீதிமுறை மீளாய்வுச் செயன்முறை ஆகியவை, மிகவும் சக்திவாய்ந்த கொழும்புத் துறைமுக நகரப் பொருளதார ஆணைக்குழுவும் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியும் பொதுநலனுக்காகச் செயற்படுகின்றனர் மற்றும் சட்டம் மற்றும் அரசியலமைப்புக்கு இயைபுற்று நடக்கின்றனர் என்பதை உறுதிப்படுத்த உதவலாம். வர்த்தமானி அறிவித்தல்கள் போன்ற ஜனாதிபதியின் உத்தரவுகளினால் கருத்து வெளிப்பாட்டுக்கான உரிமை மற்றும் தகவலறியும் உரிமை மற்றும் ஊடக சுதந்திரம் போன்றவை அகற்றப்படல், கொழும்புத் துறைமுக நகரத்தின் நிர்வாகத்தில் செயற்திறனற்ற மோசமான முகாமைத்துவத்திற்கும் ஊழலுக்கும் வகைப்பொறுப்பற்ற கலாசாரத்திற்கும் பங்களிப்பு வழங்கும்.

ஒத்திசைவிக்கின்ற இந்த ஜனநாயக விழுமியங்களில் இருந்து பொது நிறுவனத்தின் ஆளுகை இணைப்பற்றதாக்கப்படும் தொழிற்துறையாக அல்லது வேறு வகையான பொருளாதார வளர்ச்சியின் ஒரு நிலப்பரப்பாகத் துறைமுக நகரம் மாறுவதை நாம் அனைவரும் தடுக்கவேண்டும்.

## இறுதிக் குறிப்புகள்

1 குறிப்புக்கள்

Dr தயானந்த ஜயசூரிய PC. “Erosion of National Sovereignty and Free Trade Zones: A Storm in a Tea Cup”? Daily FT 11/5/21; Global Experience with Special Economic Zones with a Focus on China and Africa, World Bank, Feb 2015.

2 கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டமூலம், உயர் நீதிமன்றத்தின் விசேட தீர்மானம் SCSD 04/2021, 05/2021, 07/2021 to 23/2021; Statement of the Attorney-General published in Daily News of Colombo 27/4/21.

3 Ibid p.20.

4 Cited in R.K.W. Goonesekere, Select Laws on State Lands, சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை (2006) ப. 33.

5 Ibid ;p. 33-34, 117; Willes Principles of South African Law 7th ed. Juta and Co Ltd, Cape Town (1977) ப.163.

6 *புலங்குளம எதிர் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர்*, 2000 3 SLR, 343 p. 253 – 257.

7 S 75 மீதான பொருள்கோடல்கள் அட்டவணை III.

8 SCSD Nos 1 to 03/2012.

9 பார்க்க ஆர்.கே.டபிள்யு. குணசேகர, குறிப்பு 4 supra pp. 118 – 121, 372.

10 20 ஆவது திருத்தத்தின் 35 ஆம் உறுப்புரை மற்றும் ஏற்பாடுகள்.

11 *மொஹமட் பாயிஸ் எதிர் சட்டத்துறைத் தலைமையதிபதி* 1995 1 SLR 372; *உபாலிரத்ன எதிர் ரிக்கிரி பண்டா* 1995 1 SLR 165.

12 உலக வங்கி அறிக்கைக் குறிப்பு 1 supra.

13 S 5 (i).

14 உறுப்புரைகள் 3, 4, 35 (1) மற்றும் காப்புவாசகம்

15 *ஆர். சம்பந்தன் மற்றும் ஏனையோர் எதிர் சட்டத்துறைத் தலைமையதிபதி மற்றும் ஏனையோர்* SC FR Appl 351-361 (2018) H.N.J Perera CJ pp.31, 38, 69.

16 உறுப்புரைகள் 148, 154. அத்தியாயம் VII.

17 அட்டவணை III மற்றும் II.

18 S 7(1) (2), குறிப்பு 2 supra p. 25 – 26.

19 *எட்வட் சில்வா மற்றும் ஏனையோர் எதிர் வி ஷிராணி பண்டாரநாயக்க* 1997 1 SLR 92.

20 குறிப்பு 2, supra p. 27 – 31.

21 S 65 (1) (3), 75, மற்றும் அட்டவணை III, S 6 (1) (,) to (C) மற்றும் s 38.

22 S 65 (2), பகுதி III.

23 தொல்பொருட்கள் (1940) Part III S. 16 (1) (2), 18; S 48.

24 குறிப்பு 2 ஸரிசய p 37 – 40, 46 – 50.

25 S 26 (1) 27 (3) (4) (வெளிநாட்டு நேரடி முதலீடு) S 38, 39, 27 (5) (காணிக் குத்தகையுடன் பங்காண்மை), S 37 (1), (2) (3) அதிகாரமளிக்கப்பட்ட நபர்கள் இலங்கைப் பிரசை ஒருவருடன் அல்லது கொழும்புத் துறைமுக நகரத்திற்கு வெளியேயுள்ள குடியிருப்பாளர் ஒருவருடன் வியாபாரத்தில் ஈடுபடல்.

26 S 5 (j), அட்டவணை III, S 6 (1) (அ).

27 S 75; தீர்ப்பு pp 27-33, 37-39, 43-44, 45-46, 48; அரசியலமைப்பின் உறுப்புரைகள். 14(1) (எ), 14 (1) (ஏ).

28 குறிப்பு 11 supra.

29 அரசியலமைப்பின் உறுப்புரை 14 (1), விசேடமாக (அ) மற்றும் (V); S. Goonesekere, “Fundamental Rights and the Law of Delict” in Human Rights, Human Values and the Rule of Law, Essays in Honour of H.L. Silva PC ed. A.R.B. Amerasinghe and S.S. Wijeratne, Legal Aid Foundation and the Bar Association pp. 51 – 70.

30 ப. 26.

31 குறிப்பு 19 supra p. 95; anecdote. கிரிஷாந்த வெலியமுன PC, வழக்கில் சிரேஷ்ட சட்டத்தரணி ஆர்.கே.டபிள்யு. குணசேகரவின் கனிஷ்ட சட்டத்தரணி.

[32] S 68 (1) (c).

[33] S 69 காப்புவாசகம்.

[34] S 5 (c) (d).

[35] S 67.

[36] Note 2, p. 51.

[37] Ibid, p.52; Part IV, Priority in Hearing Legal Proceedings.

[38] உலக வங்கி அறிக்கைக் குறிப்பு 1 supra.

[39] அரசியலமைப்பு உறுப்புரை 33 (1) (எ) UN Guiding Principles on Business and Human Rights OHCHR (2011) HR/PUS/11/04.

[40] Daily News, 27/4/2021, Colombo.

[41] சட்டத்தின் அட்டவணைகள் II மற்றும் III

[42] *த சில்வா எதிர் அத்துகோரல*, 1993 1SLR 283 at p. 297; *ஆர். சம்பந்தன் மற்றும் ஏனையோர் எதிர் சட்டத்துறைத் தலைமையதிபதி மற்றும் ஏனையோர்இ* குறிப்பு 15 supra, p. 38, 69.

[43] அரசியலமைப்பின் உறுப்புரை. 34 (1) மற்றும் காப்புவாசகம் Bar Association Public Statement in Presidential Pardons 24 June 2021.

[44] குறிப்பு 15 supra p. 69.

[45] குறிப்பு 6 supra at p. 253 – 254.

*Supported by:*

diakonia

PEOPLE CHANGING THE WORLD

LAW & SOCIETY TRUST

**சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை**

இல. 03, கின்சி டெரஸ்,
கொழும்பு 00800.
இலங்கை.

தொலைபேசி : +94 11 2691228/2684845/2684853
Email : lstadmin@sltnet.lk